# ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

## வருடாந்த அறிக்கை

## 2017

## பல்கலைக்கழகத்தின் சின்னம்

பல்கலைக்கழகச் சின்னமானது மஞ்சள் நிற பின்னணியினைக் கொண்ட, பரிதிகள் நெருக்கமாக உள்ள மூன்று ஒருமைய வட்டங்களைக் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது. அதனுள் உள்ள ஒருமைய சிறிய வட்டத்தினுள் முழுவதும் விரிந்த தாமரை மலரின் *(நெலும்போ நியுசிபேரா)* இதழ்கள் ஒன்றின் கீழ் மற்றயது அமையும் வண்ணம் இரு அடுக்குகளைக் கொண்டதாக பரந்துள்ளன. வட்டத்தின் மத்தியில் காணப்படும் இரண்டு ஒருமைய வட்டத்தினுள் அழகான ஆணகங்களால் சூழப்பட்ட ஒரு தொட்டி காணப்படுகின்றது. வெளி வட்டத் தொகுதிக்கும் தாமரைக்கும் இடையே உள்ள வளையத்தின் மேல் அரைப்பகுதியில் பல்கலைக்கழக பல்லவியும் அதன் கீழ் அரைப்பகுதியில் பல்கலைக்கழகத்தின் நாமமும் காணப்படுகின்றன. இவை இரண்டும் சிங்கள எழுத்துக்களால் எழுதப்பட்டுள்ளன. பல்லவியானது, பண்டைய பௌத்த நூல் ஒன்றிலிருந்து பெறப்பட்டது. அது,

***விஜ்ஜா உப்படாடம் செத்தா***

என்பதாக அமைந்துள்ளது.

(எல்லா செல்வங்களை விடவும் அறிவு மேலானது)

## பல்கலைக்கழகத்தின் நோக்கு

*கல்வியினூடாக வாழ்வை செழிப்பாக்குதல்*

## பல்கலைக்கழகத்தின் பணிக்கூற்று

***எமது கல்விப் பாரம்பரியங்களினூடாக அபிவிருத்தியடைந்த உலகளாவிய ரீதியில் போட்டிமிக்க பிரஜைகளை நிலைபேண் எதிர்காலத்திற்காக உருவாக்குதல் மற்றும் கலாசார மரபுரிமைகள், அறிவு என்பவற்றினூடாக ஆத்மார்த்த உணர்வை ஏற்படுத்தல்***

## உபவேந்தரின் வாழ்த்துச் செய்தி



## அறிமுகம்

2017 ஆம் ஆண்டு ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திற்கு மறக்க முடியாத ஒரு வருடமாகும். பல்கலைக்கழகமானது அதன் உள்ளகக் கட்டமைப்பு, ஆய்வு, மாணவர்களினதும் கல்வியியலாளர்களினதும் அநுபவம் என்பவற்றை விருத்தி செய்தது. 2018 மற்றும் அதனைத் தெடர்ந்துவரும் காலப்பகுதியில் மேற்கொள்ளப்படவிருக்கும் அநேக விடயங்களுக்கு அடித்தளம் இட்ட அதேவேளை, பல மைல் கற்களை பல்கலைக்கழகம் பூர்த்திசெய்துள்ளது.

பல்கலைக்கழகம் அதன் உள்ளகக் கட்டமைப்பு அபிவிருத்தியை 2016 ஆம் ஆண்டு தொடக்கம் மேற்கொண்டது. "சரசவி மெதுர" விடுதித்திட்டத்தை அமுல்படுத்துவதற்கான அடிக்கல் இடப்பட்டது. மேலும் புதிய இரு பீடங்களை ஆரம்பிப்பதற்கான அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டன. இணை சுகாதார விஞ்ஞான பீடம் மற்றும் நில அளவையியல் பீடம் ஆகிய இரண்டையும் 2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பூர்த்திசெய்வதற்கு திட்டமிடப்பட்டன.

தொடர்ந்து வரும் பக்கங்களுக்கு ஒரு ஆதாரமாக அமையும் வகையில், பல்கலைக்கழகானது 1873 ஆம் ஆண்டு அதன் தொடக்கம் முதல் வணக்கத்திற்குரிய ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கள தேரர் அவர்களின் வழிகாட்டல் மற்றும் தலைமைத்துவத்தின் கீழ் ஒரு நீண்ட பயணத்தை மேற்கொண்டது. தற்போதைய பல்கலைக்கழகம் அக்காலத்தில் காணப்பட்ட இரு பௌத்த கற்கை நிலையங்களுள் ஒன்று, பிரிவெனாவாக மாற்றப்பட்டதன் விளைவாகும்.

1958 ஆம் ஆண்டு 4 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் கீழ், 1959 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 16 ஆம் திகதி வித்தியோதயா பிரிவெனா, வித்தியோதயா பல்கலைக்கழகமாக மாற்றம் பெற்றது. வணக்கத்திற்குரிய ஸ்ரீ சுமங்கள தேரர் அவர்கள் வித்யோதயா பிரிவெனாவை மாளிகாகந்தவில் நிறுவினார். அது ஓர் உயர்கல்வி நிலையமாக ஏற்கனவே வளர்ச்சியடைந்து காணப்பட்டமையால் 1961 ஆம் தற்போதைய இடத்திற்கு ஒரு பல்கலைக்கழகமாக மாற்றப்பட்டது. வித்யோதயா பல்கலைக்கழகம் பின்னர் இலங்கைப் பல்கலைகழகங்களின் சட்ட இலக்கம் 1 இன் கீழ் வித்யோதயா வளாகமாக மாற்றம் பெற்றது. இந்த சட்டமானது எல்லா பல்கலைக்கழகங்களும் ஒருங்கிணைக்கப்பட்டு இலங்கைப் பல்கலைக்கழகத்தின் வளாகங்களாக ஒன்றிணைக்கப்பட வேண்டும் என கட்டாயப்படுத்தியது. இந்தக் கட்டளை 1978 ஆம் ஆண்டு மறுசீரமைக்கப்பட்டது. வித்யோதயா வளாகம் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழம் என 1978 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டதின் கீழ் மாற்றப்பட்டது.

## உபவேந்தர்கள்

கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு இணங்க, அதன் ஆரம்பம் முதல் பல்கலைக்கழகத்திற்கு ஏழு (07) வேந்தர்களும் இருபத்து நான்கு (24) உபவேந்தர்களும் இலங்கை ஜனநாயகக் குடியரசின் ஜனாதிபதி அவர்களினால் நியமனம் பெற்றுள்ளனர்.

| வேந்தர் | காலப்பகுதி | உபவேந்தர் | காலப்பகுதி |
|---|---|---|---|
| **சேர் ஒலிவ்வர் குணதிலக (ஆளுநர் - நிறைவேற்று அதிகாரி)** | 1959 – 1962 | வண.வெலிவிடிய சோரத நாயக்க தேரர் | ஜனவரி. 1959 – ஜுலை 1963 |
| **வண. வில்லியம் கொபல்லாவ (ஆளுநர் -நிறைவேற்று அதிகாரி)** | 1962 - 1977 | வண.பலண்ணறுவே ஸ்ரீ விமலதம்ம நாயக்க தேரர் | ஆகஸ். 1963 – செப். 1966 |
| | | வண.பரவெகர வஜிரஞ்ஞன நாயக்க தேரர் | மார்ச். 1966 – செப். 1966 |
| | | வண.பலங்கொட ஆனந்த மைத்திரிய நாயக்க தேரர் | ஒக்டோ. 1966 – நவம். 1966 |
| | | வண.கலாநிதி வல்பொல ராஹுல தேரர் | நவம். 1966 – ஜுலை 1969 |
| | | பேரா. டி.ஈ. ஹெட்டியாரச்சி | ஆகஸ். 1969 – ஆகஸ். 1970 |
| | | பேரா. ஹேமா எல்லாவல (உபவேந்தர் / வளாகத் தலைவர் | செப். 1970 – செப். 1972 |
| | | பேரா.வீ.கே. சமரநாயக்க (வளாகத் தலைவர்) | ஒக்டோ. 1972 – செப். 1973 |
| | | பேரா.எம்.டி.சி.தர்மவர்தண | மார்ச். 1974 – ஜன. 1975 |
| | | பேரா.டப்.எம்.கே.விஜயதுங்க | பெப். 1975 – மே. 1977 |
| **எச்.ஈ.ஜே.ஆர்.ஜயவர்தன தலைவர்(நிறைவேற்று அதிகாரி)** | 1978 –1979 | பேரா.கே. டியுலி டி சில்வா | ஜுன். 1977 – ஜுலை 1978 |
| **கலாநிதி.ஈ.டப்.அதிகாரம்** | 01-01-1979 முதல் 31-12-1983 | பேரா.கே. ஜினதாச பெரேரா (வளாகத் தலைவர் - உபவேந்தர் | ஜன. 1979 – டிசம். 1981 |
| | | பேரா.டி.பீ.கன்கஹஆராச்சி | ஜன. 1982 – ஜன. 1983 |
| **கலாநிதி.திருமதி விமலா டி** | 01-02-1984 | கலாநிதி. கருணாசேன | 07 பெப். 1983 |

| | | | |
|---|---|---|---|
| **சில்வா** | முதல் 31-01-1989 | கொடித்துவக்கு | – 12 மார்ச் 1984 |
| **கலாநிதி.திருமதி விமலா டி சில்வா** | 01-02-1989 முதல் 31-01-1994 | கலாநிதி. கருணாசேன கொடித்துவக்கு | 13 மார்ச். 1984- 7 ஏப்ரல் 1988 |
| **கலாநிதி.திருமதி விமலா டி சில்வா** | 01-02-1994 முதல் 31-01-1999 | பேரா.எல்.பி.என்.பெரேரா | ஏப்ரல் 1988 – செப். 1990 |
| **கலாநிதி.திருமதி விமலா டி சில்வா** | 01-02-1999 முதல் 31-01-2004 (2001 ஆம் ஆண்டு 31 ஆம் திகதி பதவி விலகல்) | பேரா.எஸ்.பி.ஹெட்டிஆரச்சி | ஒக்டோ. 1990 ஒக்டோ. 1992 |
| | | திரு.டப்.பி.தொரகும்புர | நவம். 1992 – ஒக்டோ. 1995 |
| | | பேரா.பி.வில்சன் | நவம். 1995- ஏப்ரல் 1999 |
| • | | பேரா.திஸ்ஸ காரியவசம் பதில் உபவேந்தர் | மே 1999 |
| **வண.மெதகொட சமணதிஸ்ஸ தேரர்** | 22-03-2002 முதல் 21-03-2007 | பேரா. ஜே.டப். விக்கிரமசிங்க | ஜூன் 1999- மே 2002 |
| | | பேரா.திஸ்ஸ காரியவசம் பதில் உபவேந்தர் | ஜூன் 2002 – ஒக்டோ. 2002 |
| | | கலாநிதி.டி.எஸ். எபிடவத்த | ஒக்டோ 2002 – டிசம். 2003 |
| **வண. பேரா.பெல்லன்வெல விமலரத்ன தேரர்** | 19-07-2005 முதல் 18-07-2010 | பேரா.சந்திமா விஜேபண்டார | 27 ஜூலை 2004 –ஒக்டோ. 2005 |
| **பேரா.திஸ்ஸ காரியவசம் பதில் உபவேந்தர்** | 19-07-2010 முதல் 18-07-2015 | பேரா.நாரத வர்ணசூரிய | நவம். 2005-30 செப். 2008 |
| | | கலாநிதி.என்.எல்.ஏ. கருணாரத்ன பதில் உபவேந்தர் | ஒக்டோ. 2008 – நவம். 15, 2008 |

| | | |
|---|---|---|
| | கலாநிதி.என்.எல்.ஏ. கருணாரத்ன | 16 நவம். 2008 – நவம். 15 2011 |
| | கலாநிதி.என்.எல்.ஏ. கருணாரத்ன | 16 நவம். 2011 – நவம். 15, 2014 |
| | பேரா.சம்பத் அமரதுங்க | 17 நவம். 2014 நவம் .2017 |
| | பேரா.சம்பத் அமரதுங்க | 16 நவம்.2017- முதல் இன்று வரை |

(அட்டவணை – 1)

**சிறப்பம்சங்கள் - 2017**




தகவல் மூலம்: புள்ளிவிபர அறிக்கை 2017-2021, பல்கலைக்கழக புள்ளிவிபரவியலாளர்

ஆண்டு: 31 டிசம்பர் 2017 வரை (உரு - 1)

## பல்கலைக்கழகத் தொகுப்பும் புதிய கட்டமைப்பும்

2017 ஆம் ஆண்டளவில் பல்கலைக்கழகமானது 7 பீடங்களின் தொகுப்பாக காணப்படுகின்றது. அவை மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம், பிரயோக விஞ்ஞான பீடம், முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வர்த்தக பீடம், மருத்துவ விஞ்ஞான பீடம், பட்டப் பின் கற்கைகள் பீடம், தொழிநுட்பவியல் பீடம், பொறியியற் பீடம் என்பனவாகும். 2021 ஆம் ஆண்டளவில் முடிவிற்கு வரும் வகையில் புதிய இரண்டு பீடங்களை ஆரம்பிப்பதற்கான அளவீடுகள் இவ்வருடம் மேற்கொள்ளப்பட்டன. அவை இணை சுகாதார விஞ்ஞான பீடம் மற்றும் நில அளவையியல் பீடம் என்பனவாகும்.

இதற்கு மேலதிகமாக பல்கலைக்கழகமானது கொழும்பு 08 இல் அமைந்துள்ள இலங்கை முகாமைத்துவ பட்டப் பின் கற்கைகள் நிலையத்துடன் (PIM) இணைந்துள்ளது. இந்த நிறுவனமானது, "பல்வேறுபட்ட முகாமைத்துவம் மற்றும் நிர்வாகக் கற்கைகளின் பல்வேறு பிரிவுகளில் பட்டப்பின்படிப்பு அறிவுரைகள், பயிற்சி, ஆய்வு, மற்றும் அபிவிருத்தி என்பவற்றை வழங்குவதினூடாக இலங்கை முகாமைத்துவத்தில் உயர் கல்வி மற்றும் தொழில்தகைமை" என்னும் நோக்கத்துடன் பங்குச்சுயாதீனமாக செயற்படும் ஒன்றாகும்.

2016 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட ஆய்வு ஆலோசனைச் சபையானது பதினைந்து (15) ஆய்வு நிலையங்களை உருவாக்கியதோடு எதிர்வரும் வருடங்களில் அதனை பதினேழு (17) ஆக விருத்தி செய்வதற்கும் எதிர்பார்த்துள்ளது.

பல்கலைக்கழகமானது பால்நிலை ஒப்புரவுக்கும் சமத்துவத்திற்குமான நிலையம், மதிப்பீட்டுக்கான நிலையம் என்பவற்றை காலத்தின் தேவை கருதி உருவாக்கியது. இவை தற்போது ஆரம்பிக்கப்பட்டு பல்கலைக்கழகத்தினதும் நாட்டினதும் முன்னேற்றத்தின் பொருட்டு செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

ஸ்ரீ ஜயவரதனபுர பல்கலைக்கழகமானது பல்கலைக்கழகத்தின் விளையாட்டுப் பிரிவை விருத்தி செய்யும் நோக்குடன் வெற்றிகரமாக செயற்பட்டு வருகின்றது. டிசம்பர் மாதம் 7 ஆம் திகதி பிரயோக விஞ்ஞான பீடத்தின் கீழ் விளையாட்டு விஞ்ஞானத்துறை ஆரம்பிக்கப்பட்டது.

சுருக்கம்

- 17.1.2017 – ஜயவர்தன புர பல்கலைக்கழகத்தின் தொழிநுட்ப பீட திறப்பு விழா
- பால்நிலை ஒப்புரவுக்கும் சமத்துவத்துக்குமான நிலையத்தின் ஆரம்ப நிகழ்வு
- 29.05.2017 – சரசவிமெதுர விடுதித் திட்டத்தின் அடிக்கல் நாட்டும் வைபவம் பிடிபான வளாகத்தில் இடம்பெற்றது.
- 14.06.2017 – கல்வியியலாளர்களுக்குரிய சிரேஷ்ட பொது அறை புதிய கட்டிட திறப்பு விழா
- 31.07.2017 – பொறியியற் பீடத்தை ஆரம்பிப்பதற்கான 10 ஏக்கர் காணியை மத்தகொடவில் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் பெற்றுக் கொண்டது.
- 15.11.2017 – மதிப்பீட்டுக்கான நிலையத்தின் திறப்பு விழா
- 07.12.2017 – விளையாட்டு விஞ்ஞானத்துறையின் திறப்பு விழா

பல்கலைக்கழக மாணவர்கள் தமது திறமைகளை சிறப்பாக வெளிப்படுத்துவதற்குத் தேவையான வசதிகளைப் பெற்றுக் கொடுக்கும் நோக்குடன் பல்கலைக்கழகமானது அநேக உள்ளகக் கட்டமைப்புத் திட்டங்களை வழங்கியது. பல்கலைக்கழகத்தினால் பிடிபான என்னும் இடத்தில் பெறப்பட்ட காணியில் சரசவி மெதுர விடுத்தித் திட்டத்துக்கான அடிக்கல் இடப்பட்டதன் மூலம் விடுதி வாய்ப்புக்களை 53 வீதம் வரை அதிகரிக்கக் கூடியதாக இருக்கும். இவ்வருடத்தில் மதிப்பீட்டின் படி விடுதி வாய்ப்புகளானது, 2016 ஆம் ஆண்டு 3432 ஆகக் காணப்பட்டு இவ்வருடத்துக்கு 5250 ஆக பதிவானது.

இதற்கு மேலதிகமாக பல்கலைக்கழகத்தின் சுகாதார நிலையத்திற்கு முன்னால் உள்ள பிரதான, மிகப் பெரிய சிற்றுண்டிச் சாலை புனருத்தாபனம் செய்யப்படுகின்றது. சிற்றுண்டிச்சாலை பூரணப்படுத்தப்பட்டதன் பின்னர் அதில் 600 மாணவர்களை இருத்தக்கூடியதாக இருக்கும்.

இப்பல்கலைக்கழகமும் உயர் கல்வி அமைச்சினால் நிதியிடப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட 'உலகத்தர பல்கலைக்கழகத் திட்டத்தின்' ஒரு பகுதியாகும். நிறுவனத்தின் தரத்தினை அபிவிருத்தி செய்வதற்கான முன்னேற்ற படிகள் குறித்து இத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஆய்வும் அபிவிருத்தியும்

2016 ஆம் ஆண்டு 'ஆய்வு ஆலோசனைச் சபையினை' ஆரம்பித்ததன் மூலம், தற்போதைய உபவேந்தர் சம்பத் அமரதுங்க அவர்களின் தலைமைத்துவத்தின் கீழ் பல்கலைக்கழகமானது அதன் கவனத்தை ஆய்வு மற்றும் அபிவிருத்தியில் செலுத்தியது. தற்போது பல்கலைக்கழகமாகது 16 இற்கும் அதிகமான ஆய்வு நிலையங்களைக் கொண்டுள்ளது.

1. டெங்கு ஆய்வுக்கான நிலையம்
2. சிறுநீரகம் ஆய்வுக்கான நிலையம்
3. புற்றுநோய் ஆய்வுக்கான நிலையம்
4. உயர் ஆய்வு ஆவணங்களுக்கான நிலையம் (நனோ தொழிநுட்பம்)
5. நீரின் தரம் மற்றும் நன்னீர் ஆய்வு மையம்
6. சமூக விஞ்ஞானம் மற்றும் பல்திறன் ஆய்வு நிலையம்
7. முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வர்த்தக மையம்
8. வனவியல் மற்றும் சூழலியல் ஆய்வு மையம்
9. உயிர் தொழிநுட்பவியல் ஆய்வு மையம்
10. உயிர் தொழிநுட்பவியல் மற்றும் நரம்பியல் விஞ்ஞானத்திற்கான உள்ளக நிறுவனம்
11. நுண்ணறிவு முறைமை கண்டுபிடிப்பு நிலையம்
12. நிலைபேராண்மைக்கான நிலையம்
13. அப்பிள் ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிலையம்
14. காணி முகாமை மற்றும் மதிப்பீடு ஆய்வு தொழில்தகைமை அபிவிருத்தி மையம் (EMVRPC)
15. முதலுதவிக்கான தேசிய ஆய்வு மையம்
16. அரசியல் மற்றும் பொதுக் கொள்கைகள் தொடர்பான ஆய்வு மையம்
17. தாவரப் பொருட்கள் மற்றும் ஆயுர்வேத உற்பத்தி தொடர்பான ஆய்வு மையம்

ஆய்வு மையங்கள் அதன் கட்டமைப்பினால் விருத்தியாகியுள்ளன. ஆய்வுக்கும் அபிவிருத்திக்கு உதவி செய்யும் நோக்குடன் ஆய்வினை ஊக்கப்படுத்துவதற்காக பல்கலைக்கழகத்திற்குள் ஒரு திட்டத் தொடர் ஒன்றானது அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. ஆய்வு

ஆலோசனைச் சபை திறைசேரியிடமிருந்தும் ஏனைய நிதி நிறுவனங்களின் உதவியுடனும் ரூபா 400 பில்லியன் பெறுமதியான நிதியத்துடன் காணப்படுகின்றது.

இதற்கு மேலதிகமாக துறைகளுக்கும் ஆய்வு மையங்களுக்கும் துறைத் தலைவர்களுக்கு ஆய்வினை அபிவிருத்தி செய்வதற்கு உதவிசெய்வதற்காக ஆய்வு உதவியளர்களையும் வழங்கியுள்ளது. இந்த வருட மதிப்பீட்டின் படி மாணவர்களுக்கு மத்தியில் ஆய்வுக் கலாசாரத்தை விருத்தி செய்யும் நோக்குடன் பல மாநாட்டுத் தொடர்கள் இடம்பெற்றன. மானுடவியல் பீடமானது வித்யோதயா பட்டப்படிப்பு மாணவர்களின் ஆய்வு தினம் 2017 என்னும் ஆய்வுத்தொடரை முன்னெடுத்ததன் மூலம் அத்தகைய முயற்சிகளுக்கு பங்களித்தது. அவ்வாறே நிதியியல் துறையும் இத்தகைய தேவைகளை நிறைவு செய்யும் வகையில் மாநாடுகளை நடாத்தியது.
ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகமானது பல்கலைக்கழக ஆய்வு கலாசாரத்திற்கு உதவி செய்யும் பல்வேறு வருடாந்த மாநாடுகள், தொடர்கள் என்பவற்றை நடாத்தியது.

**ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மாநாடுகள் மற்றும் இலக்கிய விருந்துகள்**

---

IRCHSS – மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானம் தொடர்பான சர்வதேச ஆய்வு மாநாடு
ICBM – வியாபார முகாமை தொடர்பான சர்வதேச மாநாடு
வனவியல் மற்றும் சுற்றாடல் தொடர்பான மாநாடு
ISPST – பல்பகுதிய விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்பம் தொடர்பான சர்வதேச மாநாடு
வைத்திய விஞ்ஞானத் தொடர்கள்
பௌத்த கற்கைகள் தொடர்பான மாநாடுகள்
ICTPA - மாநாடு – கணக்கியல்
ICMA – பல்திறன் அணுகுமுறைகள் தொடர்பான சர்வதேச மாநாடு

இவ்வருட மதிப்பீட்டின் படி பல்கலைக்கழகமானது ஆய்வுகளை முன்னெடுக்க விரும்பும் ஆய்வாளர்களுக்கு அநேக ஆய்வு விருதுகள், புலமைப்பரிசில் திட்டங்கள் என்பவற்றை முன்னெடுத்தது.

இதற்கு மேலதிகமாக பல்கலைக்கழகமானது ஆய்வு முன்னெடுப்புகளுக்கு உதவி செய்வதற்காக நூலகத்தை கணினிமயப்படுத்துவதன் மூலம் 'விஞ்ஞான வலைப்பின்னல்' என்னும் ஒரு நிகழ்ச்சியினைத் தொடங்கியது.

**ஆய்வு அபிவிருத்தி முக்கிய நிகழ்வுகள்**

2017/01/31 - ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகக் கல்வியியலாளர்கள் "Support Scheme for Supervision of Research Degrees (SUSRED)" என்னும் விருதினை 2016 ஆம் ஆண்டு பெற்றுக் கொண்டனர்.

முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வர்த்தக பீடத்தின் ஆய்வுத் தொடர், ஆய்வாளர்களுக்கும் இளம் கல்வியியலாளர்களுக்கும் ஆய்வு தொடர்பான தேடல்களையும் அடிப்படைகளையும் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் இடம்பெற்றது.

2017.3.30 ஆம் திகதி இரசாயனவியல் துறை இலங்கை தேசிய ஆய்வு மையத்திடமிருந்து ரூபா 3.2 மில்லியன் பெறுமதியான நிதியத்தைப் பெற்றுக் கொண்டது.

24, 25/05/2017- அன்று விஞ்ஞானத் தொடர் - 2017 "Building Bridges for Better Health" என்னும் தலைப்பின் கீழ் வைத்திய விஞ்ஞான பீட ஆய்வுக்குழு ஏற்பாடு செய்தது.

16, 17 08.2017 அன்று மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம் "Vidyodaya Undergraduate Research Day" ஒழுங்குசெய்திருந்தது. இதன் பொருட்டு இரண்டு சிறந்த ஆய்வுச் சுருக்கங்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

29/09/2017- அன்று வருடாந்த ஆய்வு விருதுகள் வழங்கும் நிகழ்வு கோல்டன் ரோஸ் ஹொட்டல், பொரலஸ்கமுவவில் இடம்பெற்றது.

24/11/2017- நிதியியல் துறையினால் ஒழுங்குசெய்யப்பட்ட, நிதியியல் தொடர்பான முதலாவது மாணவர்களின் மாநாடு முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வர்த்தக பீடத்தில் இடம்பெற்றது.

15/12/2017- ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக கலாசார மையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இரண்டாவது நாட்டாரியல் ஆய்வு மாநாடு இடம்பெற்றது.

(உரு 3)

## சர்வதேச மாநாடுகள்

2017 ஆம் ஆண்டு பல சர்வதேச மாநாடுகள் முன்னெடுக்கப்பட்டதோடு உள்நாட்டு ஊடகங்களின் மதிப்பும் கிடைத்தது. மாநாடுகள் கல்லியலாளர்களுக்கு அவர்களுடைய ஆய்வினை உலகத்திற்கு முன்னளிக்கை செய்வதற்கும் அதன் மூலம் உலகம் முழுவதும் உள்ள கல்வியியலாளர்களிடமிருந்து ஆழ்ந்த அறிவினைப் பெற்றுக் கொள்வதற்கும் சந்தர்ப்பஙகளைப் பெற்றுக் கொடுத்தது.

- 19.09.2017- பல்கலைக்கழகத்தின் டெங்கு ஆய்வு மையத்தினால் முன்னெடுக்கப்பட்ட வைரஸ் தொற்றுக்களை வெளிப்படுத்தும் ஆசிய பசுபிக் மாநாடு
- 10.10.2017 உலகமயக் கல்வி மற்றும் இலத்திரனியல் கற்றல் தொடர்பான மாநாடு – காரியாலய ஊழியர் அபிவிருத்தி மையத்தினால் ஒழுங்குசெய்யப்பட்டது.
- 10,11.11.2017 '22ஆவது சர்வதேச வனவியல் மற்றும் சுற்றாடல் மாநாடு – 2017'' வனவியல் மற்றும் சுற்றாடல் விஞ்ஞானத் துறையினால் ஒழுங்குசெய்யப்பட்டது.
- 23,24 11.2017 - இலங்கை சர்வதேச வியாபாரத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு, பாரம்பரிய மற்றும் நேய மருத்துவம் தொடர்பான சர்வதேச மாநாடு, உலக சுகார நிறுவனமும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகமும் சுகாதார அமைச்சுடன் இணைந்து மேற்கொண்ட கல்விக் கண்காட்சி மற்றும் வர்த்தகச் சந்தை,
- 06.12.2017 - 2017 ஆம் வருடத்திற்கான பாளி, மற்றும் பௌத்த கற்கைகள் சர்வதேச மாநாடு, மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீட பாளி மற்றும் பௌத்த கற்கைகள் துறையினால் ஒழுங்கமைக்கப்பட்டது.
- 08.12.2017 – வியாபார முகாமை தொடர்பான 14 ஆவது வருடாந்த சர்வதேச மாநாடு (ICBM) 2017

## வெளிநாட்டு ஒன்றிணைப்புகளும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களும்

பல்கலைக்கழகமானது அதன் 'உலகத் தரப் பல்கலைக்கழகத் திட்டத்தினை'' அமுல்படுத்தியதன் மூலம் சர்வதேச கல்விசார் உறுப்பினர்களினூடான தனது உறவை உறுதிப்படுத்திக் கொண்டது. இவ்வருட மதிப்பீட்டின் படி பல்கலைக்கழகமானது மொனாஸ் பல்கலைக்கழகம் - அவுஸ்திரேவியா, எடித் கோவான் பல்கலைக்கழகம் - மேற்கு அவுஸ்திரேலியா, கிரிஸ்டியன்சட் பல்கலைக்கழகம் - சுவீடன், செஜான் சூரன் பல்கலைக்கழகம் - சீனா, தேசிய சன் யெட் சன் பல்கலைக்கழகம் - தாய்வான் ஆகிய பல்கலைக்கழகங்களுடன் நட்புறவைப் பேணுகின்றது. இவையல்லாது இவ்வருட மதிப்பீட்டின் படி, பல்கலைக்கழகமானது இருபது (20) புரிந்துணர்வு ஒப்பந்தங்களிலும் கைச்சாத்திட்டது.

பல்கலைக்கழகமானது வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுடன் இணைந்து அதிகமான பயிற்சிப் பட்டறைகளை நடாத்தியது. அவ்வாறே, பல்வேறு சர்வதேசப் பல்கலைக்கழகங்களுடன், மாணவர் நலன், காரியாலய உழியர்களை மாற்றும் திட்டங்கள், இரட்டைப் பட்டப்படிப்புத் திட்டங்கள், கலாநிதிப் பட்டப்படிப்புத் திட்டங்கள், புலமைப்பரிசில் வாய்ப்புக்கள் என்பன தொடர்பிலும் பல ஒப்பந்தங்களைச் செய்துள்ளது.

இத்தகைய திட்டங்கள் தொடர்பான விளக்கம் கீழே வரைபு 4 இல் காட்டப்படுகின்றது.

## கூட்டங்களும் கலந்துரையாடல்களும்



- 2017.02.06 -
- சீனாவின் தொல்பொருள் மரபுரிமை முகாமையின் உறுப்பினர்கள் தனிப்பட்ட மரபுரிமை முகாமை தொடர்பான அறிவினைப் பெற்றுக்கொள்வதற்காக ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகத்தினை தரிசித்தனர்.
- 21.02.2017 - சுவீடன் கிறிஸ்யென்டட் பல்கலைக்கழகத்துடன் ஆசிரியர் மாணவர் மாற்றுத் திட்டம், மற்றும் தாதியியல் விஞ்ஞானமாணிப்பட்டம் தொடர்பான கலந்துரையாடல்
- ஜேர்மன் சார்பேர்க்கன் பல்கலைக்கழகம் - சார்பேர்க்கன் மதிப்பீட்டுக்கான நிலையத்துடன் இடம்பெற்ற உரையாடல்
- 2017.04.25. ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழத்துக்கும் சீனாவின் சிசான்சூரன் பல்கலைக்கழகத்திற்கும ிடையிலான கல்வி புரிந்துணர்வு கூட்டுத்தாபனத்தை வலுப்படுத்துவதன் நிலைமை தொடர்பிலான கலந்துரையாடல் ஒன்றின் பொருட்டு கல்விசார் ஊழியர்களை சந்திக்கும் பொருட்டு ஒரு பிரதிதிக்குழு சீனா பல்கலைக்கழத்திலிருந் து வருகை தந்தது.
- 2017.10.29 - ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகம் தனிப்பட்ட பொதுமக்கள் நட்புறவொன்றினை இலங்கை தேயிலை மற்றும் ஏலம் உற்பத்தி தொடர்பாக தென்கொரிய நாட்டுடன் ஆரம்பித்து வைத்தது

## பயிற்சிப் பட்டறைகள், கருத்தரங்குகள், விரிவுரைகள்



- 2017.02.20 - சுற்றாடல் முகாமை தொடர்பான ஒரு கருத்தரங்கு வடக்கிலிருந்தும் தெற்கிலிருந்தும் நல்ல பயிற்சி" என்னும் தலைப்பில் கனடா லேக்லேண்ட் கல்லூரியின் கல்வியலாளர்கள் மற்றும் வனவியல் மற்றும் சுற்றாடல் விஞ்ஞான முகாமைத்துறை இணைந்து ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றது.

- 2017.03.08 - "ஜேர்மனில் பட்டப்பின்படிப்பு கற்கைகள் தொடர்பான தகவல்கள் அமர்வு" ஜேர்மன் தூதரகத்தினால் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், பட்டப்பின்படிப்பு கற்கைகள்துறை, செனட் அறையில் எற்பாடு செய்யப்பட்டது..

- 2017.03.21 - பொருளாதார வட்டம் தொடர்பான விரிவுரை,
- நிலையான அபிவிருத்திக்கான குறிக்கோள்கள் குறித்து உலகத்தின் பொருளாதார அபிவிருத்திக்கான அணுகுமுறைகள் என்னும் தலைப்பில் ஜேர்மனியின் AMFM நிறுவனத்தின் கல்வியியலாளர் ஒருவரினால் முன்வைக்கப்பட்டது.

## புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்




- 2017.04.22 - ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் சீன தரப்பினருடன் கைச்சாத்திடப்பட்டது.
- மேற்கு அவுஸ்திரேலியாவின் எடிட் கொவான் பல்கலைக்கழகத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இது 2017.06.01 அன்று இடம்பெற்றது.
- 2017.06.09 - காரியாலய குழாம் அபிவிருத்தி நிறுவனம் மற்றும் கல்வி முகாமைக்கான சர்வதேச நிறுவனம் (TIIKM) இரண்டிற்குமிடையில் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

- 29.10.2017-உலக தரப் பல்கலைக்கழகத் திட்டம் பின்வரும் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. விஞ்ஞானத்தில் சகுரா சிஞ்ஞான மாற்றத் திட்டம் -ஆசியாவின் எதிர்காலத்தை வளப்படுத்தவும் ஆசிய நாடுகளின் இளைய தலைமுறையை வளப்படுத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டது. ஜப்பானும் இதனுடன் இணைந்து கொண்டது.
- ASIA உடன் இணைந்த நிகழ்ச்சித் திட்டம் - விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்பத்தில் ஒன்றிணைந்த ஆய்வு சமூகம் மற்றும் ஒலியியலை அபிவிருத்தி செய்தல், கண்டுபிடிப்புகளை ஊக்குவித்தல், கிழக்காசியாவில் சவால்களை தீர்த்து வைத்தல், பிராந்திய பொருளாதார அபிவிருத்திக்கு பங்களித்தல் -
- நிலையான அபிவிருத்திக்கான விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்ப ஆய்வின் நட்புறவு - உலகப் பிரசசினைகளை தீர்ப்பதற்கு நாடுகளை அபிவிருத்தி செய்வதற்கு விஞ்ஞானத்தையும் தொழிநுட்பத்தையும் பலப்படுத்துவதற்கு
- 30.11.2017- வர்த்தகம் மற்றும் முகாமைத்துவப் பீடத்தின் கணக்கியல் துறை மூன்றாவது வருடத்தின் இரண்டாம் முறையாகவும் அதன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை நீடித்தது. ஐக்கிய அமெரிக்காவின் UAAC உடன் இணைந்தது.
- ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகம் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றினை தாய்வானின் தேசிய சன் யெட் சென் பல்கலைக்கழத்துடன் கைச்சாத்திட்டது. இதன் மூலம் தாய்வானுடன் இணை ஆய்வுகளை முன்னெடுத்தது.

- 12.12.2017-ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழம் மற்றும் குனாக்சி சர்வதேச வியாபார வேலை வாய்ப்பு கல்லூரி இரண்டுக்குமிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாதிடப்பட்டது."
- அவுஸ்திரேலிய மொனாஸ் பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

## ஒன்றிணைக்கப்பட்ட ஸ்தாபனங்கள்

அரச தனியார் நட்புறவுகள் நாட்டின் அபிவிருத்திக்கு ஒரு திறவுகோலாக நீண்ட காலமாகப் பங்காற்றி வருகின்றது. பல்கலைக்கழகமானது ஓர் உறுதியான நட்புறவை இந்த இரண்டு தனியார் மற்றும் அரச நிறுவனங்களுடனும் பேணி வருகின்றது. இதன் காரணமாக இத்தகைய ஒன்றிணைப்புகள் மூலம் பல்கலைக்கழகம் பல நன்மைகளை அடைந்துள்ளது.

இவ்வருட மதிப்பீட்டின் படி, பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் இத்தகைய ஸ்தாபனத் தலைவர்களுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உதாரணமாக MAS Holdimg தனியார் நிறுனம், Stretchline தனியார் நிறுவனம், நிஹால் ஹெட்டியாரச்சி நிறுவனம், மற்றும் KRMG நிறுவனம் ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

இவையல்லாது பல்கலைக்கழகமானது அரச நிறுவனங்களுடனும் நட்புறவைக் கொண்டுள்ளது. உதாரணமாக நாட்டின் கல்வி நிலையை அபிவிருத்தி செயவதற்காக கல்வி அமைச்சு, விஞ்ஞான மற்றும் தொழிநுட்ப அமைச்சு என்பவற்றுடன் உறவைக் கொண்டுள்ளது. கீழே உரு 5 பல்கலைக்கழகத்துக்கும் ஏனைய நிறுவனங்களுக்குமிடையிலான தனியார் அரச நட்புறவைக் காட்டுகின்றது.

- 2017.09.22 - கல்வி அமைச்சுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இதன்போது, உயிர்த் தொழிநுட்பவியல் பாடத்திற்கான பாட இயல்கள் தயாரிக்கப்பட்ட அதேவேளை, ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறிகளும் மேற்கொள்ளப்பட்டன.
- 2017.10.06 - முகாமைத்துவ மற்றும் வர்த்தக பீடத்தின் வர்த்தகத்துறை மற்றும் கல்வி அமைச்சு என்பவற்றுக்கிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இதன்போது, க.பொ.த. உயர் தர பொருளியல் பாட ஆசிரியர்களுக்கு சான்றிதழ் பத்திர பாடநெறி ஒன்றினை நடாத்தவதினூடாக ஆசிரியர்களின் திறமைகளை மேம்படுத்துவதின் மூலம் கற்றல் கற்பித்தல் செயன்முறைகளை விருத்திசெய்தல்
- 2017.10.13 - இலங்கை - இந்திய ஆய்வு ஒப்பந்தம் விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்பவியல் அமைச்சு மற்றும், பிரயோக விஞ்ஞான பீடம் ஆகிய இரண்டிற்குமிடையில் கைச்சாத்திடப்பட்டது.

அரச




- 15.03.2017 - ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் மாஸ் ஹோல்டிங் பிரைவட் லிமிடட் மற்றும் பல்கலைக்கழகத்தின் உயர் ஆவண ஆய்வு நிலையத்துக்குமிடையே கைச்சாத்திடப்பட்டது.
- 05.05.2017 - ஸ்ட்ரட்ச் லைன் பிரைவட் லிமிடட் மற்றும் யாகிராள வனத்தில் ஆரம்பிக்கப்பட்ட வனவியல் மற்றும் சுற்றாடல் விஞ்ஞானத் துறையின் நிலைபேண் நிலையத்துக்குமிடையில் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.
- 06.06.2017 - பின்கோ இன்ஜினியரிங் பிரைவட் லிமிடட் மற்றும் பல்கலைக்கழகத்துக்கிடையில் ஒரு நம்பிக்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.
- 20.07.2017- கணக்கியல் துறை மற்றும் நிஹால் ஹெட்டியாரச்சி நிறுவனத்துக்குமிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது
- 23.10.2017- பிரயோக விஞ்ஞான பீட உயர் ஆவண ஆய்வு நிலையத்துக்கும் ஜோன் கீல்ஸ் ஹோல்டிங் நிறுவனத்துக்குமிடையே கைச்சாத்திடப்பட்டது.
- 12/10/2017 - இலங்கையில் முதன்முறையாக எவர் ப்லொக் சைன் ஆய்வுகூடத்தை நிறுவுவதற்கு ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் KRMG கபிடலுடன் நட்புறவை மேற்கொண்டது.

தனியார்



(உரு 5)

# மாணவர் விவகாரம் மற்றும் ஊழியர் நலன்புரி

இவ்வருட மதிப்பீட்டின் படி, மாணவர்களினுடைய திறமைகளை வெளிக் கொணர்வதற்கான பல்வேறு வாய்ப்புக்களை பல்கலைக்கழம் மாணவர்களுக்கு வழங்கியது. அவர்களின் முயற்சிகள் விருதுகளாக வழங்கப்பட்டன. 2016/2017 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ஏழு பீடங்களையும் சேர்ந்த அனைத்து மாணவர்களுக்கும் பல்கலைக்கழகம் மறுபயிற்சிகளை வழங்கியது. மாணவர்களின் எதிர்ப்பு காரணமாக மூடப்பட்டிருந்த வைத்திய பீடம் திறக்கப்பட்டு, டிசம்பர் மாதம் புதிய மாணவர் குழாம் ஒன்று பதிவுசெய்யப்பட்டது.

2939 ஆக இருந்த மாணவர்களின் உள்நுழைவு 2016 ஆம் ஆண்டு 3262 ஆக அதிகரித்தது. 2017 ஆம்ஆண்டின் இறுதியில் மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 12,129 ஆகக் காணப்பட்டது. 2017- 2021 ஆம் ஆண்டுக்கான தந்திரோபாய திட்டத்தின் படி, புதிய அமுல்படுத்தல்கள் மூலம் எதிர்வரும் வருடங்களில் நன்மைபெறுகின்ற மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படவுள்ளது.

மேலும் மாணவர்களின் நடிவடிக்கைகளை அவர்களின் கல்விப் பாதையில் முக்கியமான ஒரு பகுதியாக பல்கலைக்கழகம் கருதுகின்றது. வித்தியாசமான பின்புலங்களிலிருந்து தனியாக செயற்படுவதன் மூலம் சிறந்த வெளிப்பாடுகளையும் அநுபவங்களையும் இது மாணவர்களுக்கு வழங்குகின்றது. பல்கலைக்கழக துணைவேந்தர் இத்தகைய நிகழ்வுகளில் அவர்களை பங்குபற்றச் செய்வதற்கு அவர்களுக்கு வழிகாட்டல்களையும் தலைமைத்துவத்தையும் வழங்கி அவர்களை இதில் தொடர்புபடுத்த ஒத்தாசையாக இருக்கின்றார்.

இவ்வருட மதிப்பீட்டின் படி பல வெளியீடுகளுக்கும் ஊடக சந்திப்புக்களுக்கும் பல்கலைக்கழகம் ஒரு சாட்சியாகக் காணப்படுகின்றது. அதேவேளை ஆய்வு தொடர்பான பல முக்கிய அபிவிருத்திகளைக் கொண்டுள்ளது. கண்டுபிடிப்புக்கான மையங்களும் காணப்படுகின்றன. உரு 6 இத்தகைய சாதனைகளின் காட்சியை வெளிக்காட்டுகின்றது.

கல்வி சார் மற்றும் கல்வி சாரா ஊழியர்களுக்கான அனைத்து வளங்களையும் கொண்டமைந்துள்ள ஒரு பல்கலைக்கழகம் இதுவாகும். அவர்களுடைய திறன்களையும் ஆற்றல்களையும் வளர்த்துக்கொள்வதற்குத் தேவையான பயிற்சிகளும் வெளிக்கொணரல்களும் வழங்கப்படுகின்றன. அவர்களுடைய முயற்சிகளுக்கு பயனளிக்கும் வகையில் விருதுகளும் புலமைப்பரிசில்களும் வழங்கப்படுகின்றன. இவ்வருட மதிப்பீட்டின் படி இடம்பெற்ற வித்தியாசமான நிகழ்வுகள் மற்றும் நடிவடிக்கைகள் தொடர்பான விடயங்கள் இங்கே உரு 7 இல் காட்டப்பட்டுள்ளன.

**கண்டுபிடிப்புகள், வெளியீடுகள், ஊடக சந்திப்புகள்**

2017.02.07 - ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் டெங்கு ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளர் பேரா. நீலிகா மாலவிகே அவர்கள் ‘அத’ பத்திரிகையுடன் டெங்கு தொடர்பான மருத்துவ நேர்காணலிலே கலந்துகொண்டார்.

2017.03.31 – தொழிநுட்பவியல் பீட மாணவர்கள் பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற கண்காட்சியில் ‘திரசார லங்கா ஜாதிக மங்கல்ய’ என்னும் நிகழ்வில் அவர்களுடைய ‘நுகசெவன’ என்னும் விடயத்தை முன்னளிக்கை செய்தனர்.

2017.06.16 – (Lunch time talk) மதிய நேர சம்பாசனை (12.00 – 1.00 மணிவரை) “கல்வியியலாளர்களுக்கான காட்சித் தொடர்பாடல்” – ஊழியர் அபிவிருத்தி நிலையத்தினால் பல்கலைக்கழக கல்விசார் ஊழியர்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

2017.06.19 - பாளி மற்றும் பௌத்த கற்கைகள் துறையின் தலைவர் வண. கலாநிதி. மெதகம்பிடியே விஜிததம்ம தேரர் அவர்களின் “தசபோத்திசத்துபத்திகத்த அத்தகத்த” என்னும் நூல் வெளியீட்டு விழா இடம்பெற்றது.

2017.06.29 – வண.பேராசிரியர் மதகொட அபேதிஸ்ஸ அவர்களின் கண்காணிப்பு வசதிகள் மற்றும் கேட்டல் உபகரணங்கள் தொடர்பான நன்கொடையின் மூலம் 33 புத்தகங்கள் செவிப்புல நூல்களாக மாற்றப்பட்டன. அவை சமூகவியல், உளவியல், சிங்களம், பௌத்த கலாசாரம் ஆகியவற்றை உள்ளடக்கி இருந்தன. மற்றும் அரசாங்க போட்டிப் பரீட்சைகள் தொடர்பான நூல்களையும் கொண்டிருந்தன. இவை மானுடவியல் மற்றும் சமூகவியல் பீட பட்டதாரி மாணவர்களின் உதவியின் மூலம் மேற்கொள்ளப்பட்டன.

2107.11.23 – மானுடவியல் மற்றும் சமூகவியல் பீடத்தின் வராறு மற்றும் தொல்பொருளியல் துறை மாணவர் ஒன்றியத்தினால் வருடாந்தம் இடம்பெறும் ‘விதாரணி’ கல்வி சஞ்சிகையின் வெயீட்டு விழா இடம்பெற்றது.

(உரு - 6)

**ஊழியர் /மாணவர் கல்வி அபிவிருத்தி நிகழ்ச்சிகளும் வாய்ப்புகளும்**



31.01.2017- ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் - கனடா அலுமினி ஒன்றியம் என்பன இணைந்து வழங்கிய வருடாந்த விருது வழங்கும் நிகழ்வு - 30 மாணவர்களுக்கு நிதியுதவிகள் வழங்கப்பட்டன.

- 18-21.01.2017- மாநகர திண்மக் கழிவு முகாமைத்துவம் தொடர்பான சான்றிதழ் வேலைத்திட்டம்.
- 09.02. 2017 - அரசாங்கத்தினால் ஒழுங்கசெய்யப்பட்ட விளையாட்டு மற்றும் உடற்கல்வி ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான விசேட வேலைத்திட்டமும் விரிவுரைத் தொடரும்
- 9, 10. 03.2017 - புகை முகாமைத்துவம் மற்றும் வகைப்பாடு என்பவற்றுக்கான சர்வதேச அங்கீகாரம் தொடர்பான அறிமுகம் ISO 14064 தொடர்
- 11.03.2017 - பத்திரிகை ஆக்கம் எழுதுதல் தொடர்பான பயிற்சிப் பட்டறை - உயர் தர விஞ்ஞானத்துக்கான இலங்கை சமூகம் (SLAAS) வாழ்க்கை விஞ்ஞானமும் புவி விஞ்ஞானமும் என்பன ஜயவர்தனபுரப் பல்கலைக்கழத்துடன் இணைந்து நடாத்தியது.
- 24.03.2017 - "Sewabhinandana 2017" வேலையாட்களுக்கான நீண்ட வாழ்க்கை விருதுகள் - இது கல்வி மற்றும் கல்வி சாரா ஊழியர்கள் இருவரிலும் பல்கலைக்கழக வரலாற்றில் 25, 30, 35, 40 வயதைப் பூர்த்தி செய்தோருக்கு வழங்கப்பட்டது.
- 25.03.2017 - "Saubhagya" ஊழியர் சட்டங்கள் தொடர்பான ஒரு விசேட தின பயிற்சித் திட்டம் -இது புதிய மாணவர் ஒன்றியத்தினால் ஒழுங்குசெய்யப்பட்டது.
- 29th - 31st March 2017 - "Junior Naturalist" கொழும்பு சர்வதேச பாடசாலை மாணவர்களுக்கான கல்வித் திட்டம் - இது யாகிராள கள ஆய்வு மற்றும் பாதுகாப்பு கல்வி மையத்தில் இடம்பெற்றது.
- 21.04.2017 - உயர் கல்வி கற்பித்தல் தொடர்பான சான்றிதழ் பாடநெறி 2017 - (CTHE-2017) ஊழியர் அபிவிருத்தி நிலையத்தினால் முன்னெடுக்கப்பட்டது. முன்னைய குழாத்தினருக்கு சான்றிதழ் வழங்கி வைக்கும் நிகழ்வு இடம்பெற்றது.
- 20.06.2017- மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீட இறுதி வருட மாணவர்களுக்கான ஒரு நாள் பயிற்சி வேலைத் திட்டம்
- 22.06.2017-ஒரு நாள் பாதுகாப்பு பயிற்சித் திட்டம் - ஊழியர் அபிவிருத்தி நிலையத்தினால் பல்கலைக்கழகத்தின் ஆய்வு கூட ஊழியர்கள்,கல்விசாரா ஊழியர்கள் மற்றும் பாதுகாப்பு ஊழியர்கள் என்போருக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.
- 27.06.2017-உளவியல் தொடர்பான ஒரு நாள் வேலைத் திட்டம் - இலங்கை மன வைத்திய மன்றத்தின் தலைவர் உளவியல் பேராசிரியரால் முன்னெடுக்கப்பட்டது. இது மெய்யியல் மற்றும் உளவியல் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது.
- 5-7.07.2017- பால்நிலை நேர்மையும் சமத்துவமும் - ஜயவர்தனபுரப் பல்கலைக்கழக பால்நிலை நேர்மையும் சமத்துவமும் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்டது.
- 07.07.2017- பொலிமர் பகுப்பாய்வு தொடர்பான பயிற்சிப் பட்டறை - பல்கலைக்கழகத்தின் உயர் ஆய்வு ஆவணங்கள் நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்டது.
- 12,13. 07.2017- கழிவு முகாமைத்துவம் தொடர்பான இரண்டு நாள் சான்றிதழ்ப் பாடநெறி - பட்டப்பின் கற்கைகள் பீட நிலைபேண் நிலையத்தால் ஏற்பாடு செய்யப்பட்டது.
- 14.07.2017- பல்கலைக்கழகத்தின் ஆங்கில மொழிக் கற்பித்தல் பிரிவு - ஆங்கில மொழி பரீட்சித்தலும் மதிப்பீடு செய்தலும் என்பது தொடர்பில் ஆஙகில மொழி விரிவுரையாளர்களுக்கு ஓர் பயிற்சிப் பட்டறையை மேற்கொண்டது. இதில் ஐக்கிய அமெரிக்காவின் சன் பிரான்சிஸ்கோ அரச பல்கலைக்கழத்தின் பேராசிரியர் வளவாளராக கலந்து கொண்டார்.
- 26.07.2017- பிரயோக விஞ்ஞான பீட பீடாதிபதி காரியாலயம் ஒரு சிறு பயிற்சிப் பட்டறையை, ஆய்வு மாணவர்களுக்கும் கல்வியலாளர்களுக்கும் தங்களுடைய எழுத்துக்களை ஆய்வுகளை பிரசுரம் செய்வதற்கு வெளியிடுவதற்கு வாசிப்பதற்கும் இலவசமாக, இலங்கை இளம் விஞ்ஞானிகளின் சங்கத்துடன் இணைந்து மேற்கொண்டது. பேராசிரியர் சாமுவேல் வசீகரன் அவர்கள் இந்த நிகழ்வின் வளவாளராக கலந்து கொண்டார்.
- 29.07.2017- சந்தைப்படுத்தல் பயிற்சியை உருவாக்குதல் என்னும் தலைப்பில் ஒரு பயிற்சிப் பட்டறை முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வர்த்தக பீட மாணவர்களினால் ஏறபாடு செய்யப்பட்டது.
- 23.08.2017 - மானுடவியல் மற்றும் சமூகவியல் விஞ்ஞான பீடம் நைடா நிறுவனத்தின் மேற்பார்வையின் கீழ் தமது பயிற்சிக் கால நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்வதற்கு எதிர்பார்த்துள்ள மாணவர்களுக்கு ஒரு கருத்தரங்கை ஏற்பாடு செய்தது.
- 15.09.2017 - வரலாறு மற்றும் தொல்பொருளியல் துறையைச் சேர்ந்த மாணவர்கள் பலருக்கு இந்தியாவில் தொல்பொருளியல் தொடர்பான விசேட பயிற்சி நிகழ்விலே இரண்டு வாரங்கள் பங்குபற்றுவதற்கு அனுமதி வழங்கியது.
- 25 - 29.092017 இலங்கை பிரிடிஷ் கவ்ன்சில் MAS அதேனா, துல்கிரிய பிரஜைகளுக்கு வதிவிட பயிற்றுவிப்பாளர் விருத்தி தொடர்பான நிகழ்ச்சித் திட்டம் ஒன்றை மேற்கொண்டது. இதில் செப்டம்பர் 25 - 29 வரை பல்கலைக்கழக கல்வியாளர்கள் ஒரு குழுவினர் பங்குபற்றினர்.

**பல்கலைக்கழக நடிவடிக்கைகள்**



- 15/16.02.2017 - "சாலாரு" கலை மற்றும் புகைப்பட கண்காட்சி ஒன்று வியாபார முகாமை ஒழுங்கமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டது. இது சுமங்கல வாசிப்பு அறையிலே இடம்பெற்றது.
- 05.03.2017 - முகாமைத்துவம் தொடர்பான மூன்று மாத சான்றிதழ்ப் பாடநெறியின் விருது வழங்கும் நிகழ்வு பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவம் மற்றும் வர்த்தக பீடத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது.
- 25.03.2017 - IESL தினம் (Institution of Engineers Sri Lanka) பொறியியற் பீடத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது. இது இரத்மலான பொறியியற் பீட வளாகத்தில் இடம்பெற்றது.
- ஷரித்த வசந்த "HarithaWasantha" வருடாந்த சிங்கள தமிழ் புது வருடக் கொண்டாட்டம் - பிரயோக விஞ்ஞான பீட வனவியல் மற்றும் சுற்றாடல் விஞ்ஞானத் துறையினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.
- 30.03.2017 - " கோகில உதானய" வருடாந்த தமிழ் சிங்கள புதுவருடக் கொண்டாட்டம் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றது.
- 06.04.2017 - Dept. of Business Economics conducted the Info-graphic Presentation Session.
- 20.04.2017 - "வோபிடர் 2017- தொழில் வழிகாட்டல் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட பொதுப் பேச்சுப் போட்டி கொழும்பு குளோபல் டவர் ஹோட்டலில் இடம்பெற்றது.
- 27.04.2017- சமூகவியல் மற்றும் மானுடவியல் துறையினால் கழிவு அகற்றல் பிரச்சினைகளும் சுற்றாடல் பிரச்சினைகளும் என்னும் தலைப்பில் ஒரு விவாதம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இது மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடத்திலே இடம்பெற்றது.
- 5-7.05.2017- பால் சமத்துவமும் நேர்மையும் என்னும் தலைப்பில் பல்கலைக்கழகங்களுக்கிடையில் ஒழு போட்டி நிகழ்வு இடம்பெற்றது. இதில் ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 6 மாணவர்கள் பங்கு கொண்டனர். இது பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்டது.
- 18.05.2017-I சர்வதேச நூதன தினம், நூதனசாலைகளும் வரலாறும் என்னும் தலைப்பில் கொண்டாடப்பட்டது. இதனை வரலாறு மற்றும் தொல்பொருளியல் துறை மற்றும் நூதனசாலைகள் சபை ஆகிய இரண்டும் ஏற்பாடு செய்திருந்தது.
- 26-05-2017- பல்கலைக்கழகங்களுக்கிடையிலான விவாதப் போட்டி - இதனை வர்த்தகம் மற்றும் முகாமைத்துவ பீட நிதியியல் துறை ஏற்பாடு செய்தது.
- 05-13.07.207- பல்கலைக்கழகங்களுக்கிடையிலான நுண்ணறிவு போட்டி - மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானத் துறையின் மென் திறன் அபிவிருத்தி பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்டது.
- 10.06.2017- மானுடவியல் மற்றும் சமூகவியல் விஞ்ஞான பீட முதலாவது ஆங்கில டிப்ளோமா சான்றிதழ் விருது
- 20.06.2017- ஆங்கில மொழிக் கற்பித்தல் பிரிவினால் ஆங்கில தின கொண்டாட்ட விழா ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் முதலாம் வருட மாணவர்களின் ஆங்கிலத் திறன்கள் வெளிக்கொணரப்பட்டன.
- 29.06.2017-"රූ නදී" நடன அரங்கு - வித்தியாசமான நடன புலமைகொண்ட பட்டதாரி மாணவர்களுக்கு திறந்த ஒரு நிகழ்வாக இடம்பெற்றது. இதில் கீழ் நாட்டு, மேல்நாட்டு நடனங்கள், மேற்கத்தேய, சபரகமுவ, பரத நடனங்கள் என்பன இடம்பெற்றன. இதனை பல்கலைக்கழக கலாசார நிலையம் ஏற்பாடு செய்திருந்தது.
- 7,8.09.2017- 43 ஆவது பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.
- 24.09.2017-சான்றிதழ், டிப்ளோமா, உயர் டிப்ளோமா விருது வழங்கும் நிகழ்வு வர்த்தகம் மற்றும் முகாமைத்துவ பீடத்தில் இடம்பெற்றது.
- 12.10.2017- உலக மனநிலை சுகாதார வாரத்தை முன்னிட்டு விசேட உளவியல் பயிற்சிப் பட்டறை ஒன்றினை மானுடவியல் மற்றும் சமூகவியல்பீட மெய்யியல் மற்றும் உளவியல் சங்கம் ஏற்பாடு செய்தது.
- 14.10.2017- மானுடவியல் மற்றும் சமூகவியல் பீடத்தைச் சேர்ந்த புவியியல் துறையினால் நடாத்தப்பட்ட கிராம அபிவிருத்தி டிப்ளோமா பாடநெறியின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.
- 07.10.2017- 2015/16 ஆம் கல்வியாண்டுக்காக புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்ட மாணவர்களுக்கான மஹபொல புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.
- 29.10.2017- மானுடவியல் மற்றும் சமூகவியல் பீட குற்றவியல் நீதி தொடர்பான டிப்ளோமா வழங்கும் நிகழ்வு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.
- 29.10.2017- முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வர்த்தக பீட, தொடர்பாடல் மற்றும் எழுத்துரிமை தொடர்பான டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் நிகழ்வு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறற்றது.
- 16.11.2017- RADIX 2017, இன் வர்த்தக பீட மாணவர்களுக்கான பல்கலைக்கழகங்களுக்கிடையிலான முதலாவது நடன போட்டி நிகழ்ச்சி ஒன்று வர்த்தகப் பொருளாதார மாணவர் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது.
- 20.11.2017- மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீட மாணவ்களால் ஏற்பாடு செய்யப்பட்ட ரண்ரசு கலைவிழா நிகழ்ச்சி 2017 நவம்பர் 20 ஆம் திகதி பல்கலைக்கழக பண்டாரநாயக்க மண்டபத்தில் இடம்பெற்றது.
- பல்கலைக்கழக முதலீட்டு தினம் - 2017
- 11.12.2017-எட்டாவது வருடாந்த கிறிஸ்மஸ் விழா 2017 - தலைப்பு "Primeiro Natal – The First Noel"
- 11.12.2017- தகவல் தொழிநுட்பம் தொடர்பான முதலாவது பயிற்சிப் பட்டறை ஒன்று மானுடவியல் மற்றும் சமூகவியல் விஞ்ஞான பீட கணினி நிலையத்தின் மாணவர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது.
- 13.12.2017- Speech Master 2017 - துறைகளுக்கிடையிலான பேச்சுப் பயிற்சி ஒன்று மானுடவியல் மற்றும் சமூகவியல் பீட மென்திறன் அபிவிருத்தி பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்டது.



**ஊழியர் அங்கீகாரம்**

23.03.2017 - மூன்று கல்விசார் ஊழியர்கள் (கலாநிதி பிரனீத் அபேசுந்தர, திருமதி மதுபாஷினி ரத்நாயக்க, பேராசிரியர் ஈ.ஆர்.ஜான்ஸ் ) மற்றும் பல்கலைக்கழக அலுமினி சங்கத்தின் ( திரு.யூ.கே.ஏ. வகபிடிய ) ஆகியோர் தேசிய சிறப்பு விருது வழங்கும் நிகழ்வின்போது சிறப்பு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர். 2017

- திரு ரமேஸ் லியனகே, பட்டப்பின்படிப்பு பீடத்திலே கலாநிதிப் பட்டத்தினை மேற்கொள்ளும் இவருக்கு திறந்த நிகழ்விலே இளம் விஞ்ஞானிகளுக்கான இலங்கை கல்விக் கூடம் SLAYS (Sri Lanka academy of Young Scientists) என்னும் நிறுவனத்தினால் தங்க விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

சிங்கள மொழியியல் பிரபல பேராசிரியர் விமல் ஜீ. பலகல்ல அவர்களின் 93 ஆவது பிறந்த தினம் கொண்டாடப்பட்டது.

2017 ஜுலை 25 ஆம் திகதி இலங்கை சுங்கவரித் திணைக்களம் மற்றும் பல்கலைக்கழக அலுமினி பணிப்பாளர் நாயகம் சூலாநந்த பெரேரா அவர்கள், அவரின் குடும்ப உறுப்பினர்களின் விருதாக முகாமைத்துவம் மற்றும் வர்த்தக கற்கைகள் பீடத்தைச் சேர்ந்த தேவையுடைய மாணவர்களுக்கு புலமைப்பரிசில்களை வழங்கினார்.

பிரயோக விஞ்ஞான பீட கணினி விஞ்ஞானத் துறையில் இரு நிகழ்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதன்போது சுவாபிமானி 2017 என்னும் விருது தொடர்பாடல் மற்றும் தகவல் தொழிநுட்ப அமைப்பினால் வழங்கப்பட்டது. இது 2107.30.11 அன்று கொழும்பு கலதாரி ஹோட்டலில் இடம்பெற்றது.

ஜயவர்தனபுர பல்கலைக்கழத்தின் 27 கல்வியலாளர்கள் விஞ்ஞான வெளியீடுகளுக்கான ஜனாதிபதி விருதினைப் பெற்றுக் கொண்டனர்.

## விளையாட்டு

பல்கலைக்கழகம் தொடர்ச்சியான மூன்று வருட சகலகலா வல்லுநர்களை வெளிக்கொணர்ந்தது. பல்கலைக்கழகத்தின் விளையாட்டு துறையை மேலும் விருத்திசெய்வதன் பொருட்டு ‘விளையாட்டு விஞ்ஞானத்துறையை நிர்மாணிப்பதற்கான நடிவடிக்கைகளை பல்கலைக்கழகம் மேற்கொண்டு வருகின்றது.

பல்கலைக்கழகமானது, தற்போது 38 விளையாட்டுக்களில் சிறப்பாக ஈடுபடுவதற்கான வசதிகளை வழங்குகின்றது. பல்கலைக்கழகத்தின் உடற்பயிற்சிக்கூடம், எமது நாட்டுக்கு சில கலை உபகரணங்கள் கிடைக்கப்பெற்றுள்ளமையினால் தற்போது புனருத்தாபனம் செய்யப்படுகின்றது. இவ்வருட மதிப்பீட்டின் படி, இவ்வருடத்தில் சிறப்பாக இடம்பெற்ற நிகழ்வுகள் வருமாறு:

- ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் 2017 ஆம் ஆண்டு பல்கலைக்கழகங்களுக்கிடையில் இடம்பெற்ற கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்றது. (இறுதிப் போட்டி யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துடன் கொழும்பு பல்கலைக்கழக மைதானத்தில் இடம்பெற்றது)
- ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக வளாகத்தில் 2017 ஜுன் மாதம் 17, 18 ஆம் திகதிகளில் இடம்பெற்ற 2017 ஆம் ஆண்டுக்கான கராட்டி வீரத்துவப் போட்டியின் போது பெண்களுக்கான வீரத்துவப் போட்டியில் மூன்றாம் இடத்தினையும் ஆண்களுக்கான வீரத்துவப் போட்டியில் இரண்டாம் இடத்தினையும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் பெற்றுக் கொண்டது.
- 2017 19 – 30 ஆம் திகதி வரை டாய்பாயில் இடம்பெற்ற உலக பல்கலைக்கழக விளையாட்டில் 18 உறுப்பினர்கள் கொண்ட குழு பங்குகொண்டது.
- பல்கலைக்கழகங்களுக்கிடையிலான விளையாட்டுபோட்டியில் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் மூன்று முறை வீரத்துவத்தை வெற்றிகொண்டது. (2015, 2016 மற்றும் 2017) 2017 ஆகஸ்ட் மாதம் - செப்டம்பர் வரை இடம்பெற்ற போட்டியில் பெற்றுக் கொண்டது.

## கூட்டான பொறுப்புகள்

வித்தியாசமான பின்புலங்களிலிருந்து வந்த பெருந்தொகையான மாணவர்களின் மத்திய வீடாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் விளங்குகின்றது. மாணவர் தொகையின் அடிப்படையில் இலங்கையில் மிகப் பெரிய கல்வி நிறுவனமான ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகம் அதனது பிரதான கடமையாக நாட்டிற்கும் நாட்டு மக்களுக்கும் சேவை செய்வதை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

(உரு – 8)

- 17.03.2017- ஜயவர்தனபுர பல்கலைக்கழக அலுமினி சங்கம் பல்கலைக்கழக கிரிக்கெட் மற்றும் ரகர் விளையாட்டு அணிகளுக்கு அனுசரனை வழங்கியது. ஜயவர்தனபுர பல்கலைக்கழக அலுமினி சங்கத்தினால் பண நன்கொடை ஒன்று கிரிக்கெட் மற்றும் ரகர் அணிகளுக்கு வழங்கப்பட்டது.
- 22.06.2017- டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டம் ஒன்று வரலாறு மற்றும் தொல்பொருளியல் துறைத் தலைவர் அவர்களின் வழிகாட்டலின் பேரில் இடம்பெற்றது.

**பல்கலைக்கழகத்தின் தரம் உயர்த்துதல்கள்**



- 31.05.2017- பௌத்த சங்கம், வைத்திய விஞ்ஞான பீட ஆசிரியர் சங்கம் மற்றும் மாணவர் சங்கத்துடன் இணைந்து, கல்வி மற்றும் கல்வி சாரா ஊழியர்கள், மாணவர்கள் மற்றும் ஏனையோரால் வழங்கப்பட்ட நன்கொடையினை ஒன்று சேர்த்து, இரத்தினபுரி மாவட்ட மில்லகந்த, துனந்தஹேன, எல்லாவல பிரதேசங்களில் நிவாரண செயற்பாடுகளை மேற்கொண்டது.
- 01.06.2017- புளத்தசிங்கள பிரதேசத்தில் ஒரு முகாம் நடாத்தப்பட்டது. இதில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் சொத்துக்களை சுத்தம் செய்தல் மற்றும் அவர்களுக்கு நன்கொடைகளைச் செய்தல் என்பவற்றை மேற்கொண்டது. இதில் பல்கலைக்கழக தற்காலிக ஊழியர்களும் இணைந்து கொண்டனர்.

**நாட்டுக்கான சமூக சேவைகள்**



- செயலாளர் மென்திறன்கள் அபிவிருத்திப் பிரிவு (SSDU)
- 28.07.2017- மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானத்துறையின் 2017 மே மாதம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுள் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு சர்வோதயா சிரமதானக் குழுவினால் உலர் பொருட்கள், அடிப்படைப் பொருட்கள் தளபாடங்கள் என்பன வழங்கப்பட்டன.
- 09.10.2017- புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு - வைத்திய விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த 35 மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டு ஒருவருக்கு 10,000 ரூபா வீதம் MCA ஹமீட் ஹாஜியார் நிதியத்திலிருந்து வழங்கப்பட்டது.

**தேவையான போது மாணவர்களுக்கு உதவி வழங்குதல்**



## உபாய திட்டங்கள் 2017 - 2021

2017 – 2021 காலப்பகுதிக்கான முக்கியமாக தற்போதைய உபவேந்தரின் காலப்பகுதிக்குரிய அபிவிருத்தித் திட்டங்கள் கீழே உள்ள உருவில் வருமாறு:



**கற்றலும் கல்வியும்**

- மருந்தியல் விஞ்ஞானம் மற்றும் இணை சுகாதார பீடம் உட்பட 9 பீடங்கள் உள்ளடக்கப்படுகின்றன.
- இரண்டு நிறுவனங்கள் ( பட்டப் பின்படிப்பு நிறுவனம், பௌத்த கற்கைகள்)
- 85 கல்வி துறைகள்
- 675 கல்வியலாளர்கள்
- 1150 கல்வி சாரா ஊழியர்கள்
- 1000 புதிய சர்வதேச மாணவர்கள்
- 525 பட்டப்படிப்பு மாணவர்கள்
- 40 கலாநிதிப்பட்ட ஆய்வாளர்கள்
- புதிய சர்வதேச மாணவர்களின் மாற்று நிகழ்ச்சித் திட்டம்
- 6 மாதங்களுக்குள் 99 வீதமான வேலைவாய்ப்புகள்
- 100 சர்வதேச பயணங்கள்
- ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகத்தின் எல்லா சுற்றுநிருபங்களும் 4H and 3P models ஆக வடிவமைக்கப்பட்டமை.
- சர்வதேச தரத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு தர நிர்ணய முறைமையை அமுல்படுத்திக் கொள்வதற்கு இலங்கை திறமைத் திட்ட (SLQF) செய்கை




**ஆய்வும் அபிவிருத்தியும்**

- 210 ஆய்வு விருதுகள்
- 20 சர்வதேச பங்காளிகள்
- 135 உள்நாட்டு கைத்தொழில் பங்காளிகள்
- 15 தொழில் ரீதியான ஆலோசனை திட்டங்கள்
- 50 சஞ்சிகைகள் பிரசுரிப்பு
- 60 பிரதம சஞ்சிகைகள் பிரசுரிப்பு
- 30 USR திட்டங்கள்
- 30 கல்வியலாளர்கள் பங்குகொண்ட கொள்கை தீர்மானங்கள்



**மக்கள்**

- சன்மானங்கள் மற்றும் அங்கீகாரத் திட்டங்கள்
- கல்வி மற்றும் கல்விசாரா ஊழியர்களின் வருடாந்த ஆய்வு திருப்தி
- புதிய பீட மாற்றுத் திட்டங்கள்



**உளளக கட்டமைப்பு**

- புதிய வள நிர்வாகம் மற்றும் அபிவிருத்தித் திட்டம்
- பல் கதை, பல் தொழிற்பாட்டு கட்டிட அமைப்பு



**நிதி**

- நடைமுறையியல் நிதிப் பாதுகாப்பு
- கணக்கியல், வெளிப்படைத் தன்மை, நேர்மை, நிதிக்கட்டுப்பாடு என்பவற்றின் உயர் தன்மையை உறுதிப்படுத்தல்
- சிறந்த பல்கலைக்கழக ஆளுமையை உறுதிப்படுத்தல்



**மாணவர்களின் அநுபவ வெளிப்பாடு**

- 80 வீதமான மாணவர்கள் திருப்தியான வீதம்
- 40 வீதமான மாணவர்கள் பங்குபற்றல் வீதம்



**வாழ்நாள் சமூகம், சமூகப் பொறுப்பு மற்றும் தேசிய அபிவிருத்தி**

- 200 தேசிய பங்களிப்பு திட்டங்கள்
- 30 USR திட்டங்கள்
- 30 கல்வியலாளர்கள் கொள்கை உருவாக்கத்தில் பங்கேற்பு

(உரு - 9)

## உள்ளடக்க அட்டவணை


தற்போதைய நடவடிக்கைகளின் சாராம்சம் ................................................ 19

மாணவர் நலன்களும் சமூக நலன்களும் ................................................ 19
வெளிநாட்டு மாணவர்கள் தொடர்பான விபரங்கள் ................................................ 19
பட்டதாரிகளின் வெளியீடுகள் ................................................ 20
விடுதி வசதிகள் ................................................ 22
ஊழியர்கள் தொடர்பான சாராம்சம் ................................................ 23

நிர்வாக ஊழியர்களும் கல்விசார் உதவி ஊழியர்களும் ................................................ 23

கல்விசாரா உழியர்கள் ................................................ 24

விடுமுறையில் உள்ள, விடுமுறையின் பின்னர் தமது பட்டப்பின்படிப்புத் தகைமைகளைப் பூர்த்திசெய்துகொண்டு மீண்டும் தொழிலில் இணைந்து கொண்ட கல்விசார் ஊழியர்கள் ............ 24

பொது அறிமுகமும் முகாமையும் ................................................ 25-31

பல்கலைக்கழக ஊழியர்கள் ................................................ 25
பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபைகள் ................................................ 26
கூட்டங்கள் ................................................ 28
ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒருங்கிணைப்பு அட்டவணை ................................................ 29
நிர்வாக உத்தியோகத்தர்கள் ................................................ 30
நிதி நிர்வாக உத்தியோகத்தர்கள் ................................................ 31
பல்கலைக்கழகத்தின் பீடங்கள் ................................................ 32
மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம் ................................................ 32-38

பீடத்தினால் வழங்கப்படும் பட்டப்படிப்பு, மற்றும் டிப்ளோமா பாடநெறிகள் ................................................ 33
பீடத்தினால் வெளியிடப்பட்ட பெறுபேறுகள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு ................................................ 33
2016/2017 ஆம் வருடங்களில் வெளியிடப்பட்ட பெறுபேறுகள் ஒப்பீடு ................................................ 34
மாணவர்களினதும் வளவாளர்களினதும் விபரங்கள் ................................................ 35
உள்நாட்டு மாணவர்கள் தொடர்பான விபரங்கள் ................................................ 36
கல்விசார் ஊழியர்கள் தெடர்பான விபரங்கள் ................................................ 37
கல்விசாரா ஊழியர்கள் தொடர்பான விபரங்கள் - 2017 ................................................ 37
ஆராய்ச்சி, கண்டுபிடிப்புகள், வெளியீடுகள் தொடர்பான விபரங்கள் ................................................ 38
செயற்திட்டங்கள், கருத்தரங்குகள், வேலைத்திட்டங்கள் தொடர்பான தகவல்கள் ................................................ 39
கிடைக்கப்பபெற்ற விருதுகள் தொடர்பான விபரங்கள் ................................................ 38
பிரயோக விஞ்ஞான பீடம் ................................................ 39-47

பீடத்தினால் வழங்கப்படம் டிப்ளோமா, பட்டப்படிப்பு பாடநெறிகள் தொடர்பான விபரங்கள் ................................................ 40
2017 ஆம் ஆண்டு பீடத்தினால் வெளியிடப்பட்ட பெறுபேறுகள் தொடர்பான விபரங்கள் ................................................ 41
பீடத்தினால் வெளியிடப்பட்ட 2016/2017 ஆம் ஆண்டு பெறுபேறுகள் ஒப்பீடு ................................................ 42
மாணவர்கள் வளவாளர்கள் தொடர்பான விபரங்கள் - 2017 ................................................ 43
உள்நாட்டு மாணவர்கள் தொடர்பான விபரங்கள் - 2017 ................................................ 43
கல்விசார் ஊழியர்கள் தொடர்பான விடயங்கள் ................................................ 44
கல்வி சாரா உழியர்கள் தொடர்பான விபரங்கள் ................................................ 45

செயற்திட்டங்கள், கருத்தரங்குகள், வேலைத்திட்டங்கள் தொடர்பான தகவல்கள்……………………46
ஆராய்ச்சி, கண்டுபிடிப்புகள், வெளியீடுகள் தொடர்பான விபரங்கள்………………………………47
புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பாடநெறிகள் தொடர்பான விபரங்கள்……………………………….47
முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வர்த்தக பீடம்.......................................................................................48
பீடத்தினால் வழங்கப்படும் டிப்ளோமா, பட்டப்படிப்பு பாடநெறிகள்...........................................................49
2017 ஆம் ஆண்டு பீடத்தினால் வெளியிடப்பட்ட பெறுபேறுகள் தொடர்பான விபரங்கள்………….50
பீடத்தினால் வெளியிடப்பட்ட 2016/2017 (பெப்ரவரி) ஆண்டு பெறுபேறுகளின் ஒப்பீடு .......................51
உள்நாட்டு மாணவர்கள் தொடர்பான விபரங்கள்……………………………………………….52
ஊழியர்கள் தொடர்பான விபரங்கள்......................................................................................................52
கல்விசார் ஊழியர்கள் தொடர்பான விபரங்கள்.........................................................................................53
ஆராய்ச்சி, கண்டுபடிப்புகள், வெளியீடுகள் தொடர்பான விபரங்கள்..........................................................54
பீடத்தினால் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பான விபரங்கள்...............................................54
மருத்துவ விஞ்ஞான பீடம்.................................................................................................................55-60
பீடத்தினால் வழங்கப்படும் டிப்ளோமா, பட்டப்படிப்பு பாடநெறிகள் .........................................................56
2017 ஆம் ஆண்டு பீடத்தினால் வெளியிடப்பட்ட பெறுபேறுகள் தொடர்பான விபரங்கள் ..................56
பீடத்தினால் வெளியிடப்பட்ட 2016 / 2017 ஆம் ஆண்டு பெறுபேறுகளின் ஒப்பீடு ..................................57
மாணவர்கள் மற்றும் வளங்கள் தொடர்பான விபரங்கள்...........................................................................58
உள்நாட்டு மாணவர்கள் தொடர்பான விபரங்கள்.......................................................................................58
கல்விசார் ஊழியர்கள் தொடர்பான விரரங்கள்.........................................................................................59
கல்விசாரா ஊழியர்கள் தொடர்பான விபரங்கள்.......................................................................................59
ஆராய்ச்சி, கண்டுபிடிப்புகள், வெளியீடுகள் தொடர்பான விபரங்கள்..........................................................60
செயற்திட்டங்கள், கருத்தரங்குகள், வேலைத்திட்டங்கள் தொடர்பான விபரங்கள 60
கிடைக்கப்பெற்ற விருதுகள் தொடர்பான விபரங்கள்...............................................................................60
பட்டப்பின் படிப்பு கற்கைகள் பீடம்.....................................................................................................61-74
தொழிநுட்பவியல் பீடம்....................................................................................................................75-79
மாணவர்கள் மற்றும் வளங்கள் தொடர்பான விபரங்கள் ..........................................................................75
உள்நாட்டு மாணவர்கள் தொடர்பான விபரங்கள்.......................................................................................77
கல்விசார் ஊழியர்கள் தொடர்பான விபரங்கள்.........................................................................................78
கல்விசாரா ஊழியர்கள் தொடர்பான விபரங்கள்.......................................................................................78
ஆராய்ச்சி, கண்டுபிடிப்புகள், வெளியீடுகள் தொடர்பான விபரங்கள்…………………………………78
செயற்திட்டங்கள், கருத்தரங்குகள், வேலைத்திட்டங்கள் தொடர்பான விபரங்கள்…………………79
கிடைக்கப்பெற்ற விருதுகள் தொடர்பான விபரங்கள் ...............................................................................79
பொறியியற் பீடம்.....................................................................................................................................80
பீடத்தினால் வழங்கப்படும் டிப்ளோமா மற்றும் பட்டப்படிப்பு பாடநெறிகள் ............................................80
மாணவர்கள் மற்றும் வளங்கள் தொடர்பான விபரங்கள் 80
உள்நாட்டு மாணவர்கள் தொடர்பான விபரங்கள்.......................................................................................81
கல்விசார் ஊழியர்கள் தொடர்பான விபரங்கள்.........................................................................................81
கல்விசார ஊழியர்கள் தொடர்பான விபரங்கள் .........................................................................................81
ஆராய்ச்சி, கண்டுபிடிப்புகள், வெளியீடுகள் தொடர்பான விபரங்கள்..........................................................82

செயற்திட்டங்கள், கருத்தரங்குகள், வேலைத்திட்டங்கள் தொடர்பான விபரங்கள் ....... 82
கிடைக்கப்பெற்ற விருதுகள் தொடர்பான விபரங்கள் ....... 82
| | பெயர் குறிப்பிடப்படாத சஞ்சிகைகளில் வெளியிடப்பட்ட மொத்த ஆக்கங்கள்<br>பெயர் குறிப்பிடப்படாத சஞ்சிகைகளில் வெளியிடப்பட்ட மொத்த ஆக்கங்கள் | | | 01 | |
| | மாநாட்டு தொடர்களில் வெளியிடப்பட்ட மாநாட்டு ஆக்கங்கள் | | 01 | 10 | |
| | வெளியிடப்பட்ட ஆய்வுச் சுருக்கங்கள் | | 01 | 01 | |
| | வெளியிடப்பட்ட நூல் இயல்கள் | | | | |
| | வெளியிடப்பட்ட நூல்கள் | வெளியீட்டாளரால் | | | |
| | | எழுத்தாளரால் | | | |
| | மொத்தம் | | **04** | **15** | |

## சஞ்சிகைகளில் வெளியிடப்பட்ட முழு ஆக்கங்கள் தொடர்பான விபரங்கள்

| | ஆக்கத்தின் தலைப்பு | வெளியிடப்பட்ட ஆண்டு | பிரதான எழுத்தாளரின் பெயர் | | | இணை எழுத்தாளரின் பெயர் | சஞ்சிகையின் பெயர் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | தலைப்பு. வண .திரு.திருமதி .செல்வி | முதல் எழுத்துக்கள் | கடைசிப் பெயர் | | |
| பொறியியற் பீடம் | Joint assignment of power routing and spectrum in stactic flexible grid networks | 2017 | கலாநிதி | எம். என் . | தர்மவீர | லீ யான் எரரிக் எங்ரல் | லைட்வேவ் டெக்னோலோஜி சஞ்சிகை |
| | A Bayesian Approach for online recovery of streaming singals from compressive measurements | 2017 | திரு | யூ. எல் | விஜேவத்தன | மேரியன் கொடரீனு | IEEE transactions on signal processing |
| | An interior – paint method for modifying total variation Exploiting Transforms – Domain sparsity | 2017 | திரு | யூ. எல் | விஜேவத்தன | மேரியன் கொடரீனு | IEEE signal processing letters |
| | | | | | | | |

## உரிமைப் பத்திரங்கள் தொடர்பான விடயங்கள்

| | வகைகள் | இலக்கம் | | பிற்குறிப்பு |
|---|---|---|---|---|
| | | தேசிய | சர்வதேச | |
| பொறியியற் பீடம் | செல்லுபடியாகாத உரிமைப் பத்திரங்கள் | | 1 | |
| | கிடைக்கப் பெற்ற உரிமைப் பத்திரங்கள் | 2 | | |
| | அனுமதி பெற்ற உரிமைப் பத்திரங்கள் விற்கப்பட்டவை | | | |

## 2017 ஆம் ஆண்டு கிடைக்கப் பெற்ற உள்நாட்டு, தேசிய, சர்வதேச விருதுகள்

| | விருது (விருதின் பெயரும் விருதுக்கான காரணமும்) | உள்நாட்டு, தேசிய, சர்வதேச | பெற்றுக் கொண்டோரின் பெயர் |
|---|---|---|---|
| பொறியியற் பீடம் | சுதந்திர ஓட்டுநர்களுகளின் குழு வேலையை மதிப்பிடுவதன் மூலம் அவர்களுடன் தொடர்புறுவதற்குரிய அணுகுமுறை<br>2017 கொழும்பில் நடைபெற்ற உலகளாவிய பொறியியற் பட்டப்படிப்பில் ஒரு நிகழ்வுக் கற்கை | தேசிய | கலாநிதி.எம்.எச்.வி.டி.வை.முதுன்கொடுவ |
| | வருடாந்த ஆய்வு விருது 2017<br>வருடாந்த ஆய்வு விருதில் பிரசுரிக்கப்பட்ட விருது – ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம் | தேசிய | கலாநிதி.எம்.எச்.வி.டி.வை.முதுன்கொடுவ<br>கலாநிதி.பி.எம்.டி. பண்டார |
| | ஆய்வு விருது 2017 | தேசிய | மின் மற்றும் மின்னியல் பொறியியற் துறை |

## 2017 ஆம் வருடத்திற்கான பொது மக்களுக்கான அறிவுப் பரம்பல்

| | பகுப்பு | நிகழ்வின் தலைப்பு | பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை | எதிர்பார்க்கப்பட்டவர்கள் |
|---|---|---|---|---|
| பொறியியற் பீடம் | முன்னெடுக்கப்பட்ட பயிற்சிப் பட்டறைகள் | | | |
| | முன்னெடுக்கப்பட்ட பயிற்சிப் பாடநெறிகள் | | | |
| | ஏனையவை | NCS அபிவிருத்திசெய்யப்பட்டது | | |

# மாணவர் தொடர்பு மற்றும் மாணவர் நலன்புரி தொடர்பான விடயங்கள்

## மாணவர் பதிவு

**2016/2017 ஆம் கல்வியாண்டின் ஆரம்பம், முடிவு தொடர்பான தகவல்கள்**

| **பீடம்** | **2016/2017** | **கல்வியாண்டின் ஆரம்பத் திகதி** | **கல்வியாண்டின் முடிவுத் திகதி** |
|---|---|---|---|
| மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம் | 877 | 20/04/2018 | 25/02/2019 |
| பிரயோக விஞ்ஞான பீடம் | 698 | 21/11/2017 | 10/11/2018 |
| வர்த்தகம் மற்றும் முகாமைத்துவ பீடம் | 1213 | 30/10/2017 | 30/09/2018 |
| பொறியியற் பீட்ம் | 120 | 08/11/2017 | 07/10/2018 |
| தொழிநுட்பவியல் பீடம் | 321 | 16/12/2017 | 16/12/2018 |
| மருத்துவ விஞ்ஞான பீடம் | 231 | 27/11/2017 (M.B.B.S)<br>18/12/2017(MLS/B.Pharm/Nursing) | 17/07/2018<br>06/1/2019 |

## மாணவர் பதிவு தொடர்பான விபரங்கள்

| **கல்வியாண்டு** | **மானுடவியல் மற்றும் சமூகவியல் பீடம்** | **பிரயோக விஞ்ஞானம்** | **முகாமைத்துவம்** | **மருத்துவ விஞ்ஞானம்** | **பொறியியல் பீடம்** | **தொழிநுட்பவியல் பீடம்** | **மொத்தம்** |
|---|---|---|---|---|---|---|---|
| 2014/2015 | 885 | 664 | 1217 | 149 | ------ | ------ | **2915** |
| 2015/2016 | 837 | 628 | 1215 | 150 | 121 | 321 | **3272** |
| 2016/2017 | 877 | 698 | 1213 | 231 | 120 | 321 | **3460** |

# மகாபொல புலமைப் பரிசில்

2017 ஆம் வருடம் மகாபொல புலமைப்பரிசில்களைப் பெற்றுக்கொண்ட ஒவ்வொரு பீட மாணவர்களினதும் விபரங்கள் வருமாறு:

விசேட புலமைப்பரிசிலாக ரூபா 5050 உம் சாதாரண புலமைப்பரிசிலாக ரூபா 5000 உம் செலுத்தப்பட்டன.

| கல்வியாண்டு | மானுடவியல் மற்றும் சமூகவியல் | பிரயோக விஞ்ஞானம் | முகாமைத்துவம் | மருத்துவ விஞ்ஞானம் | பொறியியல் | தொழிநுட்பவியல் | வருடத்தில் செலுத்தப்பட்ட மொத்த தொகை (ரூபா) |
|---|---|---|---|---|---|---|---|
| 2011/2012 | 601 | 216 | 885 | 108 | - | | 51,956,000.00 |
| 2012/2013 | 531 | 115 | 971 | 29 | | | 81,255,550.00 |
| 2013/2014 | 549 | 188 | 955 | 30 | | | 88,634,330.00 |
| 2014/2015 | 606 | 232 | 896 | 32 | | | 89,142,100.00 |
| 2015/2016 | 490 | 180 | 843 | 17 | 33 | 211 | 100,834,550.00 |
| மொத்தம் | **1684** | **418** | **2818** | **503** | | | **411,822,530.00** |

# உபகாரத் தொகை

ஒவ்வொரு வருடமும் பீடங்களின் அடிப்படையில் உபகாரத் தொகையைப் பெற்றுக்கொண்ட மாணவர் எண்ணிக்கையும் தொகையும் வருமாறு:

| கல்வி ஆண்டு | சமூகவியல் மானுடவியல் | வர்.முகாமை | வைத். விஞ் | பொறியியல் | தொழிநுட்பவியல் | பிரயோக விஞ். | வருடாந்த செலவு (ரூபா) |
|---|---|---|---|---|---|---|---|
| 2011/2012 | 269 | | 2 | | | | 1,090,600.00 |
| 2012/2013 | 53 | 27 | 6 | | | 32 | 4,916,700.00 |
| 2013/2014 | 101 | 38 | 8 | | | 85 | 8,884,800.00 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 2014/2015 | 89 | 59 | 8 | | | 77 | 8,987,100.00 |
| **மொத்தம்** | **512** | **124** | **24** | | | **194** | **23,879,200.00** |

# பரீட்சைப் பிரிவு

## பரீட்சைகள்

2017 ஆம் ஆண்டின் அரையாண்டுப் பரீட்சைக் காலப்பகுதிகளான ஜனவரி முதல் பெப்ரவரி வரை மற்றும் மே முதல் டிசம்பர் வரையான காலப்பகுதிக்கான பரீட்சை வினாத்தாள்களை பிரதிசெய்து, பொதிசெய்து முத்திரையிட்டு மானுடவியல் மற்றும் சமூகவியல், பிரயோக விஞ்ஞானம், வர்த்தகம் மற்றும் முகாமைத்துவம், தொழிநுட்பவியல் ஆகிய பீடங்களின் மேற்பார்வையாளர்களுக்கு ஒப்படைத்தல் போன்ற நடவடிக்கைகள் பரீட்சைகள் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன. அவ்வாறே, மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம், முகாமைத்துவம் மற்றும் வர்த்தக பீடங்களில் பரீட்சகர்களுக்கு விடைத் தாள்களை ஒப்படைக்கும் விடயமும் இப்பிரிவினாலேயே மேற்கொள்ளப்படுகின்றன. மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீட பரீட்சைத் தாள்களை தட்டச்சு செய்யும் வேலையும் இப்பிரிவினாலேயே மேற்கொள்ளப்படுகின்றன. பிரயோக விஞ்ஞான பீட சித்தியடைந்தவர்களின் பட்டியல் தயார்செய்யப்பட்டு செனட் சபையின் அனுமதிக்காக அனுப்பப்படுவதும் இப்பீடத்தினாலேயாகும்.

மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம், வர்த்தகம் மற்றும் முகாமைத்துவ பீடம், குற்றவியல் டிப்ளோமா பரீட்சை மாணவர்கள் மேற்கொள்ளும் பரீட்சை மோசடிகளை கண்காணிக்கும் பரீட்சைகள் துப்பு துலக்கள் குழு, மேன்முறையீட்டுக் குழு (பல்கலைக்கழக செனட் சபையினால் நிறுவப்பட்ட 2 குழுக்கள்) ஆகியோரின் பரிந்துரைகளை செனட் சபைக்கு அனுப்பவுதும் அது தொடர்பாக மேற்கொள்ளப்படும் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதும் பரீட்சைகள் பிரிவினாலேயே மேற்கொள்ளப்படுகின்றன.

பிரயோக விஞ்ஞான பீடம், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீட கல்விசார் ஊழியர்களின் பரீட்சை கொடுப்பனவுகளுக்கான வவுச்சர்கள் பிரயோக விஞ்ஞான பீட கல்விசாரா ஊழியர்களின் பரீட்சைக் கொடுப்பனவுகளுக்கான வவுச்சர்கள் என்பன பரீட்சைகள் பிரிவினாலேயே செயற்படுத்தப்படுகின்றன.

## பட்டமளிப்பு விழா

மானுடவியல் மற்றும் சமூகவியல் பீடம், பிரயோக விஞ்ஞான பீடம், முகாமைத்துவம் மற்றும் வர்த்தக பீட பட்டதாரிகளின் பெயர்ப் பட்டியல்கள் தயாரிக்கப்பட்டு பல்கலைக்கழக செனட் சபையின் அனுமதிக்கு அனுப்பப்படுவது பரீட்சைகள் பிரிவினாலாகும். இதற்கான ஒழுங்குகள் பல்கலைக்கழக இணையத்தளத்தில் காணப்படும். பட்டமளிப்புக்குரிய விண்ணப்பத்தினையும் கொடுப்பனவு வவுச்சர்களையும் பட்தாரிகளுக்கு பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும். 2017 ஆம் வருடம் 07, 08 ஆம் திகதிகளில் இடம்பெற்ற பட்டமளிப்பு விழாவுக்கான பத்திரிகை விளம்பரம், மேற்கூறிய 3 பீடங்களினதும் 2746 பட்டதாரிகளின் பட்டமளிப்பு விழாவுக்கான விண்ணப்பங்களைப் பொறுப்பெடுத்தல், அவர்களுடைய தனிப்பட்ட பெயர்களை (சிங்களம் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும்) சான்றிதழ்களில் எழுதுதல் பட்டமளிப்பு தினத்தன்று அவற்றினை பட்டதாரிகளுக்கு வழங்குதல் என்பன பரீட்சைகள் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

பட்டமளிப்பு விழாவின்போது பிரயோக விஞ்ஞான பீட பட்டதாரிகளுக்கான சான்றிதழ்களின் மூலப்பிரதிகளையும் விபர பெறுபேற்றுப் பத்திரங்களையும் வழங்கும் நடவடிக்கைகள் பரீட்சைகள் பிரிவினாலேயே முன்னெடுக்கப்பட்டன.

## தங்கப் பதக்கங்கள்

பட்டமளிப்பு விழாவின்போது தங்கப் பதக்க விருதுகள், சான்றிதழ்களுடனான புலமைப்பரிசில்கள் என்பவற்றை வழங்கும் வேலைகளுடன் தொடர்புடைய அனைத்து நடவடிக்கைகளும் 2017 ஆம் வருடம் முதல் பரீட்சைகள் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

### சான்றிதழ்கள் வழங்கலும் சரிபார்த்தலும்

சமூகவியல் மற்றும் மானுடவியல் பீடம், பிரயோக விஞ்ஞான பீடம், வர்த்தகம் மற்றும் முகாமைத்துவ பீட பட்டதாரிகளின் சான்றிதழ்கள் மற்றும் அவற்றின் எழுத்துப் பிரதிகள் என்பவற்றை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பல்கலைக்கழகங்கள் மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களுக்கு அவர்களின் வேண்டுதலின்படி வழங்குவதும் பரீட்சைகள் பிரிவாகும்.

உள்நாட்டு வெளிநாட்டு நிறுவனங்களுக்கு பட்டதாரிகளின் தகவல்களை வழங்குதல் பரீட்சை புள்ளி விபரங்களை வழங்குதல், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் ஏனைய அதிகாரம்பெற்ற நிறுவனங்கள் மற்றும் எங்கும் எப்போதும் தேவையானவற்றை வழங்கும் சேவை பரீட்சைகள் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

## ஏனைய வேலைகள்

பல்கலைக்கழக தர நிர்ணய சபைக்குத் தேவையான அனைத்து தகவல்களும் பரீட்சைகள் பிரிவினால் வழங்கப்படுகின்றன.

## பல்கலைக்கழக மருத்துவ நிலையம்

மாணவர்களினதும் ஊழியர்களினதும் மருத்துவ சிகிச்சைகள், பரீட்சிப்புகள் மற்றும் பல்வைத்திய சேவைகள் என்பன முக்கியமாக இப்பல்கலைக்கழக மருத்துவ நிலையத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன. இவையல்லாது, டெங்கு ஒழிப்புத் திட்டம், பீடைகள் பரவுவதைத் தடுத்தல், பீடை கொல்லிகளைத் தெளித்தல், பல்கலைக்கழக சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் விடுதிகளில் உணவு பரீட்சித்தல், பல்கலைக்கழக மாணவர்களுக்கும் ஊழியர்களுக்கும் உள ஆலோசனைகளை வழங்குதல், சுகாதாரம் மற்றும் சமூக பிரச்சினைகள் போன்றன வைத்திய நிலையத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.

2017 ஆம் ஆண்டு வைத்தியர். ஷாந்த ஹெட்டியாரச்சி அவர்கள் பிரதான வைத்திய நிபுணராகவும், வைத்தியர் திருமதி. எஸ். டி. சில்வா அவர்கள், வைத்தியர் திருமதி.டி.எல்.எம்.ஆர்.எச்.பெரேரா ஆகியோர் மருத்துவ நிபுணர்களாகவும் வைத்தியர் டி.பீ.டி அசலகே பல் வைத்திய நிபுணராகவும் சேவையாற்றினர்.

# உடற் கல்விப் பிரிவு

**அறிமுகம்**

பல்கலைக்கழக மாணவர்களுக்கு விளையாட்டு நடவடிக்கைகளை முன்வைத்தல், அமுல்படுத்தல், 38 விளையாட்டுக்களை முன்னிட்டு விளையாட்டு வீரர்களையும் வீராங்கனைகளையும் பயிற்றுவித்தல், விளையாட்டு நிகழ்வுகளை ஒழுங்கமைத்தல் என்பன உடற் கல்விப்பிரிவின் முக்கிய செயற்பாடுகளாகும். பல்கலைக்கழகங்களுக்கிடையிலான போட்டிகள், தேசிய, சர்வதேச விளையாட்டுக் கழகங்களினால் ஒழுங்கமைக்கப்படும் போட்டிகளுக்கு முறையான பயிற்சிகளை வழங்கல், வெவ்வேறு விளையாட்டுக்களுக்காக மைதானத்தை பராமரித்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் என்பன உடற்கல்விப் பிரிவின் ஏனைய சேவைகளாகும்.

உடற் கல்விப் பிரிவின் தற்போதைய பணிப்பாளர் திருமதி என்.நிஷாந்தி விதானகே அவர்களாவார். திருமதி ரமணி குணதிலக்க, திருமதி தாமரா ஜயசேகர ஆகியோர் (விடுமுறையில் இருக்கும் ) நிரந்தர உடற்கல்வி பயிற்றுவிப்பாளர்களாவார்கள். மற்றும், திரு.எம்.ஜி.எஸ்.எஸ். கீர்த்திரத்ன, திரு.எச்.எல்.டிலங்கார, திரு.பீ.எம்.எம். பெரேரா, திரு எல்.ஏ.டி.பிரியதர்ஷன, பி.எம்.சீ.என்.நெரோசன் ஆகியோர் உடற்கல்விப் பிரிவின் தற்காலிக பயிற்றுவிப்பாளர்களாக காணப்படுகின்றனர்.

## உடற் கல்வித் துறையின் நோக்கங்கள்

1. பல்கலைக்கழக உள்வாரி மாணவர்களுக்கு உடற்கல்வி தொடர்பான பெறுமதிகளை தெளிவுபடுத்தலும், உள விருத்தியினூடாக அவர்களுக்கு உடல் விருத்தியை வழங்குதலும்
2. விளையாட்டு நடவடிக்கைகளையும் திறன்களையும் விருத்தி செய்துகொள்வதற்கு அவர்களுக்கு வாய்ப்புகளை வழங்குதல்
3. உள்நாட்டு வெளிநாட்டு விளையாட்டு கழகங்களுடன் போட்டிகளில் விளையாடுவதன் மூலம் விளையாட்டில் பங்குபற்றுதலை ஊக்கப்படுத்தல்
4. மாணவர்களுக்கு மத்தியில் விளையாட்டு நிகழ்வுகளை ஊக்கப்படுத்துவதன் மூலம் ஒழுக்கத்தினை விருத்திசெய்தல்
5. விளையாட்டினூடாக பல்கலைக்கழக நிலையை மேலோங்கச் செய்தல்

விளையாட்டு ஆசோசனைச் சபை கல்வி சார் ஊழியர்களையும் நிர்வாக ஊழியர்களையும் உறுப்பினர்களாகக் கொண்டுள்ளது. விளையாட்டு சபை விளையாட்டுத் தலைவர் மற்றும் உபதலைவரை பல்கலைக்கழகத்தின் விளையாட்டு நடவடிக்கைகளுக்காக நியமித்துள்ளது. ஒவ்வொரு வருடமும் தலைவர் மற்றும் காரியால பொறுப்பதிகாரிகள் விளையாட்டு சபைக்கு தெரிவுசெய்யப்படுவர்.

## விளையாட்டு ஆலோசனைச் சபை

விளையாட்டு ஆலாசனைச் சபை பின்வரும் உறுப்பினர்களை கொண்டமைந்துள்ளது.

1. விளையாட்டில் ஆர்வம் உள்ள துணைவேந்தரால் நியமிக்கப்பட்ட 12 கல்வி சார் நிரந்தர உறுப்பினர்களைக் கொண்டமைந்துள்ளது. (ஒவ்வொரு பீடத்திலிருந்தும் இரு உறுப்பினர்கள் வீதம்)
2. உடற்கல்விப் பணிப்பாளர்
3. முழு நேர உடற்கல்விப் பயிற்றுவிப்பாளர்களில் மூவர் (ஒரு பெண் பயிற்றுவிப்பாளர் கட்டாயமானது)
4. விளையாட்டுச் சபையின் இரு இணைத் தலைவர்கள், செயலாளர் மற்றும் உதவித் தலைவர் அல்லது வேறொரு பிரதிநிதி (ஒரு பெண் விளையாட்டு வீரர் இருத்தல் வேண்டும்.)
5. பல்கலைக்கழக பிரதான மருத்துவ நிபுணர் அல்லது அவரது பிரதிநிதி (பல்கலைக்கழக மருத்துவ அலுவலராக இருத்தல் கட்டாயமானதாகும்)

6. பணிப்பாளர், மாணவர் நலன்புரி
7. சிரேஷ்ட உதவிப் பதிவாளர் (மாணவர் நலன்புரி ) அல்லது அவரது பிரதிநிதி
8. பதிவாளர் அல்லது அவரது பிரதிநிதி
9. கணக்கதிகாரி அல்லது அவரது பிரதிநிதி
10. வேலைப் பொறியியலாளர் அல்லது அவரது பிரதிநிதி
11. உதவிப் பதிவாளர் (வேலைப் பிரிவு)
12. திட்ட பொறியியலாளர் (மூலதன வேலைப் பிரிவு)

## விளையாட்டுச் சபை

பல்கலைக்கழக விளையாட்டுச் சபை வெவ்வேறு விளையாட்டுக்களின் தலைவர், உப தலைவரையும் உடற் கல்விப் பயிற்றுவிப்பாளர்களையும் கொண்டமைந்துள்ளது. மேலும், இரு இணைத் தலைவர்கள், உதவித் தலைவர், இரண்டு இணைச் செயலாளர்கள், உதவிச் செயலாளர், கனிஷ்ட பொருளாளர். இரு பத்திராசிரியர்கள் மற்றும் இரு குழு உறுப்பினர்களையும் கொண்டமைந்துள்ளது.

அவர்கள் கல்வியாண்டின் வருடாந்தக் கூட்டத்தின்போது தெரிவுசெய்யப்படுவர்.

## விளையாட்டு செயற்பாடுகளும் போட்டித் தொடர்களும்

பல்கலைக்கழக உடற் கல்விப் பிரிவின் பின்வரும் பயிற்றுவிப்பளர்களினால் அவர்களின் மேற்பார்வையின் கீழ் பின்வரும் விளையாட்டுக்களுக்குரிய வசதிகளும் பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| **திருமதி என்.என்.விதானகே** (உடற்கல்விப் பணிப்பாளர்) பூப்பந்து – (ஆண் / பெண்)<br>மேசைப்பந்து (ஆண் / பெண்) | **திருமதி.ஜே.எம்.ரமணி குலதிலக்க** (உடற்கல்வி பயிற்றுவிப்பாளர்)<br>கரப்பந்து (ஆண் / பெண்)<br>சதுரங்கம் (ஆண் / பெண்)<br>வலைப்பந்து – பெண்<br>துப்பாக்கி சுடுதல் (ஆண் / பெண்)<br>யோகா<br>கராட்டி (ஆண் / பெண்)<br>கிரிக்கெட் (ஆண் / பெண்) | திரு.எம்.ஜீ.எஸ்.எஸ்.கீர்த்திரத்ன (உடற்கல்விப் பணிப்பாளர்)<br>கால்பந்து – ஆண்<br>எல்லே - (ஆண் / பெண்)<br>நீச்சல் (ஆண் / பெண்)<br>ஹொக்கி (ஆண் / பெண்) |
| திரு.எச்.எல்.எல். திலங்கார(உடற்கல்விப் பயிற்றுவிப்பாளர்)<br>மெய்வல்லுநர் போட்டி<br>வீதியோட்டம்<br>கரம்<br>கூடைப்பந்து<br>வான்விளையாட்டு | திர.பி.என்.எம்.பெரேரா(உடற்கல்விப் பயிற்றுவிப்பாளர்)<br>ரகர் - ஆண்<br>சாகச விளையாட்டு (ஆண் / பெண்)<br>பாரம் தூக்குதல் - ஆண்<br>பேஸ்போல் ஆண்<br>கபடி<br>டக்வுண்டோ (ஆண் / பெண்) | |

உடற்கல்விப் பிரிவுத் துறை பின்வரும் போட்டித் தொடர்களை ஒழுங்கு செய்கின்றது.

1. பீடங்களுக்கிடையிலான புதுமுக மாணவர்களுக்கான போட்டித் தொடர்

2. பீடங்களுக்கிடையிலான போட்டி
3. தனிப்பட்ட அல்லது சிநேகபூர்வ போட்டித் தொடர்
4. பல்கலைக்கழகங்களுக்கிடையிலான போட்டித் தொடர்

இதற்கு மேலதிகமாக எங்களால் ஒழுங்கமைக்கப்படுகின்ற வெளி அணிகளுடனான சிநேகபூர்வ போட்டிகள், பல்கலைக்கழகங்களுக்கிடையிலான சம்பியன் பட்ட போட்டிகள் என்பனவும் நடத்தப்படுகின்றன.

அத்துடன் இணைந்த பல்கலைக்கழகங்களுக்கிடையிலான குழுப் போட்டிகளும் நடைபெறுகின்றன. மேலும் இணைந்த பல்கலைக்கழகங்களுக்கிடையிலான போட்டியில் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் உலக பல்கலைக்கழக சம்பியன் பட்டப் போட்டிகளிலும் விளையாட்டுக்களிலும் பங்குகொள்கின்றனர்.

சில பல்கலைக்கழகங்களால் ஒவ்வொரு வருடமும் பல்கலைக்கழங்களுக்கிடையிலான விளையாட்டு விழா ஒழுங்கமைக்கப்படுகின்ற அதேவேளை, மூன்று வருடங்களுக்கு ஒரு முறை மினி ஒலிம்பிக் போட்டிகள் தனியொரு பல்கலைகழகத்தால் ஒழுங்கமைக்கப்படுகின்றது.

## 2017 ஆம் ஆண்டு முன்னெடுக்கப்பட்ட போட்டிகள் தொடர்பான விபரங்கள் வருமாறு:

❖ “பல்கலைக்கழகங்களுக்கிடையிலான மூன்றுக்கு மூன்று கூடைப்பந்து சம்பியன் பட்டம் - 2017” 2016 ஆம் ஆண்டு பல்கலைக்கழக வளாகத்தில் இடம்பெற்றது. இது ஜயவர்தனபுர வளாகத்தில் இடம்பெற்றது. கூடைப்பந்துக் குழுவும் உடற்கல்வித் துறையும் இணைந்து இதனை ஏற்பாடு செய்தன.

❖ ஊவா, குடாஓய, கொமாண்டோ ரெஜிமன்ட் பயிற்சிப் பாடசாலையில் இடம்பெற்ற பயிற்சி நிகழ்வு. இது குடாஓயவில் 2017 மார்ச் 31 முதல் ஏப்ரல் 03 ஆம் திகதி வரை இடம்பெற்றது. இது பல்கலைக்கழகங்களுக்கிடையிலான போட்டிகளில் கலந்து கொள்ள இருந்த குழுத் தலைவர்களினதும் உப தலைவர்களினதும் தலைமைத்துவப் பண்புகளை விருத்தி செய்யும் நோக்குடன் உடற்கல்வித் துறையினால் ஏற்பாடு செய்யப்பட்டது.

❖ 2017 ஆம் ஆண்டு மார்ச் 07 அம் திகதி பீடங்களுக்கிடையிலான போட்டி இடம்பெற்றது. இது எல்லாப் பீடங்களினதும் முதலாம் வருட மாணவர்களுக்குரியது.

- முதலாம் இடம் - பிரயோக விஞ்ஞான பீடம்
- இரண்டாம் இடம் - தொழிநுட்பவியல் பீடம்
- மூன்றாம் இடம் - முகாமைத்துவம் மற்றும் வர்த்தக பீடம்
- நான்காம் இடம் - மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்

2017 ஆம் ஆண்டு இடம்பெற்ற பல்கலைக்கழகங்களுக்கிடையிலான போட்டியில் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழம் அதி உயர் தரத்தினை தக்கவைத்துக் கொண்டது. ஆண், பெண் ஆகிய இரு சம்பியன் பட்டப் போட்டிகளிலும் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம் வெற்றி பெற்றது. இதன் காரணமாக 2017 அம் ஆண்டு ஒரு சிறப்பான வருடமாகக் கருதப்படுகின்றது. இது எமது பல்கலைக்கழகத்தின் மூன்றாவது வெற்றி வருடமாகும். இதன் காரணமாக எமது பல்கலைக்கழகம் சம்பியன் என்னும் நாமத்தை தக்கவைத்துக் கொண்டது.

## இலங்கைப் பல்கலைக்கழக விளையாட்டு போட்டிகளின் பெறுபேறுகள் - 2017

| | விளையாட்டு | ஆண் | பெண் |
|---|---|---|---|
| 1 | பூப்பந்து | 1ஆம் இடம் | 1ஆம் இடம் |
| 2 | பேஸ் போல் | காலிறுதி | - |
| 3 | கூடைப் பந்து | 1ஆம் இடம் | 1ஆம் இடம் |
| 4 | கரம் | 1ஆம் சுற்று | 3ஆம் இடம் |
| 5 | சதுரங்கம் | 1ஆம் இடம் | 3ஆம் இடம் |
| 6 | கிரிக்கெட் | 1ஆம் இடம் | - |
| 7 | எல்லே | 2ஆம் இடம் | 2ஆம் இடம் |
| 8 | காற்பந்து | 4ஆம் இடம் | |
| 9 | ஹொக்கி | காலிறுதி | 1ஆம் இடம் |
| 10 | கராட்டி | 3ஆம் இடம் | 2ஆம் இடம் |
| 11 | வலைப் பந்து | - | 1ஆம் இடம் |
| 12 | வீதியோட்டம் | 1ஆம் இடம் | - |
| 13 | ரக்பி | 4ஆம் இடம் | - |
| 14 | நீச்சல் | 3ஆம் இடம் | 1ஆம் இடம் |
| 15 | பூப்பந்து | 2ஆம் இடம் | 2ஆம் இடம் |
| 16 | டீக்வொண்டோ | 1ஆம் இடம் | 1ஆம் இடம் |
| 17 | டென்னிஸ் | 2ஆம் இடம் | 3ஆம் இடம் |
| 18 | ஓடுபாதை, களம் | 1ஆம் இடம் | 4ஆம் இடம் |
| 19 | கரப்பந்து | 3ஆம் இடம் | காலிறுதி |
| 20 | பாரம் தூக்குதல் | 4ஆம் இடம் | - |
| 21 | குத்துச் சண்டை | 3ஆம் இடம் | - |

### புதிய போட்டித் தகவல்கள்

1. சுமெத ரணசிங்க – ஈட்டி எறிதல் – 75.2 m
2. தனுஷ்க சந்தருவன் - நீளம் பாய்தல் - 7.54 m
3. ஓ.டி.ஐ.எல்.ஏ.குமார – 400 மீற்றர் - 54.12 செக்கன்
4. கே.ஏ.பீ.ஜயவர்தன – குண்டு வீசுதல் 40.78 மீற்றர்
5. 4X100m ஆண்கள் மரதன் குழு - 42.54 செக்கன்

- ❖ ஆண்கள் சம்பியன் - 1ஆம் இடம்
- ❖ பெண்கள் சம்பியன் – 1ஆம் இடம்
- ❖ மொத்த சம்பியன் – 1ஆம் இடம்

# சம்பியன் நிழற்பிரதிகள்



சதுரங்கக் குழு



பூப்பந்துக் குழு (பெண்கள்)



கூடைப்பந்து (பெண்கள்)



ஹொக்கி குழு (பெண்கள்)



மெய்வல்லுநர் குழு (பெண்கள்)




வலைப் பந்து (பெண்கள்)




நீச்சல் குழு (பெண்கள்)



டீன்வொண்டோ குழு (ஆண், பெண்)




வீதியோட்டக் குழு



கூடைப் பந்துக் குழு (ஆண்கள்)




கிரிக்கெட் குழு



பூப்பந்துக் குழு (ஆண்கள்)

## ❖ உடற்கல்வித் துறையினால் ஏற்பாடு செய்யப்பட்ட போட்டித் தொடர்கள்

- ஜினதாச வெற்றிக் கிண்ண குத்குச்சண்டை சம்பியன் போட்டி – 2017
- நட்பு ரீதியாக அழைக்கப்பட்ட குத்துச் சண்டைப் போட்டி – ஜயவர்த்தனபுர கிலேடியேட்டர்ஸ் எதிர் இலங்கைக் கடற்படை
- துணைவேந்தர் சவால் ரக்பி கிண்ணம்
- பல்கலைக்கழகங்களுக்கிடையிலான சதுரங்க சம்பியன் கிண்ணப் போட்டி-2017
- பல்கலைக்கழகங்களுக்கிடையிலான கராட்டி சம்பியன் கிண்ணப் போட்டி-2017
- பல்கலைக்கழகங்களுக்கிடையிலான நீச்சல் சம்பியன் கிண்ணப் போட்டி-2017
- IYALI வருடாந்த ஹொக்கி ஆட்டத் தொடர் -2017
  பீடங்களுக்கிடையிலான, பீடங்களின் புதுமுக மாணவர்களுக்கிடையிலான எல்லா வகையான போட்டிகளும்

## ஜயவர்த்தனபுர பல்கலைக்கழம் தேசிய போட்டித் தொடர்களில் பங்குகொண்டது

- பேரா.ஹொக்கி 6 போட்டித்தொடர் – 2017 (ஆண்)
- களனி.ஹொக்கி 6 போட்டித்தொடர் – 2017
- KDU தலைவர் கிண்ணப் போட்டி -2017
- றுகுண, மொரட்டுவ ஹொக்கி போட்டித்தொடர் -2017
- இலங்கைப் பல்கலைக்கழக விளையாட்டுக்கள் - 2017
- கொழும்பு விலகல் ஹொக்கி சம்பியன் தொடர் -2017
- மொர.7 ஹொக்கி சம்பியன் -2017
- பேரா.ஹொக்கி 6 போட்டித்தொடர் – 2017 (பெண்)
- 43ஆவது தேசிய விளையாட்டுப் போட்டி – 2017
- 3ஆவது கொரிய நாட்டுத் தூதுவர் குக்கிவன் கிண்ண டேக்வுண்டோ சம்பியன் கிண்ணப் போட்டி– 2017
- மேல்மாகாண கராட்டி சம்பியன் தொடர் 2017
- 42வது தேசிய கராட்டி சம்பியன் தொடர் – 2017
- பிஸ்ட் கராட்டி போட்டி
- குழு B தேசிய சதுரங்க போட்டித் தொடர் -2017
- கெமுனு ரத்நாயக்க சவால் கிண்ணம்
- UMISF பூப்பந்து ஆட்டத் தொடர்
- வயோஸ்பின் மேசைப்பந்து ஆட்டத் தொடர் – 2017
- கொழும்பு மாவட்ட பாரம் தூக்கல் சம்பியன் போட்டி
- தெரிவு, விலகல் காற்பந்து சம்பியன் கிண்ணம்
- தேசிய வயதெல்லை நீச்சல் சம்பியன் தொடர்
- பேரா.வலைப்பந்து சம்பியன் போட்டி 2017
- KDU 3 *3 திறந்த கூடைப்பந்து சம்பியன் கிண்ணம்

## தேசிய, சர்வதேச போட்டிகளில் பங்குபற்றுதல்

- மேல்மாகாண கராட்டி போட்டித் தொடர் - 2017 – தேசிய அணிக்கு 8 பேர் தெரிவுசெய்யப்பட்டனர். பீ.ஜீ.மதுவன்த, எஸ்.ஏ.பீ.சந்தநாயக்க, டீ.கசுப் பெரேரா, தீபிகா பிரியதர்ஷனி, ரங்களி சந்திரசிறி, பீ.ஏ.சதுரங்கிகா, ஏ.பீ.எஸ்.பீ. அபேசூரிய, டீ.டீ.என்.சீ.அபேசூரிய
- சரித் பெரேரா தேசிய கூடைப்பந்து நிகழ்வுக்கு தெரிவுசெய்யப்பட்டார்
- புத்திக அமரசிங்க தேசிய சதுரங்க போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டார்.
- காவிந்தி நிசமான்ன, திலினி ஹந்தஹேகா ஆகிய இருவரும் அவுஸ்திரேலியாவில் இடம்பெற்ற சுதிர்மான் கிண்ணத்துக்குரிய போட்டியில் பங்குபற்றியதன் மூலம் அவர்களின் இலக்கை அடைந்து கொண்டனர்.
- எறந்தி வருசவிதான்ன உலக பல்கலைக்கழக டென்னிஸ் போட்டித் தொடர் மற்றும் ஆசிய டென்னிஸ் தொடர் ஆகிய இரண்டிலும் பங்குகொண்டனர்.
- டில்சான் பிரியதர்ஷன மற்றும் சாமிக்க யசாஸ் ஆகியோர் தேசிய பேஸ்போல் போட்டித்தொடர் மற்றும் சீன தாய்பே தொடரிலும் பங்குபற்றியதோடு அவர்கள் தேசிய பேஸ்போல் அணிக்கும் தெரிவாகினர்.
- 19 மெய்வல்லுனர்கள் உலக பல்கலைக்கழகப் போட்டித் தொடர்களில் பங்குகொண்டனர் - 2017

டீக்கெவாண்டோ – யசந்த இசுரு, பவித்ரத லகிமினி

நீச்சல் - நிதீஷா எல்லாவல, பவந்தி ஹெட்டியாரச்சி

பூப்பந்து – காவிந்தி சிறிமான்ன. திலினி ஹந்தஹேவா, லக்கினி சசிபான்னி, சிந்தக்க மணிமல்வடு

பூப்பந்து - இமந்தா உதயந்ஜய, எறந்தி வருஷவிதான்ன, கசுனி பிடிகல,

டென்னிஸ் - இந்திக்க வேத்தசிங்க

மெய்வல்லுனர் - சுமேத ரணசிங்க, தனுஷ்க சதருவன், இசான் லஹிரு, சுமித் லக்மால், நதீஷானி ஹந்தர்சன், ஓஷத மதுசங்க, கயாஷான் அதாவுத

திருமதி. நிஷாந்த விதானகே அவர்கள் இந்த போட்டித் தொடர்களுக்கான அணி முகாமையாளராக பங்குகொண்டார். திரு சுமேத ரணசிங்க அவர்கள் அணித்தலைவராக செயற்பட்ட அதேவேளை, அவர் ஈட்டி எறிதலில் இறுதியாகத் தெரிவுசெய்யப்பட்ட 12 நபர்களுள் ஒருவராகவும் தெரிவு செய்யப்பட்டார்.

காவிந்தி சிறிமான்ன மற்றும் திலினி ஹந்தஹேவா ஆகியோர் இலங்கை வரலாற்றில் பட்டதாரி மாணர்களுக்கான அதிகூடிய பெறுபேறுகளை பெற்றுக் கொண்டனர். இவர்கள் பூப்பந்து இரட்டையர் போட்டியில் 4 ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்டது ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்திற்கு ஒரு பெருமையாகும்.

## 12.5 திறமை விருது விழா

ஒவ்வொரு வருடத்தின் இறுதியிலும் இது இடம்பெறும். உடற்கல்வித் துறை மற்றும் விளையாட்டுச் சபையினால் திறமை விருது பரிசளிப்பு விழா ஏற்பாடு செய்யப்படும். தரப்பட்டுள்ள பிரமாணக் குறிப்புகளுக்கு ஏற்றவாறு தேவையான தகைமைகளைப் பெற்றுக் கொள்ளும் விளையாட்டு வீரர்களும் விளையாட்டு வீராங்கனைகளும் ஆலோசனைச் சபையின் அனுமதிக்கு இணங்க, திறமை விருதுகளைப் பெற்றுக் கொள்வர். இந்த விருதுகளுக்கான பிரமாணக் குறிப்புகள் மற்றும் இது தொடர்பான ஏனைய விடயங்களை உடற்கல்வித் துறையிலே பெற்றுக் கொள்ளலாம். இதற்கு லேதிகமாக, பல்கலைக்கழகங்களுக்கிடையிலான விளையாட்டுத் தொடர்களிலே அதிக திறமைகளை வெளிக்காட்டும் விளையாட்டு வீரர்களும் வீராங்கனைகளும் இலங்கை பல்கலைக்கழக விளையாட்டு சங்கத்தின் திறமை விருதுகளைப் பெற்றுக் கொள்வர். திறமை விருது விழா (ஜபுர வர்ண – 2016) கொழும்பு வோடர்ஸ் எல்ஜ் ஹோட்டலில் 2017 ஜுன் மாதம் 21 ஆம் திகதி இடம்பெற்றது.

## 12.6 விளையாட்டு வசதிகள்

ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக உடற்கல்வித் துறை அதன் சிறந்த வசதிகளை பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்குகின்றது. அதேநேரம் பல்கலைக்கழக முழு சமூகத்திற்கும் அதன் வளாகத்தில் வசதிகளையும் வழங்குகின்றது.

### வலுவான தேகப்பயிற்சி சாலை

தேகப்பயிற்சிச் சாலை புதிய தேகப்பயிற்சி கருவிகளையும் உபகரணங்களையும் கொண்டுள்ளது. தேகப்பியற்சி சாலையை மாலை 6.00- 7.00 மணிவரை பல்லைக்கழக முழு சமூகத்திற்கும் பயன்படுத்தலாம். ஒவ்வொரு நாளும் முடியுமானவரை பயிற்றுவிப்பாளர்களிடமிருந்து சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு நாம் வசதிகளை வழங்குகின்றோம்.

### நீச்சல் தடாக வளாகம்

நீச்சல் தடாகம் 50 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு கிடைக்கப்பெற்ற ஒரு பரிசாகும். இது 50 மீற்றர் திட்ட அளவினைக் கொண்டதாகும். அதேவேளை, 10 நிரல்களைக் கொண்டுள்ளது. இதன் ஆழமில்லாத பகுதி 1.5 மீற்றராகவும், இதன் ஆழமான பகுதி 5.5 மீற்றர் ஆகவும் காணப்படுகின்றது.

நீச்சல் தடாகம் காலை 5.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரையும் திறக்கப்படும். இதில் 4 நிரல்கள் பல்கலைக்கழக சமூகத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கும் அதேவேளை, ஏனைய 06 நிரல்கள் வெளிவாரி ஆட்களுக்கு அவர்களின் வேண்டுதலின் பேரில் (பாடசாலை, கழகங்கள், தனியார் நீச்சல் பயிற்றுவிப்பாளர்கள்) ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பல்கலைக்கழகம் வருமானத்தைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ளது.

நீச்சல் தடாகத்தை உள்ளக பல்கலைக்கழக அமைப்புகள், பாடசாலைகள், சிவில் உத்தியோகத்தர்கள். படை வீரர்கள் உட்பட அனைவரும் பயன்படுத்துகின்றனர். இது வெளிச் சமூகத்திற்கு ஒரு பெரும் சேவையாகக் காணப்படுகின்றது.

### கரப்பந்து, பூப்பந்து, வலைப்பந்துத் திடல்கள்

மேற்படி திடல் வசதிகள் தேவையான விளையாட்டுகளுக்கு தேவையான உபகரணங்களுடன் பல்கலைக்கழக வளாகத்திலே முழு நேர பல்கலைக்கழக சமூகத்திற்கு மாலை 8.30 மணி வரை வழங்கப்படுகின்றது.

## ஹொக்கி, காற்பந்து ரகர் திடல்கள்

முறையான ஒரு அமைப்பில் மேற்படி விளையாட்டுத் திடல்கள் அமையப் பெறாததன் காரணமாக போதுமான வசதிகள் மற்றும் சிறந்த விளையாட்டு உபகரணங்கள் என்பன மேற்படி விளையாட்டுக் குழுக்களைப் பயிற்றுவிப்பதற்காக வழங்கப்படுகின்றன. பயிற்சிப் போட்டிகள் சிறப்பான மைதானங்களில் நடாத்தப்படுகின்றன.

## பேஸ்போல, எல்லே

மேற்படி இரண்டு விளையாட்டுக்களுக்கும் போதுமான இடவசதிகள் காணப்படாத காரணத்தால் வெளி மைதானங்கள் வாடகைக்கு வாங்கப்பட்டு கையளிக்கப்படுகின்றன.

## மெய்வல்லுநர்

மெய்வல்லுநர்களுக்கு 200 மீற்றர் ஓடுபாதை பயன்படுத்தப்படுகின்றது. ஒருவர் குழுவுக்கு தெரிவு செய்யப்படும்போது, அவர்களுடைய பயிற்சியை தியகம விளையாட்டரங்கில் மேற்கொள்ள முடியும்.

## சதுரங்கம்

சதுரங்கத்துக்காக ஒரு அறை ஒதுக்கப்பட்டுள்ளது. எல்லா குழு உறுப்பினர்களும் ஏனைய மாணவர்களும் காலை 8.30 மணிமுதல் மாலை 7.00 மணிவரை சதுரங்கம் விளையாடலாம்.

## கரம்

கரம் குழுவுக்கு ஒரு விசேட அறை ஒதுக்கப்பட்டுள்ள அதேவேளை, குழு உறுப்பினர்களுக்குத் தேவையான உபகரணங்கள் வழங்கப்படுகின்றன. ஏனைய மாணவர்கள் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் வேறாக விளையாடுவர். அவர்கள் காலை 8.30 மணிமுதல் மாலை 7.00 மணிவரை கரம் விளையாடலாம்.

## கராட்டி

இவ்விளையாட்டுக்கான அடிப்படை வசதிகள் பிரதான உடற்பயிற்சிச் சாலையில் வழங்கப்படுகின்றன. இதற்கான பயிற்சி அமர்வுகள் குழு உறுப்பினர்களுக்கும் ஏனைய பயிலுனர்களுக்கும் வெவ்வேறாக வழங்கப்பட்டுள்ளன.

## பாரம் தூக்குதல்

இதற்கு ஒரு பிரத்தியேக அறை ஒதுக்கப்பட்டுள்ளது. அதேவேளை, எல்லா ஆண் பெண் பாரம் தூக்குனர்களுக்கும் அதியுயர் தரத்திலான விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது.

## குத்துச் சண்டை

இந்த விளையாட்டுக்குத் தனி அறை ஒதுக்கப்பட்டுள்ளதுடன் எல்லா குழு உறுப்பினர்களும் புதிய பயிலுனர்களும் பயிற்சி நடவடிக்கைகளில் பங்குகொள்ளக்கூடியதாக உள்ளது.

**பல்கலைக்கழக முழு சமூகத்தினதும் உடல் ஆரோக்கியத்தை அபிவிருத்தி செய்வதற்கான வசதி வாய்ப்புக்களை வழங்குதல்**

**யோகா நிகழ்ச்சி**

யோகா நிகழ்ச்சி கீழ்வரும் நாட்களில் உடற்பயிற்சி அரங்கின் சிறப்புத் தேர்ச்சி பெற்ற யோகா பயிற்றுநர் ஒருவரினால் மேற்கொள்ளப்படுகின்றது. இந்த நிகழ்ச்சியானது பெரும்

எண்ணிக்கையான கல்வி சார் மற்றும் கல்விசாரா ஊழியர்களின் வரவின் மூலம் மிகப்பெரிய வெற்றியை ஏற்படுத்தியுள்ளது.

செவ்வாய்க் கிழமை – பி.ப 3.00 – பி.ப 5.00 மணி வரை

வெள்ளிக் கிழமை – பி.ப 3.00 – பி.ப 5.00 மணி வரை

## வான் விளையாட்டு

கீழ் வரும் நாட்களில் வான் விளையாட்டு நிகழ்ச்சிகள் வான் விளையாட்டுப் பயிற்றுநர் ஒருவரினால் மேற்கொள்ளப்படுகின்றது. பெருந்தொகையான மாணவர்களும் ஊழியர்களும் இதனைக் கண்டு மகிழ்வர்.

திங்கள் - பி.ப 4.00 – 6.00 மணி

புதன் கிழமை – பி.ப 4.00 – 6.00 மணி

## நீச்சல்

பின்வரும் நேர அட்டவணைக்கு அமைய நீச்சல் பயிற்சிகள் ஆரம்ப குழுவினர்களுக்கு (மாணவர்கள் , ஊழியர்கள்) இரு பயிற்றுவிப்பாளர்களின் தலைமையின் கீழ் இடம்பெறுகின்றது.

செவ்வாய்க்கிழமை – மாலை 6.00 – 8.00 மணி வரை

வியாழக்கிழமை – மாலை 4.00 மணி முதல் - 6.00 மணிவரை

## உடல் உறுதி நிகழ்ச்சி

பல்கலைக்கழக சமூகத்திற்கு எமது துறையின் பயிற்றுவிப்பாளர்கள் மூலம் இந்த வசதி வழங்கப்படுகின்றது.

## மைதானத்தின் கீழ்ப் பகுதியை விருத்தி செய்தல்

விளையாட்டில் ஈடுபடுகின்ற மாணவர்கள் மற்றும் உடற்கல்வித் துறையினருக்கு இது ஒரு பெரிய தேவையாக உள்ளது.

இதனடிப்படையில், கீழ் மட்ட மைதானத்தை விருத்தி செய்வதற்கான அடிப்படை வசதி ஒழுங்குகள் ஆரம்பிக்கப்பட்டது.

## நீச்சல் தடாக வளாகத்தை விருத்தி செய்தல்

இந்தத் திட்டம், இத்துறையில் ஆரம்பிக்கப்பட்ட அடிப்படைத் திட்ட விவகாரங்களை விருத்தி செய்வதற்காகவும் பாதுகாப்பதற்காகவும் ஆரம்பிக்கப்பட்டது.

## கிரிக்கெட் வலையமைப்பு

உடற்கல்வித் துறையின் வேண்டுகோலுக்கு இணங்க, உயர் கல்வி அமைச்சு ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட இந்த திட்டத்துக்கு நிதியுதவியினை வழங்கியது.

**இரண்டு மாடி கட்டடம் - ஓய்வு அறை , விளையாட்டு உபகரணங்கள் அறை**

கட்டிட வேலைகள் மைதானத்தின் உயர் மட்ட பகுதியில் ஆரம்பிக்கப்பட்டன.

## பொது நிர்வாகம் மற்றும் சேவைகள் பிரிவு

பொது நிர்வாகம் மற்றும் சேவைகள் பிரிவு கல்வி மற்றும் கல்வி சாரா தேவைகளுக்கு போக்குவரத்து வசதிகள், தொடர்பாடல் வசதிகள், தபால் வசதிகள், ஊழியர்களுக்கான வீட்டு வசதிகள், பத்திரிகைகளை வழங்குதல் மற்றும் தீயணைப்பு ஆகியன உட்பட உள்ளக கட்டமைப்பு வசதிகளை வழங்குகின்றது. பொது நிர்வாகம் மற்றும் சேவைகள் பிரிவு உதவிப் பதிவாளர், 02 கணினி உதவியாளர்கள், 3 எழுது வினைஞர்கள், 01 முகாமைத்துவ உதிவியாளர், வரவேற்பாளர், தொலைபேசி இயக்குநர், 41 சாரதிகள், 02 லொறி சுத்திகரிப்பாளர்கள், 06 தொழிலாளர்கள் உட்பட 56 ஊழியர்களைக் கொண்டதாகக் காணப்படுகின்றது.

இப்பல்கலைக்கழகம் 12 கார் வண்டிகள். 3 ஜீப் வண்டிகள், 7 பஸ் வண்டிகள், 11 வேன் வண்டிகள், 5 கெப் வண்டிகள், 2 அம்பியுலன்ஸ் வண்டிகள், ஒரு டிரக்டர், 2 கை டிரக்டர்கள், 2 மோட்டார் சைக்கிள்கள் ஒரு முச்சக்கரவண்டி உட்பட 45 வாகனங்களைக் கொண்டுள்ளது. கடந்த இரண்டு வருடங்களுக்குள் புதிதாக 06 வாகனங்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டன. இவற்றுள் 04 வாகனங்கள் நிதி லீசிங் அடிப்படையிலும், பல்கலைக்கழக அபிவிருத்தி நிதியத்தின் மூலம் 02 வாகனங்களும் கொள்வனவு செய்யப்பட்டன. தொலைத்தொடர்பு வசதிகளைப் பொறுத்த வரைக்கும் உள்ளக வலையமைப்பு வசதிகளை வழங்குகின்றது. தகவல் தொழிநுட்ப மையத்தின் சேவையின் மூலம் 09 நேரடி அலைவரிசைகளையும் வழங்குகின்றது. இலவச வீட்டு வசதிகள் விசேடமாக சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்ட ஒழுக்காற்று அதிகாரி, விடுதிப்பெறுப்பதிகாரி, பொறியியலாளர், பிரதான பாதுப்பு அதிகாரி, மின்சாரவியலாளர், மற்றும் நீர்க்குழாய் பொருத்துநர் போன்றோருக்கு வழங்கப்படுகின்றன. இந்தத் தேர்வு பல்கலைக்கழக வீட்டுக் குழுவினால் நிர்வகிக்கப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக கல்வி சார் ஊழியர்கள், நிர்வாக ஊழியர்கள், கல்விசாரா ஊழியர்களுக்கு மாதாந்த வாடகை அடிப்படையில் நலன்புரி வசதியாக சில வீடுகள் வழங்கப்படுகின்றன. வருடாந்த தீயணைப்பு கருவிகள் தொடர்பான மேற்பார்வையும் மீள் நிரப்பலும் தீயணைப்புப் படையின் உதவியுடன் மேற்கொள்ளப்படுகின்றன.

சாரதிகளுக்கும் சுத்திகரிப்பாளர்களுக்குமாக அவர்களுடைய அறிவு மற்றும் வீதி ஒழுங்குகள் மற்றும் நெறிமுறைகள் என்பவற்றை விருத்தி செய்யும் வருடாந்த பயிற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**விசேட நிகழ்வுகள்**

- மார்ச் மாதம் 2017 அம் ஆண்டு 178 தீயணைப்பு கருவிகள் மீள் நிரப்பப்பட்டன
- நான்கு வருடங்களுக்கு மேலதிகமாக பாவிக்கப்பட்ட வாகனங்கள் 04, 2017 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் விற்பனைசெய்யப்பட்டன.
- நவம்பர் 2017 ஆம் ஆண்டு 54 ஆசனங்களைக் கொண்ட பஸ் வண்டி ஒன்று பிரயோக விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த பீட அபிவிருத்தி நிதியத்தினால் கொள்வனவு செய்யப்பட்டது.
- 2017 ஆம் ஆண்டு மாறவிலவில் சாரதிகளுக்கும் சுத்திகரிப்பாளர்களுக்குமான பயிற்சி நிகழ்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

## ஊழியர் அபிவிருத்தி நிலையம்

ஊழியர் அபிவிருத்தி நிலையம் 2017 ஆம் ஆண்டு கல்வி சார் மற்றும் கல்வி சாரா ஊழியர்களுக்கு பின்வரும் நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொண்டது. பகுதி நேர அடிப்படையில் மருத்துவக் கல்வி மற்றும் சுகாதார விஞ்ஞானத் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி.ஆர்.பீ.மாரசிங்க அவர்கள் ஊழியர் அபிவிருத்தி நிலையத்தின் தலைவராக செயற்பட்டார்.

ஊழியர் அபிவிருத்தி நிலையத்தினால் 2017 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட பயற்சிப் பட்டறைகள் தொடர்பான தகவல்கள் வருமாறு:

| No. | நிகழ்ச்சித் திட்டம் | திகதி | தலைப்பு | இலக்குக் குழு |
|---|---|---|---|---|
| 01 | பயிற்சிப் பட்டறை | 27.01.2017 | சிறந்த பெறுபேற்றிற்காக வேலை செய்தல் தொடர்பான பயிற்சிப் பட்டறை | தொழிநுட்ப ஊத்தியோகத்தர்கள், கணினி விண்ணப்ப உதவியாளர்கள், எழுது வினைஞர் மற்றும் அதற்கு நிகரான ஏனைய ஜயவர்தன புரப் பல்கலைக்கழக ஊழியர்கள் |
| 02 | பயிற்சிப் பட்டறை | 01.02.2017 | சிறந்த பெறுபேற்றிற்காக வேலை செய்தல் தொடர்பான பயிற்சிப் பட்டறை | தொழிநுட்ப உத்தியோகத்தர்கள், கணினி விண்ணப்ப உதவியாளர்கள், எழுது வினைஞர் மற்றும் அதற்கு நிகரான ஏனைய ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக ஊழியர்கள் |
| 03 | பயிற்சிப் பட்டறை | 17.02.2017 | சிறந்த பெறுபேற்றிற்காக வேலை செய்தல் தொடர்பான பயிற்சிப் பட்டறை | ஆய்வு கூட உதவியாளர்கள், நூலக உதயியாளர்கள், ஊழியர்கள் மற்றும் அதற்கு நிகரான ஏனைய ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக ஊழியர்கள் |
| 04 | பயிற்சிப் பட்டறை | 21.02.2017 | சிறந்த பெறுபேற்றிற்காக வேலை செய்தல் தொடர்பான பயிற்சிப் பட்டறை | ஆய்வு கூட உதவியாளர்கள், நூலக உதயியாளர்கள், ஊழியர்கள் மற்றும் அதற்கு நிகரான ஏனைய ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக ஊழியர்கள் |
| 05 | பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | 09.01.2017<br>16.01.2017<br>23.01.2017<br>30.01.2017<br>13.02.2017<br>20.02.2017<br>27.02.2017<br>06.03.2017<br>13.03.2017<br>20.03.2017<br>27.03.2017<br>03.04.2017<br>05.06.2017<br>12.06.2017 | தமிழ் மொழி பயிற்சித் திட்டம் | ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் கல்வி ஊழியர்கள் மற்றும் பதவிநிலை உத்தியோகத்தர்கள் |
| 06 | பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | 14.03.2017<br>21.03.2017<br>28.03.2017<br>04.04.2017<br>25.04.2017<br>02.05.2017<br>16.05.2017<br>23.05.2017 | ஆங்கில மொழி பயிற்சித் திட்டம் | இணைத் தர ஊழியர்களுக்கானது |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 30.05.2017<br>06.06.2017<br>13.06.2017<br>20.06.2017<br>27.06.2017<br>04.07.2017<br>11.07.2017<br>18.07.2017<br>25.07.2017<br>01.08.2017<br>08.08.2017<br>15.08.2017<br>29.08.2017<br>12.09.2017<br>19.09.2017<br>03.10.2017<br>19.12.2017 | | |
| 07 | 06 மாத பாடநெறி | 21.04.2017<br>19.05.2017<br>02.06.2017<br>16.06.2017<br>30.06.2017<br>14.07.2017<br>28.07.2017<br>11.08.2017<br>18.08.2017<br>19.08.2017<br>20.08.2017<br>15.09.2017<br>29.09.2017<br>20.10.2017<br>27.10.2017<br>17.11.2017<br>24.11.2017<br>08.12.2017<br>29.12.2017 | உயர் கல்வி கற்பித்தல் தொடர்பான சான்றிதழ்ப் பயிற்சிப் பாடநெறி(CTHE) 2017 | உதவி விரிவுரையாளர்கள் மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் |
| 08 | பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | 15.06.2017<br>22.06.2017<br>06.07.2017<br>13.07.2017<br>20.07.2017<br>27.07.2017<br>03.08.2017<br>10.08.2017<br>17.08.2017<br>24.08.2017<br>31.08.2017<br>21.09.2017<br>28.09.2017<br>12.10.2017<br>19.10.2017<br>26.10.2017<br>02.11.2017<br>09.11.2017<br>23.11.2017<br>14.12.2017<br>21.12.2017<br>28.12.2017 | ஆங்கில மொழிப் பயிற்சித் திட்டம் | எழுது வினைஞர் மற்றும் அதற்கு நிகரான ஊழியர்கள் |

| | | | | |
|---|---|---|---|---|
| 09 | பகல் நேர கலந்துரையாடல் | 16.06.2017 | கல்வியாளர்களுக்கான கண்காட்சி தொடர்பாடல் தொடர்பான பகல் நேர கலந்துரையாடல் | ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் கல்விசார் ஊழியர்கள் |
| 10 | பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | 21.06.2017 | தீ பாதுகாப்பு பயிற்சி தொடர்பான பயிற்சிப் பட்டறை | ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் கல்விசாரா ஊழியர்கள் |
| 11 | தொழில் அபிவிருத்திப் பயிற்சிப் பாடநெறி | 07.06.2017<br>08.06.2017 | பயிற்சிப் பட்டறைகள்,<br>(i) மாணவர்களுக்கான சிறப்பு ஆலோசனையும் மேற்பார்வையும்<br>(ii) தர நிர்ணய இயக்கத்தினூடாக பிரயோக விஞ்ஞான கல்வித் தரத்தை விருத்தி செய்தல்<br>(iii) கல்விசார் ஊழியர்களுக்கான நிர்வாக முறைமைகள் | பிரயோக விஞ்ஞான பீட கல்விசார் ஊழியர்கள், ஹிக்கடுவை, - ஹிக்கா டிரான்ஸ் |
| 12 | தொழில் அபிவிருத்திப் பயிற்சிப் பாடநெறி | 19.06.2017 | *பிரபாஸ்வர ஜீவிதயக்* தொடர்பான வேலைத் திட்டம் | கண்காணிப்பு பிரிவின் கல்விசாரா ஊழியர்கள் மற்றும் பாதுகாப்பு ஊழியர்கள், வில்லா ஓஷன் வீவ் ஹொடல், வாத்துவ |
| 13 | பயிற்சிப் பட்டறை | 04.07.2017 | பலனை அடிப்படையாகக் கொண்ட கல்வி (கற்றல் - கற்பித்தல்) மற்றும் பாடத்திட்ட ஒழுங்கமைப்பு | தொழிநுட்பவியல் பீடத்தின் கல்வி மற்றும் நிர்வாக ஊழியர்கள் |
| 14 | பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | 24.07.2017<br>14.08.2017<br>21.08.2017<br>28.08.2017<br>11.09.2017<br>18.09.2017<br>25.09.2017<br>09.10.2017<br>23.10.2017<br>30.10.2017<br>27.11.2017<br>04.12.2017<br>11.12.2017<br>18.12.2017 | தமிழ் மொழிப் பயிற்சிப் பாடநெறி | ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் கல்விசாரா ஊழியர்கள் |
| | தொழில் அபிவிருத்திப் பயிற்சித் திட்டம் | 14.07.2017 | குழு வேலை தொடர்பான பயிற்சிப் பட்டறை | நலன்புரிப் பிரிவின் கல்வி சாரா ஊழியர்கள், கொல்லோன்னோ ரிவர் சைட் கார்டன் ஹொட்டல், அவிஸ்ஸாவெல்லை |
| 15 | பயிற்சிப் பட்டறை | 29.08.2017 | கல்வி நூல் திருட்டுத் தடுப்பும் மென்பொருள் பாதுகாப்பும் தொடர்பான வேலைத்திட்டம் | பீடாதிபதிகள், துறைத் தலைவர்கள் அவர்களை பிரதிநிதித்துவப்படுத்துவோர் |
| 16 | தொழில் அபிவிருத்திப் பயிற்சித் திட்டம் | 12.08.2017<br>13.08.2017 | *பிரபாஸ்வர ஜீவிதயக்* தொடர்பான வேலைத் திட்டம் | மருத்துவ விஞ்ஞான பீட கல்விசாரா ஊழியர்கள் - அமாயா பீச் ஹொட்டல் பாசிக்குடா |

| | | | | |
|---|---|---|---|---|
| 17 | பகல் நேர கலந்துரையாடல் | 15.09.2017 | அவுஸ்திரேலியாவில் புலமைப் பரிசில் வாய்ப்புகள் தொடர்பான பகல் நேர கலந்துரையாடல் | ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் கல்விசாரா ஊழியர்கள் |
| 18 | தொழில் அபிவிருத்திப் பயிற்சித் திட்டம் | 09.12.2017<br>10.12.2017 | பயிற்சிப் பட்டறைகள்<br>(i) நிர்வாகம் மற்றும் நிதி நடவடிக்கைகள் தொடர்பான பிரச்சினைகளும் அவற்றுக்கான தீர்வுகளும்<br>(ii) நேர் முக சிந்தனைகள் - (இரு அமர்வுகள்) | நிர்வாக கட்டமைப்பு மற்றும் உடற் கல்விப் பிரிவின் கல்வி சாரா ஊழியர்கள் - சிடரஸ் ஹொட்டல், வஸ்கடுவ |
| 19 | தொழில் அபிவிருத்திப் பயிற்சித் திட்டம் | 09.12.2017 | (i) நிர்வாகம் மற்றும் நிதி நடவடிக்கைகள் தொடர்பான பிரச்சினைகளும் அவற்றுக்கான தீர்வுகளும் தொடர்பான வேலைத் திட்டம் | பொறியியற் பீட கல்வி சாரா ஊழியர்கள் - *க்லப் பாம் பேய்* , மாறவில |
| 20 | பயிற்சிப் பட்டறை | 27.12.2017 | தர நிர்ணயம் மற்றும் ஆய்வு நடவடிக்கைகள் தொடர்பான பயிற்சிப் பட்டறைகள் | தொழிநுட்பவியல் பீட கல்வி மற்றும் பதவி நிலை உத்தியோகத்தர்கள் |
| 21 | தொழில் அபிவிருத்திப் பயிற்சித் திட்டம் | 29.12.2017<br>30.12.2017 | பயிற்சிப் பட்டறைகள்<br>(i) விஞ்ஞான மற்றும் பொருளாதார சிக்கன முறையிலான வாகன ஓட்டல்<br>(ii) வீதிப்போக்குவரத்து மற்றும் வீதி விபத்துக்களைத் தவிர்ப்பது எவ்வாறு?<br>(iii) நல்மனப்பாங்குகளும் உறவு முறைகளைக் கட்டியெழுப்புதலும் | ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்ககழ சாரதிகள் மற்றும் சுத்திகரிப்பாளர்கள் - *க்லப் பாம் பேய்* , மாறவில |
| 22 | டோஸ் மாஸ்டர்ஸ் சமுதாயக் கழகம் | 11.01.2017<br>25.01.2017<br>08.02.2017<br>22.02.2017<br>01.03.2017<br>15.03.2017<br>25.03.2017<br>29.03.2017<br>05.04.2017<br>08.04.2017<br>22.04.2017<br>26.04.2017<br>06.05.2017<br>17.05.2017<br>20.05.2017<br>31.05.2017<br>14.06.2017<br>28.06.2017<br>12.07.2017<br>26.07.2017<br>09.08.2017<br>23.08.2017 | ஜயவர்த்தனபுர பல்கலைக்கழத்தின் வாழ்த்து அணியினரின் ஒன்றுகூடல் | ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் கல்விசாரா ஊழியர்கள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 30.08.2017<br>06.09.2017<br>09.09.2017<br>13.09.2017<br>27.09.2017<br>07.10.2017<br>11.10.2017<br>21.10.2017<br>25.10.2017<br>08.11.2017<br>11.11.2017<br>22.11.2017<br>02.12.2017<br>13.12.2017<br>16.12.2017<br>20.12.2017 | | |

## வெளிவாரிப் பட்டம் மற்றும் தொலைக் கல்விப் பிரிவு

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பரீட்சைகள் பிரிவு 1979 ஆம் ஆண்டு வர்த்தக வெளிவாரிப் பட்டப் படிப்பு நிகழ்ச்சித் திட்டத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. இதற்கு நிகராக கலைமாணிப் பொது வெளிவாரிப் பட்ட நிகழ்ச்சித் திட்டமும் ஆரம்பமானது. 1997 ஆம் ஆண்டு வியாபார நிர்வாகம் மற்றும் பொது நிர்வாகம் தொடர்பான பொது வெளிவாரி விஞ்ஞானமாணிப் பட்டமும் ஆரம்பிக்கப்பட்டது. கலைமாணி வெளிவாரிப் பட்டம் மற்றும் வியாபார நிர்வாகம் தொடர்பான பொது வெளிவாரிப் பட்டம் என்பன மாணவர்களுக்கு மத்தியில் மகவும் பிரபல்யமடைந்து வருகின்றன.

2010 ஒக்டோபர் 15 ஆம் திகதிய பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவின் இலக்கம் 932 ஆம் இலக்க சுற்று நிருபத்தின் அடிப்படையில் வெளிவாரிப் பரீட்சைகள் பிரிவு அமைப்பு ரீதியாக வெளிவாரிப் பட்டம் மற்றும் தொலைக் கல்விப் பிரிவு என மாற்றியமைக்கப்பட்டது.

வெளிவாரிப் பட்டம் மற்றும் தொலைக் கல்விப் பிரிவின் முகாமைத்துவக் குழுவின் கட்டமைப்பு வருமாறு:

1. உபவேந்தர் - (தலைவர்)
2. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பிரதிநிதி
3. பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் ஆலோசனைச் சபையிலிருந்து இரண்டு பிரதிநிதிகள்
4. பீடங்களின் பீடாதிபதிகள் (மானுடவியல் மற்றும் சமூகவியல் விஞ்ஞான பீடம், முகாமைத்துவம் மற்றும் வர்த்தக பீடம்)
5. கல்விச் சபையின் உறுப்பினர்கள்
6. பதிவாளர்
7. கணக்கதிகாரி
8. வெளிவாரிப்பட்டம் மற்றும் தொலைக் கல்விப் பிரிவின் பணிப்பாளர்
9. சிரேஷ்ட உதவிப் பதிவாளர் - வெளிவாரிப்பட்டம் மற்றும் தொலைக் கல்விப் பிரிவு
10. சிரேஷ்ட உதவி கணக்கதிகாரி - வெளிவாரிப்பட்டம் மற்றும் தொலைக் கல்விப் பிரிவு

2014 ஆம் ஆண்டு முதல் புதிய பாடத்திட்டத்தின் கீழ் வெளிவாரிப்பட்டம் மற்றும் தொலைக் கல்விப் பிரிவு பின்வரும் பட்டப்படிப்பு பாடநெறி நிகழ்ச்சிகளை அறிமுகப்படுத்தியது.

## மானுடவியல் மற்றும் சமூகவியல் விஞ்ஞான பீடம்

- மானுடவியல் மற்றும் சமூகவியல் விஞ்ஞான கலைமாணி பொது வெளிவாரிப் பட்டம்
- ஆங்கிலம் கலை மாணி வெளிவாரிப் பட்டம் (பொது)
- சமூக விஞ்ஞானம் கலைமாணி பொது சுற்றாடல் மற்றும் அபிவிருத்தி கற்கைகள் வெளிவாரிப் பட்டம்

## முகாமைத்துவம் மற்றும் வர்த்தக பீடம்

- வர்த்தக நிர்வாகம் விஞ்ஞானமாணி (பொது) வெளிவாரிப் பட்டம்
- பொது முகாமை விஞ்ஞானமாணி (பொது) வெளிவாரிப் பட்டம்
- வர்த்தக மாணி (பொது) வெளிவாரிப் பட்டம்

**2107 ஆம் ஆண்டு மாணவர்களின் உள்வாங்கல் பின்வருமாறு:**

- மானுடவியல் மற்றும் சமூகவியல் விஞ்ஞான கலைமாணி பொது வெளிவாரிப் பட்டம் - 1200
- ஆங்கிலம் கலை மாணி வெளிவாரிப் பட்டம் (பொது) - 388
- சமூக விஞ்ஞானம் கலைமாணி பொது சுற்றாடல் மற்றும் அபிவிருத்தி கற்கைகள் வெளிவாரிப் பட்டம் - 109
- வர்த்தக நிர்வாகம் விஞ்ஞானமாணி (பொது) வெளிவாரிப் பட்டம் - 439
- பொது முகாமை விஞ்ஞானமாணி (பொது) வெளிவாரிப் பட்டம் - 450
- வர்த்தக மாணி (பொது) வெளிவாரிப் பட்டம் - 437

வெளிவாரிப்பட்டம் மற்றும் தொலைக் கல்விப் பிரிவின் முகாமைத்துவக் குழு இலங்கையில் ஆங்கிலக் கல்வியை மேம்படுத்தும் தேசிய தேவையை அடிப்படையாகக் கொண்டு மனித வளங்களை அதிகரித்துக் கொள்வதற்கு ஆங்கிலம் கலை மாணி வெளிவாரிப் பட்டம் (பொது)ப் பாடநெறிக்கு உள்வாங்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்குப் பரிந்துரை செய்தது. இதனடிப்படையில் பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழு 2010 ஒக்டோபர் 15 ஆம் திகதிய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் இலக்கம் 932 ஆம் இலக்க சுற்று நிருபத்தின் அடிப்படையில் உள்வாங்கப்படும் மாணவர்களின் உச்சத் தொகையை அதிகரிப்பதற்கு அனுமதியை வழங்கியது.
2017 ஆம் ஆண்டின் வெளிவாரிப் பட்டப்படிப்பு பாடநெறிகளுக்கு மாணவர்களை உள்வாங்குவதற்கு விண்ணப்பங்களைக் கோருவதற்காக நேரடி வலைப்பின்னல் (on-line) முறையினை பயன்படுத்தியது. அதேவேளை, ஒரு தரமான பட்டதாரியை உருவாக்கும் நோக்குடன் பட்டப்படிப்பின் ஒவ்வொரு பாடங்களுக்கும் 40 மணித்தியாலங்கள் கொண்ட விரிவுரைகளை முன்னெடுத்தது.

2017 ஆம் ஆண்டு வெளிவாரிப் பட்டத்திற்கு பதிவுசெய்யப்பட்ட மாணவர்களில் மானுடவியல் மற்றும் சமூகவியல் பீட பட்டதாரி மாணவர்களுக்கு 05 ஆரம்ப நிகழ்வுகளும் வர்த்தகம் மற்றும்

முகாமைத்துவ மாணவர்களுக்கு 03 வெளிவாரிப் பட்ட நிகழ்வுகளும் இடம்பெற்றன. ஆரம்ப நிகழ்வின்போது மாணவர்கள் முகாமைத்துவ முறைகளைக் கற்றல், அதனால் வழங்கப்படும் பயன் மற்றும் வசதிகள் மற்றும் சேவைகள் என்பவற்றை கற்றுக் கொள்ளல் என்பன பற்றி அறிவுறுத்தப்பட்டனர்.

வெளிவாரிப்பட்ட நிகழ்வுகளின்போது கையேடுகளையும் கடந்தகால வினாத்தாள்களையும் அதற்கான விடைகளையும் பதிவிறக்கம் செய்து கொள்வதற்கு LMS முறையினூடாக வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

வெளிவாரிப்பட்டம் மற்றும் தொலைக் கல்விப் பிரிவின் இணையத் தளம் நாளுக்கு நாள் செம்மைபடுத்தப்படுகின்றது. வெளிவாரிப் பட்டங்களுக்கு விண்ணப்பங்களை முன்வைப்பதற்கு வசதிகள் கிடைக்கப்பெறுகின்றன. அதேபோல் கருத்தரங்கு மற்றும் பரீட்சை விண்ணபப்ங்களையும் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். வெளிவாரிப்பட்டம் மற்றும் தொலைக் கல்விப் பிரிவின் கருத்தரங்கு மற்றும் பரீட்சைகளுக்கான நேரசூசிகளும் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்படுகின்றன. 2017 ஆம் ஆண்டுக்காக பதிவுசெய்யப்பட்ட பட்டதாரி மாணவர்களுக்கு கருத்தரங்குகள் நடாத்தப்பட்டன.

## தகவல் தொழிநுட்ப சேவைகளுக்கான மத்திய நிலையம் (CITS)

தகவல் தொழிநட்ப சேவைகளுக்கான மத்திய நிலையம் பல்கலைக்கழகத்தின் ஒரு இணைப் பகுதியாகும். இது பல்கலைக்கழக வளாகத் தகவல் தொழிநுட்ப கட்டமைப்பையும், இணையத்தள மின்னஞ்சல் வசதிகளையும் நிர்வாக சேவைகள், தொழிநுட்ப சேவைகளைக் கண்காணித்தல், தகவல் தொழிநுட்பத்துடன் தொடர்புடையதான விண்ணப்பங்களை வழங்கல் இவற்றுக்கான தீர்வுகளை பல்கலைக்கழக மாணவர்களுக்கும் ஊழியர்களுக்கும் வழங்குதல் என்பவற்றினை மேற்கொள்கின்றது. இதன் ஒரு பகுதி CITS பல்கலைக்கழக இணையத்தளத்தை அபிவிருத்தி செய்தல், கண்காணித்தல் என்பவற்றை மேற்கொள்கின்றது. இதன் மற்றுமொரு பகுதி ஊடகக் குழுவினை முழுமையாகப் பலப்படுத்துகின்றது.

திரு.ஹர்ஷ முனசிங்க அவர்கள் CITS இன் பொறுப்பதிகாரியாக இருந்து அதனை நிர்வகித்தார். மேலும் திரு வஜிர, திரு பிரேமதாச மற்றும் திரு நெத்சிறி ஜயவீர ஆகியோர் கணினி பயிற்றுவிப்பாளர்களாகப் பணிபுரிகின்றனர். திரு சுரேஸ் நாணயக்கார உதவி வலைப்பின்னல் முகாமையாளராக நியமிக்கப்பட்டார். செல்வி அசேல நில்மினி கணினி நிகழ்ச்சித்திட்ட பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டதோடு திரு ரேணுக எதிரிசூரிய மற்றும் திரு கிஹான் சந்தருவன் ஆகியோர் தற்காலிக நிகழ்ச்சிப் பொறுப்பதிகாரிகளாக நியமிக்கப்பட்டனர். திர உபுல் வீரதுங்க திருமதி. தினிதி வீரசிங்க மற்றும் திரு. எஸ். கே. குருகே ஆகியோர் தொழிநுட்ப உத்தியோகத்தர்களாகவும் நியமிக்கப்பட்டனர். திரு பிரேமரத்ன ஆய்வுகூட ஊழியராகவும் சாந்த குமார மற்றும் ஏனைய தற்காலிக ஊழியர்கள் பலர் ஊடக நிலையம் மற்றும் இணையக் குழுவுடன் இணைக்கப்பட்டு குறிப்பிட்ட வருடத்தின் விடயப் பொருளை நிறைவு செய்தனர்.

தகவல் தொழிநுட்ப சேவைகள் நிலையத்தினால் வழங்கப்படும் ஏனைய இணை சேவைகள் பற்றிய விபரங்கள் வருமாறு:

- பல்கலைக்கழக மின்னஞ்சல் சேவையை முகாமை செய்தல்
- இணையத்தள வசதிகளை முகாமை செய்தலும் வழங்குதலும்
- மின் சேவைகளைப் பராமரித்துலும் சேவை வழங்கியை நிர்வகித்தலும்
- தகவல் முகாமை முறையினை வடிவமைத்தலும் விருத்தி செய்தலும்
- நார் கண்ணாடி முள்ளந்தண்டினை நிர்வகித்தலும் விருத்தி செய்தலும்
- உள்ளக வலைப்பின்னல் வசதிகளை ஆரம்பித்தலும் வடிவமைத்தலும்
- வை - பை வசதிகளை அபிவிருத்தி செய்தலும் கண்காணித்தலும்
- பல்கலைக்கழக இணையத்தள வசதிகளை ஆரம்பித்தலும் வடிவமைத்தலும்

- இலத்திரனியல் ஊடக வசதிகளை வழங்குதல்
- உட்செலுத்துதலை மேற்பார்வை செய்தல், உள்ளக வலையமைப்பு திட்டத்தினை இயற்றுதல், கண்காணித்தல்
- நீதியை உட்செலுத்துதல்,VOIP தொகுதியை பராமரித்தல் மற்றும் செயற்படுத்தல்
- தகவல் தொழிநுட்ப உபகரணத்தில் ஏற்படும் பிரச்சினைகளை சீர்செய்தல் மற்றும் பராமரித்தல்
- மென்பொருளை உட்செலுத்துதல் மற்றும் பாதுகாப்பு மென்பொருளை வழங்குதல்
- தொழிநுட்ப மதிப்பீடுகள் மற்றும் நிர்மான வேலையின் விபரங்களை தயார் செய்தல்
- பல்கலைக்கழக ஊழியர்களுக்கு விசேட பயிற்சிகளை வழங்குதல்
- மாணவர்களுக்கான விசேட கணினி, பல்தகவல் தொழிநுட்ப பாடநெறிகளை வழங்குதல்
- பல்கலைக்கழக ஊழியர்களுக்குத் தேவையான தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப தேவைப்பாடுகளுக்கு உதவி செய்தல்
- ஆலோசனை சேவைகள் மற்றும் தொழிநுட்ப உதவிகளை மாணவர்களுக்கு வழங்குதல்

## நூலகம்

நூலகத்தில் நூலகர் திருமதி.கலாநிதி சயனா விஜேசுந்தர அவர்களின் தலைமையின் கீழ் பிரதி நூலகர் ஒருவர், சிரேஷ்ட உதவி நூலகர்கள் ஐவர், உதவி நூலகர்கள் இருவர், உதவிப் பதிவாளர் ஒருவர் (நூலக சேவை) உட்பட 49 கல்விசாரா ஊழியர்கள் 2017 ஜுலை மாதம் வரை நூலக சேவையில் இருந்தனர். கடந்த ஐந்து வருட காலப்பகுதிக்குள், 05 உதவி நூலகர்களும் 08 கல்விசாரா ஊழியர்களும் இணைந்து கொண்டனர். 15 ஆம் திகதி மே மாதம் 2017 ஆம் ஆண்டு நூலகர் தனது கல்வி விடுமுறையினைப் பூர்த்திசெய்து கொண்டு மீண்டும் பதவியில் இணைந்து கொள்ளும் வரை திருமதி. சிராணி ரணசிங்க 2017 மே மாதம் வரை பதில் கடமை நூலகராக கடமையாற்றினார்.

ரூபா.12,296,677.26 இற்கு 67 வெளிநாட்டு, உள்நாட்டு சஞ்சிகைகள் கொள்வனவு செய்யப்பட்டன. இரண்டு இலத்திரனியல் அடிப்படை தகவல் இயந்திரங்களும் (JSTOR) (ரூபா 985,873.07) மற்றும் ஆய்வு தொடர்பானவை ரூபா 231, 893.48 இற்குமாக கொள்ளவனவு செய்யப்பட்டன. 1114 நூல்கள் (ரூபா 2,611,446.52 பெறுமதியானவை) 73 உள்நாட்டு வெளிநாட்டு சஞ்சிகைகள் ரூபா 82,369.49 பெறுமதியானவை) என்பன அன்பளிப்பாக கிடைக்கப்பெற்றன. ரூபா 13,004.46 பெறுமதியான சஞ்சிகைகள் 09 மாற்றீட்டு அடிப்படையில் கிடைக்கப்பெற்றன.

இதற்கு மேலாக, மேலதிக 03 மின்னியல் தகவல் இயந்திரம், எமரல்ட், டேய்லர், மற்றும் பிரான்சிஸ், ஒக்ஸ்போட் ஆகிய சஞ்சிகைகள் பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழு மூலம் நூலகத்துக்கு கையளிக்கப்பட்டன. வாசகர்களுக்கான ஆவணங்களை வெளியிடும் முறைமை CONSAL ஊடாக ஆரம்பிக்கப்பட்டது.

2017 ஆம் வருடம் 1356 தலைப்பிடப்பட்ட புத்தகங்களுள் 2914 பிரதிகள் செய்முறைப் பிரிவினால் முன்னளிக்கப்பட்டன. அவற்றுள் 45 புத்தகங்கள் சிலொன் அறைக்கும். (CR) 295

புத்தகங்கள் நிரந்தர வாசிப்பிற்கும் (PR) 484 புத்தகங்கள் முறைப்படுத்தப்பட்ட வாசிப்பிற்கும் (SR) 2090 இரவல் (L) கொடுப்பதற்குமாக ஒழுங்குசெய்யப்பட்டன.

70 கல்விசார் ஊழியர்களும், 55 கல்விசாரா ஊழியர்களும், 5183 பட்டதாரி மாணவர்களும் 257 பட்டப்பின்படிப்பு மாணவர்களுமாக 2017 ஆம் வருடம் மொத்தம் 5,565 வாசகர்கள் பதிவு செய்யப்பட்டனர். இவர்களுடன் இணைந்து பதிவு செய்யப்பட்ட மொத்த வாசகர்களின் எண்ணிக்கை 18,248 ஆகும்.

தகவல் வளங்கள் தொடர்பான விழிப்புணர்வை மேம்படுத்தவும், தகவல் இலக்கியத் திறன்களை மேம்படுத்தவும் நூலக கல்விசார் ஊழியர்களால் 34 வேலைப் பட்டறைகள் முன்னெடுக்கப்பட்டன. அவை, கல்விசார் ஊழியர்களுக்கு 01, பட்டதாரி மாணவர்களுக்கு 33 என்பனவாகும்.

2017 ஆம் ஆண்டு 02 கலாநிதிப்பட்ட கற்கைகளும், 01 பட்டப்பின் டிப்ளோமா கற்கையும், 03 பட்டப்பின் கற்கை நெறிகளும், 02 டிப்ளோமா கற்கைநெறிகளும் நூலக சேவையாளர்கள் மூலம் முன்னெடுக்கப்பட்டன.

# உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

## உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் அமைப்பும் தொழிற்பாடுகளும்

பிரதி உள்ளகக் கணக்காய்வாளரினால் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு நிர்வகிக்கப்படுகின்றது. வருடத்திற்கான உள்ளகக் கணக்காய்வுகள் தயாரிக்கப்பட்டு உள்ளகக் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் பரிந்துரையுடன் பல்கலைக்கழக சபைக்கு அதன் அனுமதிக்காக முன்வைக்கப்படுகின்றது.

## உள்ளகக் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு ஒன்று கூடல்கள்

உள்ளகக் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினை நியமிக்கும் பொறுப்பு பல்கலைக்கழக சபையின் பதவிநிலை உத்தியோகத்தர் அல்லாத சுயேச்சையான மூன்று உறுப்பினர்களைக் கொண்ட பல்கலைக்கழக சபைக்குரியதாகும்.

இது பல்கலைக்கழக சபையின் பதவி நிலை உத்தியோகத்தர் பிரிவிற்குள் அடங்காத உறுப்பினரான தலைவரினால் நிர்வகிக்கப்படுகின்றது. அதேநேரம் இன்னும் இரு பதவிநிலை பிரிவிற்குள் அடங்காத உறுப்பினர்களும் காணப்படுவர். 2017 ஆம் வருடம் இக்குழு 04 முறை கூடியதுடன் கீழ்வரும் முக்கிய விடயங்கள், தொடர்பில் கலந்துரையாடியது.

1. நிலவுகின்ற முறைமைகள், நடை முறைச் செயற்பாடுகள், விலகல்கள் தொடர்பில் மீளாய்வு செய்தல். தீர்மானங்களை பல்கலைக்கழக சபைக்கு அதன் அனுமதிக்காகவும் நிலவுகின்ற முறைமைகளை விருத்தி செய்வதற்குமாக முன்வைத்தல்.

2. கணக்காய்வாளர் நாயகத்தினால் எழுப்பப்பட்ட விசாரனைகளை மீளாய்வு செய்தலும் அவற்றுக்கான பதில்களை துறைத் தலைவர்களினூடாக அனுப்புதலும் துறைத்தலைவர்களினால் அது தொடர்பாக கலந்துரையாடப்பட்டு அப்பிழைகள் மீள ஏற்படாதவாறு பாதுகாத்தலும் சரியான முன்னேற்றத்தை ஏற்படுத்தலுமாகும்.

| 11.30-12.30 | உள்ளகத் தர நிர்ணயப் பிரிவுக் காரியாலயம் | ஆவண ஆய்வு |
| 12.30-13.30 | உள்ளகத் தர நிர்ணயப் பிரிவுக் காரியாலயம் | மதிய உணவு |
| 13.30-15.00 | உள்ளகத் தர நிர்ணயப் பிரிவுக் காரியாலயம் | மீளாய்வாரள்களின் ஒன்று கூடல் |
| 15.00-16.00 | நிர்வாகக் கட்டிட கூடல் அறை | துணைவேந்தர், பிரதித் துணைவேந்தர், பீடாதிபதிகள், பதிவாளர், கணக்கதிகாரி, நூலகர், பணிப்பாளர் (முகாமைத்துவ பட்டப்பின் கற்கைகள் நிலையம்), ஏனைய அனைத்து பணிப்பாளர்கள், பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர் உள்ளகத் தர நிர்ணயப் பிரிவு, உள்ளகத் தர நிர்ணயப்பிரிவு உறுப்பினர்கள் சுய மதிப்பீட்டு அறிக்கை எழுத்தளர்களுடனான இறுதிக் கருத்துரைச் சந்திப்பு |
| 16.00 | | பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறுதல் |

### 12.9 Wrap-up Session: சுற்று அமர்வு

சுற்று அமர்வு பிரயாணத்தின் 05 நாட்கள் இடம்பெற்றது. இது 2017.11.17 அன்று துணைவேந்தர், முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவன பணிப்பாளர், பீடாதிபதிகள்,உள்ளகத் தர நிர்ணயப்பிரிவின் பணிப்பாளர், உள்ளகத் தர நிர்ணயப்பிரிவின் பிரதிப் பணிப்பாளர்,EDECU வின் பணிப்பாளர், பதிவாளர், கணக்காளர், நூலகர், உள்ளக

தர நிர்ணயப்பிரிவின் செயலாளர், பீடங்களின் குழு இணைப்பாளர்கள், சுய மதிப்பீட்டு அறிக்கை எழுத்தாளர் குழுவினர்,உள்ளகத் தர நிர்ணயப் பிரிவின் செயலாளர், உள்ளகத் தர நிர்ணயப்பிரிவின் ஆய்வு உதவியாளர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள், மற்றும் உள்ளகத் தர நிர்ணயப் பிரிவின் ஊழியர்கள் உட்பட பலரும் பங்குகொண்டனர். இந்த அமர்விலே மீளாய்வுக் குழு பல்கலைக்கழகத்தின் சமூக அபிவிருத்தி நடவடிக்கைகள், ஆய்வு, கல்வி என்பவற்றுடன் இணைந்த நேர், மறை முக்கிய அம்சங்களை சுட்டிக்காட்டியது. இத்தகைய நடவடிக்கைகளுடன் தொடர்புடைய அபிவிருத்திகள் மற்றும் நல்ல பயிற்சிகள் தொடர்பில் கருத்துத் தெரிவித்ததோடு, தேவையான இடங்களில் அவற்றை அபிவிருத்தி செய்வதற்கும் பரிந்துரை செய்தார்கள். இரண்டு மாத காலப்பகுதிக்குள் பல்கலைக்கழகம் மீளாய்வு அறிக்கையைப் பெற்றுக் கொள்ளும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## 13 நிகழ்ச்சி மீளாய்வு – மானுடவியல் மற்றும் சமூகவியல் பீடம்

### 13.1 அறிமுகம்:

பட்டப் பின் கற்கைகள் நிகழ்ச்சியின் மீளாய்வானது நிகழ்ச்சி மீளாய்வின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இது மாணவர்களின் கற்றலை பாடத்திட்ட, பாடநெறி மற்றும் பாடத்திட்டத்தின் பகுதிகளைத் திட்டமிடல், விநியோகித்தல் என்பவற்றை நிகழ்ச்சி மட்டத்தின் மிகவும் ஆழமாக குவியப்படுத்தியதாக மதிப்பிடுவதுடன் மாணவர்களின் ஆதரவையும் கணிப்பீட்டையும் சிறந்த முறையில் விபரித்து மதிப்பிடுகின்றது. தரங்களுக்கும் நியமங்களுக்குமான பொறுப்புடைமையை அடைதல், சரியான மீளாய்வு நடைமுறையைப் பின்பற்றி நல்ல உள்ளகப் பயிற்சிகளைப் பெற்றுக் கொள்வதையும் அதற்கு இசைவாக்கமடைவதையும் ஊக்குவித்தல், தரமான கலாசாரத்தை புகட்டுதல், கற்றல் நிகழ்ச்சியில் தொடர்ச்சியான முன்னேற்றத்திற்கு வழிப்படுத்தல் என்பன நிகழ்ச்சி மீளாய்வின் ஒட்டுமொத்தமான நோக்கமாகும். அத்துடன் தன்னம்பிக்கையை வளர்த்தல் பொறுப்புடைமையை அடைதல், தகவல்களை வழங்குதல், புதுமையைப் புகுத்தலை காட்சிப்படுத்தல், முன்னேற்றுதல் என்பனவும் நிகழ்ச்சி மீளாய்வின் நோக்கமாகும். .

### 13.2 நிகழ்ச்சி மீளாய்வினது சுய மதிப்பீட்டு அறிக்கை (SER / PR)

கிழே தரப்பட்டுள்ள நிகழ்ச்சி மீளாய்வின் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள 156 நியமங்கள், 08 வகுப்பாக்கங்கள் என்பவற்றின் கீழ் நிகழ்ச்சி மீளாய்வினது சுய மதிப்பீட்டு அறிக்கையானது தனது சொந்த நிகழ்ச்சிகளை விமர்சன ரீதியாக மதிப்பீடு செய்வதற்கு கற்கைள் பீடத்தின் தேவையை வேண்டி நிற்கின்றது. அதற்கிணங்க, மானுடவியல் மற்றும் சமூகவியல் பீடத்தின் எல்லா கற்றல் நிகழ்ச்சிகளும் ஐந்து தொகுதிகளின் கீழ் சுயமதிப்பீட்டு அறிக்கையை தயார்செய்துள்ளன. ஒரு தொகுதி பொதுப்பட்டத்தையும் நான்கு தொகுதிகள் விசேட பட்டத்தையும் உள்ளடக்கியுள்ளது. ஐந்து தொகுதிக்குமுரிய சுய மதிப்பீட்டு அறிக்கை 30.06.2017 அன்று QAAC இற்கு சமரப்பிக்கப்பட்டது.

| வகுப்பாக்கங்கள் | மாணவர் எண்ணிக்கை |
|---|---|
| வகுப்பாக்கம் :1 நிகழ்ச்சி முகாமை | 27 |
| வகுப்பாக்கம் : 2 மானுட மற்றும் பௌதீக வளங்கள் | 12 |
| வகுப்பாக்கம் : 3 நிகழ்ச்சி வடிவமைப்பும் விருத்தியும் | 24 |
| வகுப்பாக்கம் : 4 பாடநெறி வடிவமைப்பும் அபிவிருத்தியும் | 19 |
| வகுப்பாக்கம் : 5 கற்றலும் கற்பித்தலும் | 19 |
| வகுப்பாக்கம் : 6 சூழலை அறிந்து கொள்ளுதல், மாணவர் சார்பு, முன்னேற்றம் | 24 |
| வகுப்பாக்கம் : 7 மாணவர் மதிப்பீடும் விருதுகளும் | 17 |
| வகுப்பாக்கம் : 8 புதுமையை புகுத்தலும் மாணவர் பயிற்சிகளும் | 14 |

**13.3 மானுடவியல் மற்றும் சமூகவியல் பீட நிகழ்ச்சி மீளாய்வுக்கான மீளாய்வுக் குழுவினது தொகுப்பும் களப்பயணத்துக்குரிய திகதிகளும்**

மானுடவியல் மற்றும் சமூகவியல் பீட நிகழ்ச்சி மீளாய்வுக்கான மீளாய்வுக் குழுவினது தொகுப்பும் களப்பயணத்துக்குரிய திகதிகளும் பின்வருமாறு:

| நிகழ்ச்சி | திகதி | மீளாய்வுக் குழு |
|---|---|---|
| பொதுப்பட்டம் | 20 - 22 செப்டம்பர் 2017 | பேராசிரியர் வி.மகேஸ்வரன் (தலைவர்) |
| | | பேராசிரியர் ருவன் விக்கிரமாராச்சி |
| | | கலாநிதி.ஜே.எம்.பி.எஸ்.ஜயசுந்தர |
| **வகுப்பாக்கம் - 1** | 2 – 4 ஒக்டோபர் 2017 | பேராசிரியர்.ஜே.டி.ஆர்.யூ.யூ.அபேரத்ன (தலைவர்) |
| பொருளியல்/ புள்ளிவிபரவியல் | | பேராசிரியர் ஜானகி ஈஸ்வரா |
| புவியியல் / அரசியல் விஞ்ஞானம் | | கலாநிதி.பீ. எலங்கோ |
| வரலாறு / தொல்பொருளியல் | | கலாநிதி.வி.சிவலோகதாசன் |
| **வகுப்பாக்கம் - 2** | 24 – 26 ஒக்டோபர் 2017 | பேராசிரியர் சி.எஸ். டி சில்வா (தலைவர்) |
| சமூகவியல்/ மானுடவியல் | | பேராசிரியர்.கே.கருணாதிலக்க |
| குற்றிவியல் | | பேராசிரியர் ருவன் ஜயசிங்க |
| வெகுசனத் தொடர்பாடல் | | கலாநிதி பிரசாந்தி நாரங்கொட |
| **வகுப்பாக்கம் - 3** | 24 – 26 ஒக்டோபர் 2017 | பேராசிரியர். ஜே.எம்.பீ.கே. ஜயசிங்க (தலைவர்) |
| சமஸ்கிருதம் / சிங்களம் | | கலாநிதி ஆதம்பாவா ஜவ்பர் |
| ஆங்கிலம் / ஹிந்தி | | கலாநிதி துசாந்த ஹேரத் |
| இசை / நடனம் | | கலாநிதி புல்சர லியனகே |
| **வகுப்பாக்கம் - 4** | 6 – 8 நவம்பர் 2017 | பேராசிரியர் தியடோ பெர்னான்டோ (தலைவர்) |
| மெய்யியல் / உளவியல் | | கலாநிதி அனிஷ்ட விஜேநாயக்க |
| பௌத்த நாகரீகம் | | கலாநிதி ரன்ஜித் பள்ளேகம |
| பௌத்த தத்துவம் / பாளி | | கலாநிதி ஜே.பீ.டி.எஸ் ஹேமகுமார |

**13.4 மானுடவியல் மற்றம் சமூக விஞ்ஞான பீட நிறுவன மீளாய்வு பெற்றுக் கொண்ட இறுதித் தரங்கள்**

ஒவ்வொரு வகுப்பாக்கத்துக்குமான மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீட நிறுவன மீளாய்வு பெற்றுக் கொண்ட இறுதித் தரங்கள் வருமாறு:

| SN | வகுப்பாக்கங்கள் | இறுதிப் புள்ளி | இறுதித் தரம் |
|---|---|---|---|
| 1 | வகுப்பாக்கம் - 1 | 77.0 | B |
| 2 | வகுப்பாக்கம் - 2 | <60 | D |
| 3 | வகுப்பாக்கம் - 3 | 76.0 | B |
| 4 | வகுப்பாக்கம் - 4 | 74.0 | B |
| 5 | வகுப்பாக்கம் - 5 | 75.7 | B |

# வருடாந்த நிதியியல் தரவுகள்

# 2017

## மீண்டெழும் செலவுகள் பற்றிய விபரம் - 2017

மீண்டெழும் செலவுகள் பற்றிய விபரம் - 2017

| | ரூபா '000 |
|---|---|
| **விடயம்** | **2017** |
| பிரத்தியேக வருமானம் | 2,384,967 |
| போக்குவரத்து | 32,170 |
| வழங்கல் | 117,133 |
| பராமரிப்புச் செலவுகள் | 35,884 |
| ஒப்பந்த செலவுகள் | 496,041 |
| ஏனையவை | 385,599 |
| மூலதன வழங்கல் - மீண்டெழும் இயற்கை செலவுகள் | 259,834 |
| **மொத்தம** | **3,711,628** |



**நிதி நடைமுறைப் பகுப்பாய்வு – பீட அடிப்படையில் ஒரு மாணவருக்கான செலவு 2017 (உள்வாரி பட்டப்படிப்பு மாணவர்கள்)**

| பீடம் | மொத்த செலவு (ரூபா) | மொத்த மாணவர்களின் எண்ணிக்கை - 2017 | ஒரு மாணவருக்கான செலவு |
|---|---|---|---|
| a. பிரயோக விஞ்ஞான பீடம் | 757,944,470 | 2571 | 294,805 |
| b. மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம் | 749,806,349 | 3259 | 230,073 |
| C. மருத்துவ விஞ்ஞான பீடம் | 619,604,583 | 1287 | 481,433 |
| D. முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வர்த்தக பீடம் | 1,000,012,812 | 4937 | 202,555 |
| E. பொறியியற் பீடம் | 118,019,455 | 240 | 491,748 |
| Fதொழிநுட்பவியல் பீடம் | 164,843,281 | 642 | 256,765 |

## மூலதனச் செலவுகள் பற்றிய விபரம் 2014 - 2017

ரூபா'000

| விடயம | 2014 | 2015 | 2016 | 2017 |
|---|---|---|---|---|
| a.சம்பாதித்த சொத்து | 125,066 | 126,744 | 239,151 | 542,137 |
| b.சம்பாதித்த கட்டிடம் | 632,188 | 520,910 | 658,309 | 269,169 |
| c.நூல்கள் | 10,769 | 14,340 | 13,962 | 33,337 |
| d.அறிவு விருத்திக் கொடை | 123,238 | 154,973 | - | - |
| eமானிட மூலதன விருத்தித் திட்டம் | - | - | 121,084 | 1,650 |
| f.ஆய்வைப் பலப்படுத்தல் | - | - | 137,341 | 146,417 |
| e.ஏனையவை (புனருத்தாபனம்) | 73,123 | 70,826 | 126,343 | 142,472 |
| **மொத்தம்** | **964,384** | **887,793** | **1,296,190** | **1,135,182** |

## நிதி வெளிப்பாட்டுப் பகுப்பாய்வு - 2017

ரூபா '000

| விடயம் | சூத்திரம் | ஒரு மாணவனுக்-குரிய செலவு |
|---|---|---|
| a.ஒரு மாணவருக்கான மீண்டெழும் செலவு | மாணவர் எண்ணிக்கை | 287 |
| b.ஒரு மாணவருக்கான மீண்டெழும் செலவு | மாணவர் எண்ணிக்கை | 88 |

## கடந்த 5 வருடங்களுக்கான நிதி நடவடிக்கைகள் (ரூபா '000)

| விடயம் | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 |
|---|---|---|---|---|---|
| 1. பிரத்தியேக வருமானம் | 1,332,798 | 1,538,113 | 1,938,192 | 2,181,660 | 2,384,967 |
| 2. போக்குவரத்து | 9,708 | 9,973 | 27,594 | 46,122 | 32,170 |
| 3. வழங்கல் | 70,207 | 80,508 | 95,291 | 105,859 | 117,133 |
| 4. பராமரிப்புச் செலவு | 83,911 | 73,135 | 96,239 | 129,262 | 35,884 |
| 5. ஒப்பந்த சேவைகள் | 252,819 | 253,417 | 280,647 | 350,182 | 496,041 |
| 6. ஏனையவை | 160,995 | 285,827 | 319,590 | 313,821 | 385,306 |
| 7. ஆய்வும் அபிவிருத்தியும் | 26,101 | 31,060 | 44,341 | 945 | 293 |
| 8. பல்கலைக்கழக நகரமயத் திட்டமும் ஏனையவையும் | 3,606 | 6,758 | 62,115 | 114,359 | 259,834 |
| **மொத்தம்** | **1,940,145** | **2,278,791** | **#######** | **3,242,210** | **3,711,628** |

## கடந்த 5 வருடங்களுக்கான நிதி நடவடிக்கைகள் (ரூபா '000)

| விடயம் | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 |
|---|---|---|---|---|---|
| மூலதனக் கொடை | 454,579 | 947,550 | 888,000 | 1,197,200 | 1,139,312 |
| மீண்டெழும் கொடை | 1,541,846 | 1,856,000 | 2,360,000 | 2,537,702 | 2,907,750 |



கடந்த ஐந்து வருடங்களுக்குரிய நிதிக் கொடை நடவடிக்கைகள் (ரூபா .000)

| விடயம | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 |
|---|---|---|---|---|---|
| மூலதனச் செலவு | 390,045 | 964,384 | 887,793 | 887,793 | 1,135,182 |
| மீண்டெழும் செலவு | 1,940,145 | 2,278,791 | 3,242,210 | 3,711,628 | 3,711,628 |



| ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகம் | | | |
|---|---|---|---|
| **2017 டிசம்பர் 31 இற்கான நிதிக்கூட்டு அறிக்கை** | | | |
| | | ***2017 டிசம்பர் 31 இற்கு*** | ***2016 டிசம்பர் 31 இற்கு*** |
| | | **Rs.** | **Rs.** |
| **சொத்துக்கள்** | **Note** | | |
| **நடைமுறைச் சொத்து அல்லாதவை** | | | |
| சொத்துக்கள், தளபாடங்கள், உபகரணங்க | 6 | 9,145,370,103 | 7,379,944,596 |
| நூலக புத்தகங்கள், பட்டமளிப்பு விழா ( | 7 | 51,649,602 | 33,197,936 |
| முன்னேற்றத்தில் மூலதன வேலைகள் | 8 | 66,134,421 | 1,649,766,652 |
| சொத்துக்கள் | 9 | 8,510,971 | 11,050,696 |
| நிதிச் சொத்துக்கள் | 10 | 1,245,657,770 | 1,091,495,880 |
| | | **10,517,322,865** | **10,165,455,756** |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| இருப்புப் புத்தகம் | 11 | 40,870,906 | 42,494,919 |
| சன்ரை டெப்டர்ஸ் மற்றும் பெறுகைகள் | 12 | 98,840,010 | 91,982,937 |
| **நடைமுறை நிதிச் சொத்துக்கள்** | | | |
| ஊழியர்களுக்கான முன்கொடுப்பனவு | 13 | 541,408 | 839,708 |
| முன் கொடுப்பனவுகள் | 14 | 324,387,374 | 157,868,820 |
| பணமும் அதற்கு நிகரானவைகளும் | 15 | 48,439,662 | 65,374,347 |
| | | **513,079,360** | **358,560,731** |
| **மொத்த சொத்துக்கள்** | | **11,030,402,225** | **10,524,016,488** |

| | | 2017 டிசம்பர் 31 இற்கு | 2016 டிசம்பர் 31 இற்கு |
|---|---|---|---|
| | | Rs. | Rs. |
| **உரிமைப் பங்கும் பொறுப்புகளும்** | | | |
| | | | |
| **உரிமைப் பங்கு** | **Note** | | |
| மூலதனக் கொடை | 16 | 4,009,121,724 | 3,440,147,579 |
| ஏனைய மூலதனக் கொடை | 17 | 491,159,322 | 548,161,599 |
| பரசுகளும் நன்கொடைகளும் | 18 | 13,108,504 | 15,976,075 |
| மதிப்பீட்டு மிகை | | 5,123,774,169 | 5,123,774,169 |
| தைத்திருக்கப்படும் வருவாய் | | (306,616,420) | (62,002,630) |
| | | **9,330,547,299** | **9,066,056,792** |
| | | | |
| **ஒதுக்கீடுகளும் வரையறுக்கப்பட்ட நிதியமும்** | | | |
| உள்வாரி வரையறுக்கப்பட்ட நிதியம் | 19 | 396,758,843 | 292,228,005 |
| மூலதன ஒதுக்கீடுகள் | 20 | 1,574,238 | 1,574,237 |
| நன்கொடை நிதியம் | 21 | 28,559,543 | 25,151,900 |
| வெளி ஆய்வு நிதியம் | 22 | 94,793,969 | 79,977,941 |
| பிற்போடப்பட்ட வரவு | 23 | 265,989,158 | 163,357,131 |
| | | **787,675,750** | **562,289,214** |
| **நடைமுறை பெறுப்புகள் அல்லாதவை** | | | |
| பணிக்கொடை சட்டம் | 24 | 498,851,043 | 439,073,158 |
| | | **498,851,043** | **439,073,158** |
| **நடைமுறை பொறுப்புகள்** | | | |
| மீளளிக்கப்படத்தக்க வைப்புகள் | 25 | 13,310,835 | 16,466,063 |
| சேர்க்கப்பட்ட செலவுகள் | 26 | 400,017,298 | 440,131,261 |
| | | **413,328,133** | **456,597,324** |
| | | | |
| **மொத்த உரிமைப்பங்கும் பொறுப்புகளும்** | | **11,030,402,225** | **10,524,016,488** |

இந்த நிதிக்கூற்று இலங்கை பட்டயக் கணக்கு நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட அரசாங்க கணக்கு நியமங்களுக்கு இயைபான வகையில் தயாரிக்கப்பட்டு முன்வைக்கப்படுகின்றது.

| | | | |
|---|---|---|---|
| கே.டி.சீ.பிரியங்கனி | | | எல்.எல்.டப்.பெரேரா |
| கணக்கதிகாரி | | | பதலி கணக்கதிகாரி |
| | | | |
| ஆலொசனை சபைக்கு பதிலாக ஒப்பமிடப்பட்டது | | | |
| | | | |
| பேராசிரியர் சம்பத் அமரதுங்க | | டி.தர்மராஜா | |
| துணைவேந்தர் | | ஆலோசனை சபை உறுப்பினர் | |

## ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

### 2017 டிசம்பர் 31 இற்கான நிதிசார் வெளிப்பாடுகள்

| | உப அட்டவணை | 2017 | 2016 |
|---|---|---|---|
| | | | Rs. |
| **இறைவரி** | | | |
| அரசாங்க கொடை - நடைமுறை | | 2,907,750,000 | 2,537,702,000 |
| அரசாங்க கொடை - மூலதனம் - நடைமுறை இயற்கை செலவு | 1 | 254,407,152 | 198,111,510 |
| உள்ளக வருமானம் | 2 | 499,734,029 | 439,084,467 |
| செலவிடப்பட்ட சொத்துக்களுக்கான இலாபம், தள | 3 | 3,334,094 | - |
| அரச கொடைகளின் தவணைமுறைக் கடன் கரைப்பு | | 392,567,004 | 280,355,147 |
| **மொத்த இறைவரி** | | **4,057,792,280** | **3,455,253,124** |
| **செலவுகள்** | | | |
| தனிப்பட்ட ஊதியம் | 4 | 2,384,967,083 | 2,087,317,616 |
| போக்குவரத்து செலவுகள் | 4 | 32,170,123 | 46,121,985 |
| நிரம்பல்கள் | 4 | 117,133,277 | 105,859,319 |
| செலவுகளை பராமரித்தல் | 4 | 35,883,799 | 40,889,697 |
| ஒப்பந்தரீதியான சேவைகள் | 4 | 496,041,104 | 350,182,301 |
| ஏனைய நடைமுறைச் செலவுகள் | 4 | 385,599,206 | 314,766,390 |
| பணிக்கொடை சட்டம் | 24 | 90,112,283 | 94,343,318 |
| நிலையான சொத்துக்களின் செலவீட்டுக்கான இழப்பு | | - | 455,788 |
| மூலதனக் கொடை - நடைமுறைச் செலவு | 5 | 259,833,971 | 202,731,354 |
| பெறுமானத் தேய்வு | 6-7 | 476,257,158 | 368,305,880 |
| தொட்டுணர முடியாத சொத்துக்களின் தவணைமுறை | 9 | 3,886,053 | 779,128 |
| **மொத்த செலவுகள்** | | **4,281,884,058** | **3,611,752,774** |
| **வருடத்துக்கான மிகை** | | **(224,091,778)** | **(156,499,651)** |

## ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

**2017 டிசம்பர் 31 இற்கான நிதிக்கூற்று அறிக்கை**

| | 2017.12.31 இற்கு | 2016.12.31 இற்கு |
|---|---|---|
| | | Rs. |
| **இயங்குகின்ற செயற்பாடுகளுக்கான பண ஓட்டம்** | | |
| இயங்கு நடவடிக்கைகளுக்கான மிகை | (224,091,778) | (156,499,651) |
| | | |
| **சரிப்படுத்தல்கள்** | | |
| பெறுமானத்தேய்வு | 476,257,158 | 368,305,880 |
| நூலகப் பத்தகங்கள் | 64,395 | |
| முதலீடுகளுக்கான வட்டி | (84,399,207) | (55,760,610) |
| பணிக்கொடை சட்டம் | 90,112,283 | 94,343,318 |
| அரச கொடை, நன்கொடைகளுக்கான தவணைக் குறைக்கடன் | (392,567,004) | (280,355,147) |
| செலவு செய்த சொத்துக்களுக்கான இலாபம் | (3,334,094) | 455,788 |
| தொட்டுணரமுடியாத சொத்துக்களுக்கான தவணை குறைக்கட | 3,886,053 | 779,128 |
| அரச கொடை - புணர்நிர்மான பராமரிப்பு மற்றும் அறிவு அதிகரிப்பு நடவடிக்கைகள் | (254,407,152) | (198,111,510) |
| **மூலதன மாற்றங்களுக்கு முன் இயங்கு நடவடிக்கைகளுக்கான மொத்த பண ஓட்டம்** | **(388,479,346)** | **(226,842,804)** |
| | | |
| இருப்பு புத்தகத்தில (அதிகரிப்பு / குறைப்பு) | 1,624,013 | 4,466,346 |
| சன்ரைஸ் டெப்டர்ஸ் மற்றும் பெறுகைகள் (அதிகரிப்பு / குறை | 725,630 | 41,086,499 |
| ஊழியர்களுக்கான கடன் மற்றும் முன்கொடுப்பனவு (அதிகரிப்ப | 298,300 | 3,099,136 |
| முன்காசு மற்றும் கொடுப்பனவுகள் ( அதிகரிப்பு / குறைப்பு) | (166,518,554) | 36,108,806 |
| சேர்க்கப்பட்ட மற்றும் ஏனைய செலுத்தப்படவேண்டிய செலவுக | (40,113,963) | 145,406,934 |
| வைப்பு மீளபெறல் (அதிகரிப்பு / குறைவு) | (3,155,228) | 12,925,211 |
| தொலைத்தொடர் நிகழ்வுகளுக்கான பிற்போடப்பட்ட வருமானம் | 102,632,027 | 92,857,197 |
| **மூலதன மாற்றங்களுக்கு முன் இயங்கு நடவடிக்கைகளுக்கான மொத்த பண ஓட்டம்** | **(492,987,121)** | **109,107,326** |
| பணிக்கொடை கொடுப்பனவுகள் | (30,334,398) | (25,469,485) |
| **இயங்கு நடவடிக்கைகளுக்கான மொத்த பண ஓட்டம்** | **(523,321,519)** | **83,637,841** |
| | | contd. |

| | 2017.12.31 இற்கு | 2016.12.31 இற்கு |
|---|---|---|
| | | Rs. |
| **முதலீட்டு நடவடிக்கைகளுக்கான பண ஓட்டம்** | | |
| சொத்துக்கள், தளபாடங்கள், உபகரணங்கள் கொள்வனவு | (529,966,128) | (452,121,434) |
| சொத்துக்கள், தளபாடங்கள், உபகரணங்கள் விற்பனை நடைமு | 4,919,500 | 2,089,031 |
| முதலீடுகளுக்கான வட்டி | 76,816,504 | 54,119,645 |
| முன்னனேற்றத்தில் மூலதன வேலை | (132,765,928) | (769,026,541) |
| நிலையான வைப்புகளுக்கு மதலிடப்பட்ட நிதியம் | (319,141,229) | (244,199,697) |
| நிலையான வைப்பு மிளெடுப்பு | 179,009,120 | 24,943,829 |
| ஊழியர் கடன் கொடுப்பனவு | (14,029,781) | - |
| **முதலீட்டு நடவடிக்கைகளுக்கான பண ஓட்டம்** | **(735,157,942)** | **(1,384,195,166)** |
| | | |
| **நிதி நடவடிக்கைகளுக்கான பண ஓட்டம்** | | |
| | 1,139,312,280 | 1,297,200,000 |
| நன்கொடைகளை நடைமுறைப்படுத்தல் | 3,407,642 | (2,626,008) |
| வெறிநிதியங்களை நடை்.ம்.றைப்படுத்தல் | (20,522,012) | (81,941,909) |
| பிரத்தியேக ஒதுக்கீடு | 104,530,839 | 43,257,576 |
| ஆய்வு நிதியம் | 14,816,028 | 30,776,065 |
| **நிதி நடவடிக்கைகளுக்கான பண ஓட்டம்** | **1,241,544,777** | **1,286,665,723** |
| பணம் மற்றும் பணத்திற்கு ஈடானவை (அதிகரிப்பு / குறைப்பு) | (16,934,684) | (13,891,601) |
| வருட ஆரம்பத்துக்கான பணம் மற்றும் பணத்திற்கு ஈடானவை | 65,374,347 | 79,265,948 |
| **வருட முடிவுக்கான பணம் மற்றும் பணத்திற்கு ஈடானவை** | **48,439,662** | **65,374,347** |

## ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகம்

### 2016 டிசம்பர் 31 இந்கு உரிமைப்பங்கு மாற்றம் தொடர்பான கூற்று

| விபரம் | வைத்திருக்கப்படும் வருவாய் ரூபா | மிகை மீள் மதிப்பீடு ரூபா | மூலதன டியயகொடைச் செலவு ரூபா | செலவு செய்யப்படாத மூலதன கொடைச் ரூபா | நன்கொடைகள் மற்றும் ஏனைய கொடைகள் ரூபா | மொத்தம் ரூபா |
|---|---|---|---|---|---|---|
| **2016 ஜனவரி 1 ஆம் திகதிக்கு மீதி** | **176,438,930** | **5,123,774,169** | **2,548,131,919** | **308,754** | **474,476,700** | **8,323,130,473** |
| குறிப்பிட்ட வருடத்தில் செலவு செய்யப்பட்ட மூலதன நன்கொடை | - | - | 1,296,189,619 | (1,296,189,619) | - | - |
| வருடத்தில் கிடைக்கப்பெற்ற நிதியம் | - | - | - | 1,297,200,000 | - | **1,297,200,000** |
| Methsewana இடம் | | | 24,000,000 | | | **24,000,000** |
| உருவாக்கப்பட்ட நிதியத்திலிருந்து மூலதன நிதியத்துக்கான பங்களிப்பு | - | - | - | - | 32,983,747 | **32,983,747** |
| மூலதன நிதிய புனர்நிர்மானம், பராமரிப்பு மற்றும் அறிவு அபிவிருத்தி நடவடிக்கை | - | - | (198,111,510) | - | - | **(198,111,510)** |
| மோட்டார் வாகன கொள்வனவு - வெளி | (16,059,602) | - | - | - | - | **(16,059,602)** |
| nrhj;J nfhs;tdT - HETC Project | - | - | - | - | 96,610,528 | **96,610,528** |
| வருடத்தில் கிடைக்கப்பெற்ற நன்கொடை நிதியம் | - | - | - | - | 9,040,261 | **9,040,261** |
| தவணைமுறைக் கடன் கரைப்பு - கொடைகள் - நன்கொடைகள் | - | - | (231,381,585) | - | (48,973,562) | **(280,355,147)** |
| காலப்பகுதிக்கான மிகை | (156,499,651) | - | - | - | - | **(156,499,651)** |
| நிதியம் - ஒப்பந்த மீறல் | (6,697,584) | - | - | - | - | **(6,697,584)** |
| மீள் கொண்டுவரப்பட்ட கிடைக்கப்பெற்ற மிகுதியை சரிசெய் | (30,958,128) | - | - | - | - | **(30,958,128)** |
| பல்கலைக்கழக அபிவிருத்தி நிதியம் | (28,226,595) | - | - | - | - | **(28,226,595)** |
| **2016.12.31 இந்கு மீதி** | **(62,002,630)** | **5,123,774,169** | **3,438,828,443** | **1,319,136** | **564,137,674** | **9,066,056,792** |

**ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்**
**நிதிக் கூற்றுக்கான மொத்த கணக்குக் கொள்கைகள் - 2017**

1. **சொத்து அறிக்கை**

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம் 1978 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் கீழ் செயற்படுகின்றது. இது இலங்கை, கங்கொடவில, நுகேகொடவில் அமைந்துள்ளது. மேலும் இது உயர் கல்வி மற்றும் போக்குவரத்து அமைச்சின் கீழ் இயங்குகின்றது. .

**1.1. <u>வெளியிடுவதற்கு உரித்துடைய திகதி</u>**

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக நிதிக்கூற்று ஆலோசனைச் சபையின் திகதியான 15.02.2018 இற்கு வெளியிடுவதற்கு உரித்துடையதாகும்.

**1.2. <u>அறிக்கைக் காலம்</u>**

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைகழகத்தின் நிதிக்கூற்றுக் காலம் 2017 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2017 டிசம்பர் 31 ஆம் திகதி வரையாகும்.

2. **குறிப்பிட்ட கணக்குக் கொள்கைகளின் கூற்று**

**2.1 <u>செய்கைக் கூற்று</u>**

பல்கலைக்கழகத்தின் கணக்கு முறைமைகள் இலங்கை அரச நிறுவனங்களின் கணக்கு முறைமைகளுக்கு ஏற்ற வகையில் தயாரிக்கப்பட்டு முன்வைக்கப்படுகின்றன (SLPSAS's). என்றாலும், இலங்கைக் கணக்கு முறைமைகள் அரச முறைமைகள் அல்லாத தனியார் பகுதிகளிலும் பயன்படுத்தப்படுகின்றன. இந்த நிதிக்கூற்றுக்கள் நிதிக்கூற்றுக்களின் நிலைமை, நிதிக் கூற்றுக்களின் நடைமுறை, பண ஓட்ட கூற்றுக்கள், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு மற்றும் நேர்மை என்பவற்றைக் கொண்டுள்ளன.

**2.2. அளவீட்டின் அடிப்படை**

ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக நிதிக்கூற்றுக்கள் வரலாற்று பெறுமதி அடிப்படையில் தயாரிக்கப்பட்டு தொடர்ச்சியாக முன்வைக்கப்படுகின்றன. நிதிக்கூற்றுக்களை பாதிக்கும் வகையில் பண வீக்க காரணிகளுக்கு ஏற்ற வகையில் மாற்றங்கள் எதுவும் செய்யப்படமாட்டாது. ஆனால், சொத்துக்கள், தளபாடங்கள், உபகரணங்கள் என்பன சந்தைப் பெறுமதிக்கு ஏற்றவகையில் கணக்கிடப்படும்.

**2.3 <u>ஒப்பீட்டுத் தகவல்கள்</u>**

எல்லா நிதிக் கொள்கைகளும் முன்னைய வருடங்களில் வெளியிடப்பட்டது போல பல்கலைக்கழகத்தினால் உறுதியாக வெளியிடப்படுகின்றன. தேவையானபோது ஒப்பீட்டு உருக்கள், மாற்றங்களை உறுதிசெய்து கொள்வதற்காக சமகாலத்திற்கு ஏற்ற வகையில் இயைபுபடுத்தப்படுகின்றன.

**2.4 <u>ஆவணங்களும் தொகுப்பும்</u>**

நிதிக்கூற்றுக்களில் ஒவ்வொரு ஆவணங்களினதும் ஒரே வகையான ஆவணங்கள் வெவ்வேறாக முன்வைக்கப்படுகின்றன. வெவ்வேறானவைகள் வெவ்வேறாக முன்வைக்கப்படுகின்றன.

## 2.5 ஈடுசெய்தல்

சொத்துக்கள் மற்றும் மிகுதிகள் வருமானம் மற்றும் செலவு என்பன SLPSAS மூலம் வேண்டப்படும் அல்லது அனுமதி அளிக்கப்படும் வரை ஈடு செய்யப்படமாட்டாது.

## 2.6 தொடர் வியாபார ஸ்தாபனம்

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகமானது வியாபாரத்தைக் கொண்டு செல்வதற்குரிய இயலுமையை மதிப்பீடு செய்கின்றது. தொடர்ச்சியான செயற்பாட்டு நிலவுகைக்குத் தேவையான போதிய வளங்களை பல்கலைக்கழகம் கொண்டிருப்பதால் ஜயவர்த்தனபுர பல்கலைககழத்தின் பேரவை எதிர்காலத்தில் நடப்பதை முன்னறிவதற்கு நியாயமான எதிர்பார்ப்பைக் கொண்டிருக்கின்றது. பல்கலைக்கழகம் செயற்பாடுகளை நிறுத்துவதற்கோ திரவமயமாக்குவதற்கோ எதிர்பார்க்காத அதேவேளை, எதிர்காலத்தைப் பற்றி பெறக்கூடிய எல்லாத் தகவல்களையும் கருத்தில் எடுத்திருக்கின்றது. அதன்படி பல்கலைக்கழகமானது நிதிசார் அறிக்கைகளை தொடர்ச்சியாக வியாபார செயற்பாட்டின் அடிப்படையில் தயார் செய்வதற்கு இசைவாக்கமடைந்துள்ளது.

**அறிக்கைக் காலப்பகுதிக்குப் பின்னரான நிகழ்வுகள்**

எல்லா ஆவணங்களும் அறிக்கைத் திகதிக்கு பின்னர் கவனத்திற் கொள்ளப்படும். பிரத்தியேக சலுகைகள் எங்கேயாவது எப்போதாவது தேவைப்படும்போது அவை நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்படும்.

## 2.8. தற்போது நடைமுறையிலுள்ள நாணய மாற்றம்

பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களில் காணப்படும் அனைத்தும் பல்கலைக்கழக நடைமுறையில் உள்ள ஆரம்ப பொருளாதார சூழலை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்படுகின்றன. இத்தகைய நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் தயாரிக்கப்பட்டு முன்வைக்கப்படுகின்றன. இதுவே பல்கலைக்கழகத்தின் தற்போது நடைமுறையிலுள்ள நாணயப் புழக்கமாகும்.

## 2.9 வெளிநாட்டு நாணய மாற்றீடும் மிகுதியும்

மாற்றீடு அல்லது மதிப்பீடு வழமையாக செய்யப்படுகின்ற தினத்தில் நாணய மாற்றீட்டு விகிதத்தைப் பயன்படுத்தி வெளிநாட்டு நாணய மாற்றீடானது தொழிற்பாட்டு நாணயமாக மாற்றப்பட்டிருக்கின்றது. வெளிநாட்டு நாணய மாற்றீட்டின் இலாபம் அல்லது நட்டம் மாற்றீட்டின் தீர்மானத்தின் அடிப்படையில் உருவாக்கப்படுகின்றது. ஆண்டிறுதியில் சொத்துக்கள் மற்றும் பொருட்களின் பெறுமதியானது நிதிசார் செயற்பாட்டின் அடிப்படையில் வெளிநாட்டு நாணயங்களின் அடிப்படையில் குறிப்பிடுவதற்கு அங்கீகரிக்கப்படுகின்றது.

## 2.10 மட்டந்தட்டல்

நிதிசார் அறிக்கைகளின் தொகையானது கிட்டிய ரூபாவிற்கு மட்டந்தட்டப்பட்டுள்ளது. சில சந்தர்ப்பங்களில் விதிவிலக்காக இலங்கை அரச துறை கணக்கியல் நியமங்களால் அனுமதிக்கப்பட்டதன் அடிப்படையில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

## 2.11 சொத்துக்கள், இயந்திரங்கள், உபகரணங்கள் (PPE)

பல்கலைக்கழக சொத்துக்களில் இயந்திரங்களும் உபகரணங்களும், நிலங்கள், கட்டிடங்கள், ஆய்வு கூடங்கள் மற்றும் கற்பித்தல் உபகரணங்கள், காரியாலய உபகரணங்கள், தளபாடங்களும் சாசனங்களும், நூலகப் புத்தகங்கள், சஞ்சிகைகள், மோட்டார் வாகனங்கள், விளையாட்டுப் பொருட்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் அனைத்தும் அடங்குகின்றன.

## 2.12 அங்கீகாரத்தின் அடிப்படைகள்

எதிர்கால பொருளாதார நன்மைகள் பொருட்களுடன் இணைக்கப்பட்டிருப்பதற்கான, பொருட்களின் பெறுமதி நம்பத்தகுந்த முறையில் அளவிடுவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படின், சொத்துக்கள், இயந்திரங்கள் உபகரணங்கள் என்பன அங்கீகரிக்கப்படும்.

**ஆரம்ப அங்கீகாரம்**

சொத்துக்களை வேலை நிபந்தனைகளுக்கு அமைய கொண்டு வரும்போது ஏற்பட்ட தற்செயலான செலவுகள் உட்பட்ட கொள்வனவுச் செலவுகள், பாவனைக்குரிய நோக்கம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சொத்துக்கள் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களுக்கான ஆரம்ப அங்கீகாரம் வழங்கப்படுகின்றது. ஆரம்ப அங்கீகாரத்தைத் தொடந்து வருகின்ற, சொத்துக்களுக்குரிய திட்டம் மற்றும் உபகரணங்கள், ஒன்று குவிக்கப்பட்ட பெறுமானத் தேய்வு மற்றும் பழுதாக்கல் மூலம் ஏற்படுகின்ற இழப்பு என்பவற்றின் அடிப்படையில் அளவிடப்படுகின்றது.

வாங்கும்போது ஏற்பட்ட செலவுகள், சொத்துக்களின் இயற்கை நிலையை முன்னேற்றும் பொழுது ஏற்பட்ட செலவுகள் என்பன பிரதான செலவீனங்களாகக் கருதப்படுகின்றன. எதிர்கால பொருளாதார நன்மைகள் பொருட்களுடன் இணைக்கப்பட்டிருப்பதற்கான, பொருட்களின் பெறுமதி நம்பத்தகுந்த முறையில் அளவிடுவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படின் தொடர்ந்து வருகின்ற செலவுகளாக வேறுபிரிக்கப்பட்ட சொத்துக்கள் பொருத்தமான முறையில் இருப்பின், சொத்துக்களை எடுத்து வருவதற்கான செலவுகளாகக் கொள்ளலாம்.

சொத்துக்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை எதிர்பார்த்த மூல நியம செயற்பாட்டு மதிப்பீட்டிலிருந்து மீள்களஞ்சியப் படுத்தல், அல்லது எதிர்கால பொருளாதார நன்மை கருதி பராமரித்தல் என்பவற்றின்போது ஏற்பட்ட திருத்த அல்லது பராமரிப்பு செலவுகள் ஏற்பட்ட செலவுகளாக அங்கீகரிக்கப்படுகின்றது.

### ii) பாவனையில் உள்ள சொத்து இயந்திரங்கள் உபகரணங்கள் மீதான தொடர்ந்து வருகின்ற செலவுகள்

கீழ் குறிப்பிடப்படும் வகைகளுள் அடங்காத தொட்டுணரக்கூடிய நிலையான சொத்துக்கள் மீதான செலவீனங்கள் நிதிசார் செயற்பாட்டு அறிக்கையில் அதன் காலப்பகுதி குறிப்பிடப்பட்டு சுமத்தப்படுகின்றது. இந்த நிலமையில் இது மூலதனப்படுத்தப்பட்டு தொடர்புடைய வாழ்நாள் காலப்பகுதியிலிருந்து மதிப்பு குறைக்கப்படுகின்றது.

- சொத்துக்களின் கொள்ளளவை அதிகரித்தல்,
- வெளியீட்டின் தரத்தை கணிசமான அளவு அதிகரித்தல் அல்லது செயற்பாட்டுக்கான விலையைக் குறைத்தல்
- உறுதிப்படுத்தப்பட்டதற்கு அப்பால் திருத்தம் மற்றும் பராமரிப்பு மூலம் சொத்துக்களின் வாழ்நாள் காலத்தை குறிப்பிட்ட அளவுக்கு நீடித்தல்
- சொத்துக்கள், இயந்திரங்கள், உபகரணங்களின் சந்தைப் பெறுமானம் அதனைத் தொடர்ந்து அதிகரித்தல்

### iii) அங்கீகாரத்தின் பின்னரான அளவீடு

**விலை மாதிரி**

அங்கீகாரத்தின் பின்னர் நிலம் தவிர்ந்த கட்டிடங்கள், மோட்டார் வாகனங்கள், கற்பித்தல் உபகரணங்கள் ஆய்வு கூடங்கள் விளையாட்டுப் பொருட்கள் வேறு உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் அதற்குரிய இணைப்புக்கள் என்பன தவிர்ந்த ஏனைய சொத்துக்கள், இயந்திரங்கள் உபகரணங்கள் என்பவற்றுக்கு ஒன்று குவிக்கப்பட்ட பெறுமானத் தேய்வுக்கான விலைக் குறைப்பு செய்யப்படுகின்றன.

**மீள்மதிப்பீட்டு மாதிரி**

அங்கீகாரத்தின் பின்னர் கீழ் குறிப்பிடப்பட்ட வகுப்புக்களுக்குரிய சொத்துக்கள், இயந்திரங்கள் உபகரணங்கள் என்பவற்றின் சாதாரண விலை மீள் மதிப்பீடு செய்யப்பட்ட தொகைக்கு இணங்க, நம்பத்தகுந்த முறையில் அளவிடப்படும். ஒன்று குவிக்கப்பட்ட பெறுமானத் தேய்வு மற்றும் பழுதாக்கலைத் தொடர்ந்து வருகின்ற இழப்பு என்பவற்றின் அடிப்படையில் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு சாதாரண விலை நிர்ணயிக்கப்படும்.

நிலமும் கட்டிடமும்,
மோட்டார் வாகனங்கள்,
காரியாலய உபகரணங்கள்
ஆய்வுகூடம் மற்றும் கற்பித்தல் உபகரணங்கள்,
தளபாடங்களும், பொருத்துகைகளும்
கணினியும் உதிரிப் பாகங்களும்
விளையாட்டுப் பொருட்களும் ஏனைய சொத்துக்களும்

### iv) நூலகப் புத்தகங்களும் பட்டமளிப்பு விழா மேலாடைகளும்

5 வருட காலப்பகுதியின் பின்னர் நூலகப் புத்தகங்களும் பட்டமளிப்பு விழா மேலாடைகளும் நேரடியாகப் பெறுமானத் தேய்வடைகின்றன.

### v) தொட்டுணர முடியாத பொருட்கள் - கணினி மென்பொருள்

கணினி மென்பொருள் தொட்டுணர முடியாத பொருளாக அங்கீகரிக்கப்படுகின்றது. அப்போது எதிர்கால பொருளாதார நன்மைகளுக்கான பங்களிப்பை செய்து வியாபாரத்தை நோக்கி பாயக்கூடியதாக சாத்தியம் உள்ள போது, உண்மையான மதிப்பீட்டின் மூலம் அதன் பெறுமதியை அளவிட முடியும். ஒன்று குவிக்கப்பட்ட மதிப்பிறக்கத்தின் மூலம் ஒன்று குவிக்கப்பட்ட பழுதின் மூலம் தொட்டுணர முடியாத பொருட்களின் பெறுமதி குறைகின்றது. 5 வருடங்களுக்கு மேற்பட்ட பயன்பாட்டை பூர்த்தி செய்ததன் பின் பெறுமதியின் மதிப்பு குறைக்கப்படுகின்றது.

### B) பெறுமானத் தேய்வு

வெறும் நிலம் தவிர்ந்த சொத்துக்களின் இயந்திரங்களின் உபகரணங்களின் ஒவ்வொரு கூறுகளினதும் பெறுமானத் தேய்வானது நேர்கோட்டை அடிப்படையாகக் கொண்டு பொருளாதார செயற்பாட்டு அறிக்கையினூடாக அங்கீகரிக்கப்படுகின்றது.

ஒவ்வொரு சொத்தினதும் பெறுமானத் தேய்வானது பயன்பாட்டுக்கு பெற்றுக் கொள்ளப்பட்டதிலிருந்து ஆரம்பிக்கின்றது. அத்துடன் சொத்து விற்பனைக்காக வகைப்படுத்தப்பட்டிருந்த ஆரம்ப திகதியிலிருந்து, சொத்துக்கான அங்கீகாரம் நிறுத்தப்பட்டதிலிருந்து பெறுமானத் தேய்வு நிறுத்தப்படுகின்றது.

ஒவ்வொரு பொருட்களினதும் கணிப்பிடப்பட்ட பயன்பாட்டுக்குரிய வாழ்க்கை காலப்பகுதி பின்வருமாறு:

| *சொத்துக்களின் வகை* | *கணிக்கப்பட்ட வாழ்க்கைக் காலம்* |
|---|---|
| கட்டிடங்கள் | 20 வருடங்கள் |

| | |
|---|---|
| தளபாடங்களும் பொருத்துகைகளும் | 10 வருடங்கள் |
| ஆய்வு கூடமும் கற்பித்தல் உபகரணங்களும் | 05 வருடங்கள் |
| காரியாலய உபகரணங்கள் | 05 வருடங்கள் |
| மோட்டார் வாகனங்கள் | 2-5 வருடங்கள் |
| கணினியும் உதிரிப் பாகங்களும் | 05 வருடங்கள் |
| விளையாட்டுப் பொருட்கள் | 05 வருடங்கள் |
| ஏனைய சொத்துக்கள் (நீர், தொலைபேசி, மின்சாரம் உட்பட) | 10 வருடங்கள் |
| பகுதி மற்றும் உள்ளக வேலைகள் | 05 வருடங்கள் |
| நிலத்தோற்றம் | 05 வருடங்கள் |

ஒவ்வொரு அறிக்கைக் காலப்பகுதிக்குமான முடிவில் சொத்துக்களின் மீதிப் பெறுமதி மற்றும் ஆயுட் காலம் மீளமைக்கப்படுகின்றது பொருத்தமானதெனில் சீரமைக்கப்படுகின்றது. சொத்துக்களைக் கொண்டு வருவதற்குரிய பெறுமதியானது தீர்மானிக்கப்பட்ட மீளப் பெறக்கூடிய தொகையிலிருந்து பெரியதாயின், உடனடியாக மீளப்பெறக்கூடிய தொகையில் எழுதப்படுகின்றது.

பராதீனத்திற்குரிய வருமானங்கள் செலவீனங்கள் கொண்டு வருவதற்குரிய நடைமுறையுடன் ஒப்பிடப்பட்டு தீர்மானிக்கப்படுகின்றது. அத்துடன் வருமானங்கள் அல்லது செலவீனங்கள் விசாலமான வரவு தொடர்பான அறிக்கையில் அங்கீகரிக்கப்படுகின்றது.

<u>அங்கீகாரம் அற்றுப் போதல்</u>

பராதீனப்படுத்துவதன் மூலம் அல்லது எதிர்கால பொருளாதார நன்மைகள் இல்லாதவிடத்து அல்லது பாவனை அல்லது பராதீனப்படுத்தல் மூலம் எதிர்பார்த்த சேவையைப் பெற முடியாதவிடத்து சொத்துக்கள், இயந்திரங்கள் உபகரணங்களுக்கான கொண்டு வரும் தொகையின் அங்கீகாரம் அற்றுப் போகின்றது. அங்கீகாரம் அற்றுப் போவதன் மூலம் பெறப்படுகின்ற வருமானம் அல்லது செலவீனம் குறித்த பொருளினது அங்கீகாரம் அற்றுப் போகும் நேரத்தில் நிலுவை அல்லது பற்றாக்குறையில் உள்ளடக்கப்படுகின்றது.

## 2.13 <u>முதலீடுகள்</u>

முதலீடு பிரதிநிதித்துவப்படுத்துவது யாதெனில் நிலையான வைப்புக்கள், சேமிப்பு வைப்புக்கள் மீதான முதலீட்டை ஆகும். LKAS 39 உடனான சம்மதத்தின் படி முதலீடுகள் கணக்கிடப்படுகின்றது. நிலையான வைப்புக்கள் சேமிப்பு வைப்புக்களுக்குரிய முதலீடுகள் LKAS 39 இற்கு இணங்க முதிர்ந்த நிதிச் சொத்துக்களாக வகைப்படுத்தப்படுகின்றது. இவை ஆரம்பத்தில் சாதாரண விலையில் அளவிடப்பட்டு அதனைத் தொடர்ந்து LKAS 39 இன் தேவைப்பாட்டுக்கிணங்க வினைத்திறனான வட்டி வீத பயன்பாட்டினால் சிறப்பு நிதி கொண்டு மெதுவாக கடனை திருப்பிச் செலுத்தக்கூடிய வகையில் அளவிடப்படுகின்றது.

## 2.14 <u>மூலதன வேலை - நடைமுறையில்</u>

கட்டட நிர்மாணம், சொத்துக்கள், இயந்திரங்கள் உபகரணங்கள் என்பவற்றின் வேலை அறிக்கையிடப்பட்ட காலத்தில் முடிவுறுத்தப்படாதவிடத்து ஏற்படுகின்ற மூலதனச் செலவீனங்கள் மூலதன வேலை நடைமுறையியல் என அழைக்கப்படுகின்றது. அத்துடன் மூலதன வேலை நடைமுறையியல் என்பதற்குரிய ஏற்பட்ட செலவானது சொத்துக்கள் இயந்திரங்கள் உபகரணங்களுக்கு அவை பாவனைக்கு பெறக்கூடியதாக இருக்கின்றபோது மாற்றீடு செய்யப்படுகின்றது.

## 2.14 <u>நடைமுறைச் சொத்து</u>

நடைமுறைச் சொத்து என நிதி நிலை அறிக்கையின் மூலம் வகைப்படுத்தப்பட்டவை தெளிவாக அறிந்து கொள்ளக்கூடியவை அல்லது பல்கலைக்கழகத்தின் சாதாரண செயல் வட்டத்தில் நுகரக்கூடியவை மற்றும்

அறிக்கை திகதியின் பின் 12 மாதங்களினுள் பணத்தால் அல்லது பணத்துக்கு சமனானவையால் நிறைவேற்றக்கூடியவையாகும்.

### 2.15 இருப்புக்கள் பதிவுப் புத்தகம்

இருப்புக்கள் பதிவுப் புத்தகங்கள் ஆனவை பெறுமதியின் கூட்டுக்களாகும். முதலாவதில் முதலாவது வெளியே என்ற அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றது. இருப்புக்கள் பதிவுப் புதகமானது பிரதானமாக உதிரிப் பாகங்களையும் எழுது உபகரணங்களையும் கொண்டுள்ளது. இவை நுகர்வுக்கே தவிர விற்பனைக்கு அல்ல.

### 2.16 Sundry கடனாளிகளும் பெறுகைகளும்.

Sundry கடனாளிகளும் பெறுகைகளும் வட்டிப் பெறுகைகள் புலமைப்பரிசில் நிதியம் மற்றும் வேறு பெறுகைகளில் இருந்தான நிதியப் பெறுகைகளை உள்ளடக்கியுள்ளது. Sundry கடனாளிகளும் பெறுகைகளும் சாதாரண விலையின் அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றது.

### 2.17 முற்கொடுப்பனவுகள்

மூலதனச் சொத்துக்களை பெற்றுக் கொள்ளத் தெவையான முற்பணங்கள் செயற்பாடுகளை ஆயத்தம் செய்வதற்கான முற்பணங்கள் மற்றும் சேவைகளை பெற்றுக் கொள்வதற்கு முன்வராத முற்பணங்கள் என்பவற்றை முற்பணங்கள் உள்ளடக்கியுள்ளன. இவை சாதாரண பெறுமதி அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றன.

### 2.18 ஊழியர்களுக்கான முற்கொடுப்பனவும் பெறுகைகளும்

ஊழியர்களுக்கான முற்கொடுப்பனவுகளும் பெறுகைகளும் பண்டிகை முற்பணத்தையும் புத்தகங்களுக்கான விசேட கொடுப்பனவுகளையும் உள்ளடக்கியிருக்கின்றன.

### 2.19 பணமும் பணத்துக்கு சமனானவையும்

கையிலுள்ள பணம் வைப்புக்கள், பணமாக மாற்றக்கூடிய குறுகிய கால உயர் திரவ முதலீடுகள் பெறுமதியில் மாற்றம் ஏற்படக்கூடிய ஆபத்தில்லாதவைகள் பணமும் பணத்துக்கு சமனானவையுமாக வரைவிலக்கணப்படுத்தப்படுகின்றது. கையிலுள்ள பணமும் வங்கியில் உள்ள வைப்புக்களும் பண ஊட்ட அறிக்கை நோக்கத்துக்காக பணமும் பணத்துக்கு சமனானவையும் என்பதற்குள் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஆறு மாத முடிச்சியுடைய முதலீடுகள் அல்லது சம்பாதித்த தினத்தை விட குறைந்தவை பணத்துக்கு சமனானவையாக கருதப்படுகின்றது. பண ஓட்ட அறிக்கை நேரில் முறை மூலம் தயாரிக்கப்படுகின்றது.

### 2.20 அரச மாணியங்களுக்கான கணக்கு

#### 2.20.1 மீண்டெழும் மாணியங்கள்

நிதிச் செயற்பாட்டு அறிக்கையில் பண அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சொத்துக்கள் இயந்திரங்கள் உபகரணங்கள் என்பவற்றின் புணருத்தாபனப் பெறுமதி நிர்மாணம், புதிய வேலைக்குரிய மூலதன மாணியங்கள் வேலை நடைமுறை அல்லது மூலதனச் சொத்து என்ற அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றது.

#### 2.20.2 முதற் செலவு செய்த மூலதனத்துக்குரிய வெளி மாணியங்களின் பங்களிப்பு

உருவாக்கப்பட்ட நிதியம் மற்றும் வெவ்வேறு திட்ட நிதியம் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட வொத்துக்கள் இயந்திரங்கள் உபகரணங்களின் பெறுமதி முதற்

செலவு செய்த மூலதனத்துக்குரிய வெளி மாணியங்களின் பங்களிப்பாகக் கொள்ளப்படுகின்றது.

### 2.20.3 மூலதன மாணியங்கள்

SLPSAS வரவின்மை காரணமாக LKAS 20 இற்கு இணங்க மூலதனச் செலவுக்குரிய அரச மாணியம் நிதி சார் அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ளது. LKAS 20 இற்கு இணங்க நிதி நிலை அறிக்கைகளில் உள்ள தாமதமான வருமானங்கள் சொத்துக்களுக்குரிய பாவனைக் காலத்துக்கு மேலான திருப்பிச் செலுத்தப்படும் தொகை மூலதன மாணியங்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

### 2.20.4 உள்வாரியாக மட்டுப்படுத்தப்பட்ட நிதியங்கள்

விசேட நோக்கங்களுக்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதியங்கள் உள்வாரியாக மட்டுப்படுத்தப்பட்ட நிதியங்களுள் அடங்குகின்றன. பீட அபிவிருத்தி நிதியங்கள் பீடங்களுக்குரிய அல்லது துறைகளுக்குரிய வருட முடிவில் செலவு செய்யப்படாத ஒன்று திரட்டிய மீதிகளை பிரதிநிதித்துவம் செய்கின்றது.

### 2.20.5 நன்கொடை நிதியம்

வழங்குனர்களின் வெவ்வேறு நோக்கங்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட பல்கலைக்கழகத்தால் பெற்றுக் கொள்ளப்பட்ட நன்கொடைகள் நன்கொடை முதலீட்டின் மூலம் உருவாக்கப்பட்ட நிதியங்கள் என்பவற்றை நன்கொடை நிதியம் உள்ளடக்குகின்றது.

### 2.20.6 வெளி ஆய்வு நிதியம்

இந்த நிதியம் விசேட ஆய்வு செயற்பாட்டுக்காக பெற்றுக் கொள்ளப்பட்ட ஆய்வு நிதியத்தின் மீதித் தொகையை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

## 2.21 ஊழியர் நன்மைகள்

**பங்களிப்புத் திட்டங்களை வரைவிலக்கணப்படுத்தல்**

குறித்த ஒழுங்குகள் சட்டங்களுக்கு அமைய பல்கலைக்கழக ஊழியர்கள் ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம், பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியம் என்பவற்றைப் பெற்றுக் கொள்ள தகுதியுடையவர்கள். ஸ்ரீ ஜயவர்தன புரப் பல்கலைக்கழகம் அடிப்படை சம்பளத்துடன் வாழ்க்கை செலவு விசேட கொடுப்பனவுகள் என்பவற்றை ஊழியர்களுக்கு வழங்குவதுடன் நிலையான பங்களிப்பை பல்கலைக்கழக ஊழியர் சேமலாப நிதியத்துக்கும் ஊழியர் நம்பிக்கை நிதியத்துக்கும் ஊழியர் ஓய்வூதிய நிதியத்துக்கும் செய்கின்ற அதேவேளை, ஏனைய கொடுப்பனவுகளுக்காக எந்தவொரு சட்ட கடப்பாட்டையும் கொண்டிருக்கவில்லை.

**வரைவிலக்கணப்படுத்தப்பட்ட நன்மை திட்டங்கள்**

வரைவிலக்கணப்படுத்தப்பட்ட பங்களிப்பு திட்டத்திலிருந்து வேறுபட்ட வரைவிலக்கணப்படுத்தப்பட்ட நன்மை திட்டமானது வேலை வாய்ப்புக்கு பின்னைய திட்டமாகும். 1983 ஆம் ஆண்டு இலக்கம் 12 பணிக் கொடை சட்டத்தின் கீழ் ஜயவர்தனபுர பல்கலைக்கழகமானது பணிக் கொடையை வழங்குவதற்குரிய பொறுப்புடைமை உள்ளது.

## 2.22 பொறுப்புடைமையும் சட்ட ஏற்பாடுகளும்

### 2.22.1 நடைமுறை பொறுப்புகள்

நடை முறை பொறுப்புகள் அவற்றினுடைய புத்தக பெறுமதியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

### 2.22.2 <u>சட்ட ஏற்பாடுகள்</u>

கடந்த கால நிகழ்ச்சிகளின் விளைவாக பல்கலைக்கழகம் பொறுப்புகளை முன்வைக்கும் போது (சட்ட,அமைப்பு ரீதியாக) சட்ட ஏற்பாடுகள் அங்கீகரிக்கப்படுகின்றன. பொறுப்புக்களை ஒப்படைக்கத் தேவையான போது வளங்களின் வெளியோட்ட பொருளாதார ரீதியான நன்மைகளை உருக்கொடுக்கும்போது அது சாத்தியமாகின்றது. அத்துடன், பொறுப்புக்களின் அடிப்படையில் நம்பந்தகுந்த கணிப்பீடு உருவாக்கப்படும்.

### 2.22.3 <u>ஓய்வூதிய பணிக்கொடைக்குரிய சட்ட ஏற்பாடுகள்</u>

எல்லா ஊழியர்களுக்கும் அவர்கள் ஓய்வு பெற்றால் நிதிசார் நிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்ட தினத்தில் 1983 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க பணிக்கொடை சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு உழியர்களது பணிக் கொடையானது கணிப்பிடப்படும். ஆகக் குறைந்த சேவைக் காலத்தை பூர்த்தி செய்த எல்லா ஊழியர்களும் பணிக்கொடைக்கு உரித்துடையவர்கள். வருடாந்த ஒதுக்கீட்டு நிதியினூடாக இந்த திட்டங்களுக்குரிய நிதி வழங்கப்படுகின்றது.

### 2.22.4 <u>எதிர்பாரா நிகழ்வு பொறுப்புகளும் எதிர்பாரா நிகழ்வு சொத்துக்களும்</u>

ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தொடர்ச்சியாக ஏற்பட்ட அல்லது ஏற்படாத கடந்த கால நிகழ்வுகளின் நிலவுகையால் நிகழ்கின்ற சாத்தியமான பொறுப்புகளை இது குறிக்கின்றது. நிகழ்ச்சி நிரலின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிகழ்கால கடமைகள் எதிர்பாரா நிகழ்வு பொறுப்புகளினுள் அடக்கப்படமாட்டாது. ஏனெனில், வளங்களின் வெளியோட்டத்துக்கான சாத்தியமின்மையானது பொறுப்புக்களை தீர்ப்பதற்குத் தேவைப்படுகின்ற காரணத்தால் ஆகும்.

உண்மையான அளவீட்டை பெறமுடியாத மிகவும் அரிதான சந்தர்ப்பங்களில் எதிர்பாரா நிகழ்வு பொறுப்புகள் ஏற்படுகின்றன. நிச்சயமற்ற தன்மை எதிர்பாரா நிகழ்வு பொறுப்பாக அங்கீகரிக்கப்பட மாட்டாது. ஆனால், நிதி சார் அறிக்கையில் வெளிக்காட்டப்படும்.

எதிர்பாரா நிகழ்வு சொத்துக்கள் என்பது ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டுக்கு அப்பால் ஏற்பட்ட அல்லது ஏற்படாத அதன் நிலவுகையானது உறுதிபடுத்தப்படக்கூடிய கடந்த கால நிகழ்வுகளிலிருந்து எழுகின்ற சாத்தியமான சொத்துக்களாகும். பல்கலைக்கழகமானது எதிர்பாரா நிகழ்வு சொத்துக்களை அங்கீகரிக்கவில்லை. ஆனால், சாத்தியமான பொருளாதார நன்மையை, உண்மையான நிச்சயத்தன்மை இல்லாதபோது அதன் நிலவுகையை வெளிப்படுத்துகின்றது.

## 2.23 இறைவரி அங்கீகாரம்

### 2.23.1 வரி வசூல் செய்யும் பாடநெறிகள்

இயற்கையின் அடிப்படையில் வரி வசூல் செய்யும் பாடநெறிகளிலிருந்தான வருமானமானது அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

### 2.23.2 <u>நிதி வருமானம்</u>

SLPSAS இன் இன்மை காரணமாக டுமுயுளு 39 இற்கு இணங்க வினைத் திறனான வட்டி வீத முறையைப் பயன்படுத்தி இயல்பின் அடிப்படையில் பெறப்படும் வருமான வட்டியானது அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

2.22.3 **<u>செலவு அங்கீகாரம்</u>**

பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்படுகின்ற எல்லா செயற்பாடுகளுக்குமுரிய செலவீனங்கள் இயல்பான அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்டு நிதி வெளிப்பாட்டு அறிக்கையில் குறிப்பிடப்படுகின்றது.

2.22 **<u>பண ஓட்டக் கூற்று</u>**

SLPSAS இற்கு இணங்க நேரில் முறை மூலம் பண ஓட்டக்கூற்றானது தயார் செய்யப்படுகின்றது. நடைமுறைச் செயற்பாடுகள் நிதிச் செயற்பாடுகள் முதலீட்டு செயற்பாடு என்பற்றுக்குரிய மொத்தமான பண வழங்கல்கள் கொடுக்கல்கள் என்பன இதிலே அங்கீகரிக்கப்படுகின்றன. பணமும் குறுகிய காலத்தில் பணமாக மாற்றக்கூடியவையும் உடனடியாக பணமாக மாற்றக்கூடிய உயர்தரத் திரவ முதலீடுகளும் பணமாக கருதப்படுகின்ற அதேவேளை பெறுமதியில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய ஆபத்தில்லாதவையாகும்.

# 2017.12.31 வருட முடிவுக்கான ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக கணக்காய்வாளரின் அறிக்கையும் அறிக்கைக்கான கணக்காய்வாளரின் பதிலும்

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය
எனது இல.
My No. } எச்ஈடி/டி/யூஎஸ்ஜே/எவ்ஏ/17/4 ඔබේ අංකය உமது இல. Your No. } දිනය திகதி Date } 2018 திசம்பர் 05

உப வேந்தர்,
ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

**ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவு மற்றும் 108 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.naosl.gov.lk

------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 111 ஆம் பிரிவு கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**2. நிதிக்கூற்றுக்கள்**

2

**2.1 அபிப்பிராயம்**

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்**

பல்கலைக்கழகத்தின் மஹாபொல மற்றும் மாணவர்களிற்கான நிதி உதவிகள் தொடர்பான வருமானம் மற்றும் செலவினம் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்குரிய நூலகப் புத்தகங்கள் மற்றும் மேலங்கிகள் மீதான பெறுமானத்தேய்வு முறையே ரூபா 8,147,981 மற்றும் ரூபா 53,128 தொகைகளால் கணக்குகளில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலத்தை கவனத்தில் கொள்ளாமல் ஆண்டின் ஆரம்ப மீதிக்கு பெறுமானத்தேய்வு கணிப்பீடு செய்யப்பட்டிருந்ததனால் ரூபா 1,038,296 தொகை கணக்குகளில் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

(இ) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 4,491,474 பெறுமதியான நிலையான சொத்துக்கள் கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்**

அகற்றப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களிற்குரிய கிரயம் கணக்குக் குறிப்புக்களின் பிரகாரம் ரூபா 10,083,717 மீதியாக காணப்பட்ட போதிலும் அதற்குரிய விரிவான பட்டோலைகளின் பிரகாரம் ரூபா 10,148,112 மீதியாக காணப்பட்டதனால் ரூபா 64,395 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பிணைமுறிகளை மீறியிருந்த விரிவுரையாளர்களிடமிருந்து மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு பெறவேண்டிய ரூபா 105,027,745 கூட்டுமொத்தமான பிணைமுறி மீதிகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பிணைமுறிகள் மீறப்பட்டிருந்த ஆண்டுகளின் எண்ணிக்கையை கருத்தில் கொள்ளும் போது ஆண்டின் இறுதியலுள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 105,027,679 கூட்டுமொத்தமான மீதியில் 34 சதவீதத்திற்குச் சமமான ரூபா 36,100,691 தொகை 5 ஆண்டுகளிற்கு குறைவாகவும் 66 சதவீதத்திற்குச் சமமான ரூபா 66,390,959 தொகை 10 ஆண்டுகளிற்கு மேலாகவும் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. 12 சதவீதத்திற்குச் சமமான ரூபா 12,795,674 கூட்டுமொத்த தொகை 20 ஆண்டுகளிற்கு மேலாக காணப்பட்ட அதே நேரம் 12 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 2,536,029 பெறுமதியான பிணைமுறி மீறப்பட்டிருந்த ஆண்டு தற்போதும் இனங்காணப்பட்டிருக்காதமை மேலும் அவதானிக்கப்பட்டது.

(ii) அறவிடப்பட வேண்டிய பிணைமுறிகள் தொடர்பாக கணக்குப் பிரிவால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களுடன் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவால் தயாரிக்கப்பட்ட வயதுப் பகுப்பாய்வை ஒப்பிடும் போது 24 விரிவுரையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 12,650,028 தொகை உரிய வயதுப் பகுப்பாய்வில் உள்ளடக்கப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது.

(iii) மீளாய்வாண்டின் ஆரம்ப மீதியாக உள்ள முன்னைய ஆண்டின் இறுதியிலுள்ளவாறான ரூபா 79,109,414 தொகையான அறவிடப்பட வேண்டிய பிணைமுறிகளின் பெறுமதி ரூபா 360,571 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. 06 விரிவுரையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பிணைமுறிப் பெறுமதி ரூபா 522,817 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தமை மற்றும் இன்னொரு விரிவுரையாளரின் மீதி ரூபா 883,387 ஆல் அதிகரித்துக்

காட்டப்பட்டிருந்தமை என்பன காரணங்களாக மேற்படி வேறுபாட்டிற்கு பங்களித்திருந்தன.

(iv) 2016 ஆம் ஆண்டில் பிணைமுறிகளை மீறியிருந்த 5 விரிவுரையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 22,749,902 தொகையுடன் சேர்த்து 2011 ஆம் ஆண்டில் பிணைமுறிகளை மீறியிருந்த விரிவுரையாளர் ஒருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 478,400 தொகை என்பன பிணைமுறி மீறல்கள் இடம்பெற்றிருந்த ஆண்டுகளில் இனங்காணப்படுவதற்குப் பதிலாக மீளாய்வாண்டில் இனங்காணப்பட்டிருந்தன. ஆகையால் ஒவ்வொரு ஆண்டிற்கும் உரிய அறவிடப்பட வேண்டிய பிணைமுறிகளின் பெறுமதிகள் சரியாக இனங்காணப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது.

(v) விரிவுரையாளர் ஒருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பிணைமுறிப் பெறுமதி ரூபா 220,861 தொகையென நீதிமன்றம் தீர்மானித்திருந்தது. குறிப்பிட்ட தொகை முழுமையாக அறவிடப்பட்டிருந்த போதிலும் ரூபா 167,630 தொகை மேலும் அறவிடப்பட வேண்டியுள்ளதாக காட்டப்பட்டிருந்தது.

(vi) 2011 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் பிணைமுறிகளை மீறியிருந்த 2 விரிவுரையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 9,875,229 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கணக்குப் பிரிவால் சமர்ப்பிக்கப்பட்ட பட்டியல்களில் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(vii) பிணைமுறிகளின் அறவிடப்பட வேண்டிய பெறுமதியை சரியாகக் கணிப்பீடு செய்யத் தவறியதன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியளவில் 07 விரிவுரையாளர்களிடமிருந்து ரூபா 403,578 தொகை மேலதிகமாக அறவீடு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) சேவையை விட்டுச் சென்று 05 ஆண்டுகளிற்கு மேலான காலப்பகுதி கடந்திருந்த போதிலும் அவ்வாறு சென்றிருந்த பல்கலைக்கழகத்தின் 08 ஊழியர்களிடமிருந்து ரூபா 475,667 கூட்டுமொத்தமான கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் இரண்டு ஊழியர்களிற்குரிய கடன் மீதி 19 ஆண்டுகளிற்கு மேலாக தொடர்ந்து காணப்பட்டது. அவ் ஊழியர்களில் 03 ஊழியர்களிற்குரிய ஊழியர் சேமலாப நிதியத்தின் நிதிகள் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் நிதிகள் விடுவிக்கப்பட்டிருக்கவில்லை என

2017 யூலை 13 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் எனக்கு அறிக்கையிடப்பட்டிருந்தது.

(இ) கேள்வி வைப்புக்களாக பல்வேறு நபர்கள் மற்றும் பிரிவுகளிலிருந்து 2012 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது பல்கலைக்கழகத்தால் பெறப்பட்டிருந்த ரூபா 749,490 கூட்டுமொத்தத் தொகையை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1985 இன் 07 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறு 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 44(1)(V) ஆம் பிரிவு | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டுச் சபைக்கு 21 உறுப்பினர்களை நியமனம் செய்திருந்தது. எவ்வாறாயினும் குறிப்பிடப்பட்ட பிரிவின் பிரகாரம் நிர்வாகத் துறையை பிரதிநிதித்துவப்படுத்தி பொது நிர்வாக அமைச்சின் பிரதிநிதி மற்றும் திறைசேரியின் பிரதிநிதி ஆகியோரை நியமனம் செய்வதற்கு சாத்தியமாக இருந்த போதிலும் அது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயம் | |
| (i) 3.7 மற்றும் 3.8 ஆம் பந்தி | ஊழியர்களின் கடன் தவணைப் பணங்களின் அறவீடானது கடன் வழங்கப்பட்ட மாதத்தை தொடர்ந்து வரும் மாதத்திலிருந்து உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டிய போதிலும் |

6

| | |
|---|---|
| | மீளாய்வாண்டின் போது 29 சந்தர்ப்பங்களில் அவ்வாறு குறித்துரைத்த காலப்பகுதியில் தொடர்ச்சியாக அறவிடப்பட்டிருக்காத கடன் தவணைப் பணங்களின் பெறுமதி ரூபா 625,860 கூட்டுமொத்தம் ஆகும். |
| (ii) 3.18 ஆம் பந்தி | கடன் தொகைகளை அறவீடு செய்வதற்கு அல்லது அறவீடு செய்வதற்காக திருப்திகரமான வழிமுறைகளில் ஈடுபடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காத ரூபா 590,590 இடர் கடன் மீதிக்கு உரித்துடைய 06 உத்தியோகத்தர்களிற்கு சம்பளமற்ற விடுமுறை வழங்கப்பட்டிருந்தது. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| நிதிப் பிரமாணம் 454(1) | அரசாங்க ஆதனங்கள் மற்றும் களஞ்சியங்களில் ஒவ்வொரு பொருளையும் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் வழங்குதல் என்பன பொருளிருப்பு பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும் பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான 6 மின் பிறப்பாக்கிகள் பொருளிருப்பு பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) 2015 யூலை 14 ஆம் திகதிய 03/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையால் திருத்தப்பட்டவாறு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 371(2)(ஆ) | செயல்நிமித்த முற்பணங்களின் ரூபா 100,000 தொகையான ஆகக் கூடிய எல்லையை விஞ்சி 25 சந்தர்ப்பங்களில் ரூபா 3,448,097 கூட்டுமொத்தமான முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தன. |

7

(உ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களிற்கான தாபன விதிக்கோவை

| | |
|---|---|
| (i) XXVI ஆம் அத்தியாயத்தின் 2.1 ஆம் பிரிவு | நிதியாண்டின் இறுதியில் உள்ளவாறு நிறுவனத்திற்குச் சொந்தமான அனைத்து பொருட்கள் மற்றும் நிலையான சொத்துக்கள் என்பன குறித்த பணிக்காக நியமனம் செய்யப்படுகின்ற பொருள் மெய்மையாய்வுச் சபையினால் மெய்மையாய்வு செய்யப்பட வேண்டிய போதிலும், 2015 ஆம் ஆண்டிற்குப் பின்னர் பல்கலைக்கழக நூலகப் புத்தகங்கள் தொடர்பில் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 10 ஆம் அத்தியாயத்தின் 1.6.1 ஆம் பிரிவு மற்றும் 20 ஆம் அத்தியாயத்தின் 3.1 ஆம் பிரிவு | கல்விசார் பதவியணியினரின் உள்வருகை, வெளிச்செல்லல் மற்றும் விடுமுறை என்பவற்றை சரிபார்ப்பதற்காக முறைமையொன்று உருவாக்கப்பட வேண்டுமென பொது முயற்சிகள் குழுவின் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | கணனிகள் மற்றும் உபப்பாகங்கள் தொடர்பில் சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

(எ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2006 இன் பெறுகை வழிகாட்டிக் கோவை

| | |
|---|---|
| (i) 1.4.3 ஆம் பிரிவு | மின் பிறப்பாக்கிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போது வேலைப் |

8

| | |
|---|---|
| | பெறியியலாளர் தொடர்புகளிற்கிணங்க செயற்பட்டிருக்கவில்லை. |
| (ii) 2.8.1 (ஆ) மற்றும் 7.3.1 (ஆ) பிரிவுகள் | மீளாய்வாண்டில் மின் பிறப்பாக்கிகளை கொள்வனவு செய்வதற்காக நியமனம் செய்யப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு விடயத்தில் நிபுணத்துவம் பெற்ற ஒருவராக மின் பொறியியலாளர் ஒருவரை நியமனம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் ஒப்பந்த மதியுரையாளரின் இயலளவில் செயற்பட்டிருந்த பல்கலைக்கழகத்தின் வேலைப் பொறியியலாளர் அதற்காக நியமனம் செய்யப்பட்டிருந்தார். |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகள் ரூபா 224,091,778 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 156,499,651 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதிசார் விளைவுகளில் ரூபா 67,592,127 வீழ்ச்சியொன்றை சுட்டிக்காட்டுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் அரசாங்க மீண்டெழும் மானியம் ரூபா 370,048,000 ஆல் அதிகரித்திருந்த போதிலும் சம்பளம் மற்றும் படிகள் ரூபா 297,649,467 ஆல் அதிகரித்தமை, ஒப்பந்தச் சேவைகள் தொடர்பான செலவினம் ரூபா 145,858,803 ஆல் அதிகரித்தமை, நிலையான சொத்துக்கள் புனரமைப்பு செலவினம் மற்றும் ஆராய்ச்சி செலவினம் என்பன ரூபா 86,880,237 ஆல் அதிகரித்தமை மற்றும் ஏனைய செலவினங்கள் ரூபா 70,832,816 ஆல் அதிகரித்தமை என்பன மேற்படி வீழ்ச்சிக்கு பிரதானமாக பங்களித்திருந்தன.

மீளாய்வாண்டு மற்றும் முன்யை 4 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2013 ஆம் ஆண்டின் ரூபா 341,172 தொகையான பற்றாக்குறை 2014 ஆம் ஆண்டளவில் ரூபா 145,069,392 மிகையொன்றாக அதிகரித்திருந்ததை வெளிப்படுத்தியிருந்தது. எவ்வாறாயினும் 2015 ஆம் ஆண்டின் போது மீண்டும் ரூபா 17,883,619 பற்றாக்குறையொன்றாக வீழ்ச்சியடைந்திருந்தது. 2015 ஆம் ஆண்டில் ஆரம்பித்திருந்த வீழ்ச்சி தொடர்ச்சியாக அதிகரித்து மீளாய்வாண்டளவில் அவ் வீழ்ச்சி ரூபா 224,091,778 ஆகக் காணப்பட்டது. எவ்வாறாயினும நிதி

விளைவுகளிற்கு ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றை மீண்டும் சீராக்கம் செய்த போது 2013 ஆம் ஆண்டில் ரூபா 1,508,188,994 நேர்மறைப் பெறுமதியாகக் காணப்பட்ட பங்களிப்பு மீளாய்வாண்டளவில் ரூபா 2,727,244,746 தொகை வரை தொடர்ச்சியாக அதிகரித்திருந்தது.

**3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு**

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது பணிக்கொடை தொடர்பான செலவினம் உள்ளடங்கலாக மீளாய்வாண்டின் ஊழியர் ஊதியம் 14.26 சதவீதத்தால் ஆன அதிகரிப்பை பிரதிநிதித்துவப்படுத்தி ரூபா 2,475.08 மில்லியன் தொகையாக உள்ளது. ரூபா 3,162.16 மில்லியன் தொகையான மொத்த அரசாங்க மீண்டெழும் மானியத்தில் 78.27 சதவீதத்திற்கு சமமான ரூபா 2,475.08 மில்லியன் தொகை ஊழியர் ஊதியம் மீது செலவிடப்பட்டிருந்ததுடன் ஒட்டுமொத்த அரசாங்க மீண்டெழும் மானியத்தின் 21.73 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 687.07 மில்லியன் தொகை மாத்திரம் அனைத்து ஏனைய செலவினங்கள் மீது செலவிடப்பட்டிருந்தது. மேலும் மீளாய்வாண்டின் இறுதியளவில் 2016 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகத்தின் பதவியணியினரின் ஒவ்வெரு பதவிகளுக்கும் உரிய சம்பளங்களிலுள்ள வேறுபாடுகள் கருத்தில் கொள்ளப்படாமல் கணிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போது ஊழியரொருவருக்கான வருடாந்தக் கிரயம் ரூபா 1,227,718 தொகையாக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

**3.3 நிறுவனத்திற்கு எதிராக அல்லது நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்பட்டிருந்த சட்டரீதியான வழக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரொருவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டமைக்கு எதிராக மாவட்ட நீதிமன்றத்தில் அவரால் வழக்கொன்று தொடரப்பட்டிருந்தது.

(ஆ) முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் பிரதி நிதியாளரொருவர் இரண்டாம் தடவை அவரது சேவையை பல்கலைக்கழகம் நீடிப்புச் செய்து வழங்கத் தவறியமைக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்கொன்றை தொடுத்திருந்தார்.

(இ) முறையான ஒழுக்காற்று விசாரணையொன்றின் ஊடாக சேவை முடிவுறுத்தப்பட்டிருந்த தரம் III எழுதுநரொருவர் மீள சேவையில்

அமர்த்துவதற்கு தொழில் நியாய சபையால் வழங்கப்பட்ட வழக்குத் தீர்ப்பிற்கெதிராக பல்கலைக்கழகத்தால் உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) பிணைமுறிகள் மீறப்பட்டமைக்காக பெறப்பட வேண்டிய ரூபா 5,103,826 தொகையினை அறவீடு செய்வதற்காக பல்கலைக்கழகத்தினால் முன்னாள் விரிவுரையாளர் ஒருவருக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடரப்பட்டிருந்தது.

(உ) பிணைமுறிகள் மீறப்பட்டமைக்காக பெறப்பட வேண்டிய ரூபா 10,762,632 தொகையை அறவிடுவதற்காக தகுதிகாண் விரிவுரையாளரொருவரிற்கு எதிராக மாவட்ட நீதிமன்றத்தில் பல்கலைக்கழகத்தால் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

(ஊ) பல்கலைக்கழகத்தின் இரண்டு கட்டிடங்களை திருத்தம் செய்தலை கைவிட்டிருந்த ஒப்பந்ததாரர் ஒருவரிடமிருந்து ரூபா 1,785,240 அறவீட்டிற்காக மாவட்ட நீதிமன்றத்தில் பல்கலைக்கழகத்தால் இரண்டு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 செயற்பாடு மற்றும் மீளாய்வு

(அ) பல்கலைக்கழகத்தின் மாணவரொருவருக்கான கிரயம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் போது புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பொறியியல் மற்றும் தொழில்நுட்ப பீடம் தவிர்ந்த 4 பீடங்களில் கல்விகற்ற 12,054 மாணவர்களிற்காக மீண்டெழும் செவினமாக ரூபா 3,127,368,214 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டில் 11,609 மாணவர்களிற்காக ரூபா 2,913,911,823 தொகை செலவிடப்பட்டிருந்தது. அதற்கிணங்க மீளாய்வாண்டின் போது மாணவர் ஒருவருக்கான சராசரிக் கிரயம் ரூபா 259,447 தொகையாக காணப்பட்டமையை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 3 சதவீதத்திற்குச் சமமான ரூபா 8,442 இனால் ஆன அதிகரிப்பை சுட்டிக்காட்டுகின்றது. குறிப்பிட்ட 04 பீடங்களினதும் மீண்டெழும் செலவினம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 213,456,391

அல்லது 7 சதவீதத்தால் அதிகரித்திருந்த போதிலும் மாணவர் ஒருவரிற்கான கிரயத்தில் ஏற்பட்ட 3 சதவீத அதிகரிப்புக்கு முன்னைய ஆண்டிற்கு எதிராக மீளாய்வாண்டின் மாணவர் எண்ணிக்கை 445 ஆல் அதிகரித்திருந்தமை பிரதானமாக பங்களித்திருந்தது.

(ii) புதிதாக ஆரம்பிக்கப்பட்ட தொழில்நுட்ப பீடத்தின் 642 மாணவர்கள் மற்றும் பொறியியல் பீடத்தின் 240 மாணவர்கள் தொடர்பாக மீண்டெழும் செலவினமாக மீளாய்வாண்டில் முறையே ரூபா 164,843,281 மற்றும் ரூபா 118,019,455 தொகைகள் ஏற்பட்டிருந்தன. இதனால் மீளாய்வாண்டின் போது தொழில்நுட்ப பீடத்தின் மாணவர் ஒருவரிற்கான கிரயம் ரூபா 256,765 தொகையாக இருந்ததுடன் பொறியியல் பீடத்தின் மாணவர் ஒருவரிற்கான கிரயம் ரூபா 491,748 தொகையாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2017/2018 கல்வியாண்டிற்காக 3,497 எண்ணிக்கையான உள்ளக மாணவர்கள் பல்கலைக்கழகத்தின் 06 பீடங்களிற்கு சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தனர். எவ்வாறாயினும் பௌதீக விஞ்ஞானப் பிரிவிற்கான 28 மாணவர்கள், உணவுத் தொழில்நுட்ப பிரிவிற்கான 02 மாணவர்கள், முகாமைத்துவப் பிரிவிற்கான 04 மாணவர்கள், வணிகப் பிரிவிற்கான 02 மாணவர்கள், பொது முகாமைத்துவப் பிரிவிற்கான 02 மாணவர்கள், தாதியப் பிரிவிற்கான 06 மாணவர்கள் மற்றும் பொறியியல் தொழில்நுட்பப் பிரிவிற்கான ஒரு மாணவர் உள்ளடங்கலாக 117 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) 2015 நவம்பர் 17 ஆம் திகதிய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 15/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் உயர் கல்வி நிறுவனங்களால் நடாத்தப்படுகின்ற உள்ளக மாணவர்களிற்கான முதலாவது பட்டப்படிப்பு மற்றும் பட்டப்பின் படிப்பு கற்கைநெறிகள் தொடர்பான பரீட்சைப் பெறுபேறுகள் பரீட்சைத் திகதியிலிருந்து 03 மாத காலப்பகுதியினுள் வெளியிடப்பட வேண்டும். கணக்காய்வுப் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டிருந்த 06 பீடங்களில் 04 பீடங்களால் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2017 ஆம் ஆண்டில் முகாமைத்துவ மற்றும் வணிக பீடத்தின் முதலாவது அரையாண்டு இறுதிப் பரீட்சையின் பெறுபேறுகள் 16 – 28 நாட்கள் தாமதத்தின் பின்னர் வெளியிடப்பட்டிருந்தன.

(ii) 2017 ஆம் ஆண்டின் முதலாவது அரையாண்டிற்காக மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடத்தின் இறுதிப் பரீட்சை 2017 ஆகஸ்ட் 19 இல் முடிவடைந்திருந்ததுடன் அதன் பெறுபேறுகள் 54 – 102 நாட்கள் தாமதத்தின் பின்னர் வெளியிடப்பட்டிருந்தன. மேலும் 2017 ஆம் ஆண்டின் இரண்டாவது அரையாண்டு இறுதிப் பரீட்சை 2018 பெப்ரவரி 17 இல் முடிவடைந்திருந்த போதிலும் பெறுபேறுகளை வெளியிடுவதில் 27 – 42 நாட்கள் தாமதம் ஏற்பட்டிருந்தது.

(iii) 2017 ஆம் ஆண்டிற்கான பொறியியல் பீடத்தின் முதலாவது அரையாண்டு இறுதிப் பரீட்சை 2017 மே 21 இல் முடிவடைந்திருந்ததுடன் அதன் பெறுபேறுகள் 2017 செப்தெம்பர் 28 இல் வெளியிடப்பட்டிருந்தன. அதற்கிணங்க முதலாம் ஆண்டு மாணவர்கள் மாத்திரம் பரீட்சைகளிற்குத் தோற்றியிருந்த அவ் பீடத்திற்கான பெறுபேறுகளை வெளியிடுவதில் 40 நாட்கள் தாமதமாகியிருந்தது.

(iv) பிரயோக விஞ்ஞான பீடத்தின் மூன்றாம் மற்றும் நான்காம் ஆண்டு பரீட்சைகளின் பெறுபேறுகளை வழங்குவதில் நீடித்த தாமதங்கள் அவதானிக்கப்பட்டன. 2017 ஆம் ஆண்டில் மூன்றாம் மற்றும் நான்காம் ஆண்டுகளின் இரண்டாவது அரையாண்டு இறுதிப் பரீட்சைகள் ஒக்தோபர் 28 இல் நடைபெற்றிருந்ததுடன் பெறுபேறுகளை வழங்குவதற்கு முன்னர் 116 நாட்கள் தாமதம் ஏற்பட்டிருந்தது. மேலும் பிரயோக விஞ்ஞான பீடத்தின் முதலாம் மற்றும் இரண்டாம் ஆண்டுகளிற்குரிய பெறுபேறுகளை வழங்குவது தொடர்பான தகவல் முறைமையொன்று காணப்படாததன் காரணமாக பெறுபேறுகளை வழங்குகின்ற திகதிகள் கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. முதலாம் மற்றும் இரண்டாம் ஆண்டு மாணவர்களின் பெறுபேறுகள் பீடத்தின் சபையின் அங்கீகாரமின்றி உரிய விரிவுரையாளர்களால் கற்றல் முகாமைத்துவ முறைமைக்கு நேரடியாக தரவேற்றப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களிற்கான தாபன விதிக்கோவையின் X ஆம் அத்தியாயத்தின் 1.6.1 ஆம் பிரிவு மற்றும் 20 ஆம் அத்தியாயத்தின் 3.1 ஆம் பிரிவு என்பவற்றின் பிரகாரம் கல்விசார் பதவியணியினரின் வருகைகள், வெளிச்செல்லல்கள் மற்றும் விடுமுறைகளை சரிபார்த்து உறுதிப்படுத்துவதற்கான நடைமுறையொன்று தயாரிக்கப்பட வேண்டுமென

13

2010 செப்தெம்பர் 07 ஆம் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் குழுக் கூட்டத்தில் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன. இருப்பினும், இதுவரையிலும் அவ்வாறானதோர் நடைமுறை தயாரிக்கப்பட்டிருக்காததால் கல்விசார் பதவியணியினருக்கு மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்த ரூபா 1,931,193,768 கூட்டுத்தொகையான சம்பளங்கள் மற்றும் படிகளின் சரியான தன்மையினை உறுதிப்படுத்த முடியாதிருந்தது. ஏனைய அரசாங்க நிறுவனங்களினால் கடமைகளிற்காக வருகைதரும் மற்றும் வெளியேறிச் செல்லும் நேரங்களினை பதிவு செய்வதற்குப் பயன்படுத்தப்படுகின்ற எந்தவொரு முறையும் பல்கலைக்கழகத்தின் கல்விசார் பதவியணியினர் தொடர்பில் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. விரிவுரையாளர்கள் உரிய பிரகாரம் விரிவுரைகளில் பங்குபற்றுகின்றமையால் அவ்வாறான தேவைப்பாடொன்று ஏற்படவில்லை என்பதாக கணக்காய்வு ஐயவினாக்களிற்கு பதிலளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், விரிவுரையாளர்கள் விரிவுரைகளிற்காக வருகை தருகின்றமை சம்பந்தமாக சில கல்விப் பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின் போது பரிசோதனைகளின் போது பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டிருந்தன. அது தொடர்பில் திருப்திகரமான கட்டுப்பாட்டு முறையொன்று காணப்படவில்லை என்பது பின்வரும் விடயங்களிலிருந்து அவதானிக்கப்பட்டது.

(i) சிங்கள மற்றும் வெகுஜன தொடர்பாடல் பிரிவில் 2017 ஆம் ஆண்டின் முதலாவது அரையாண்டின் செயலாற்றலை பரீட்சித்த போது பிரிவால் சமர்ப்பிக்கப்பட்ட நேர அட்டவணையில் பட்டியலிடப்பட்ட விரிவுரை மணித்தியாலங்களின் எண்ணிக்கையை விடக் குறைவான விரிவுரைகளே நடாத்தப்பட்டிருந்தன என மாணவர்களின் கையொப்ப பதிவேட்டின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது, அதற்கிணங்க நேர அட்டவணையிலுள்ள 19 பாடங்களிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட விரிவுரை மணித்தியால எண்ணிக்கையை விட 164 மணித்தியாலங்கள் குறைவாக விரிவுரைகள் நடாத்தப்பட்டிருந்ததுடன் விதிமுறைகளிற்கு இணங்க ஒவ்வொரு விரிவுரையாளராலும் மேற்கொள்ளப்பட வேண்டிய ஆகக் குறைந்த விரிவுரை மணித்தியால எண்ணிக்கை பூர்த்தி செய்யப்பட்டிருக்காத 11 சந்தர்ப்பங்கள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(ii) ஒப்படைகளை சமர்ப்பித்தல் மற்றும் கல்வித் துறை சுற்றுலாக்கள் போன்ற கல்வி நடவடிக்கைகளில் நேரடியாக ஈடுபடுகின்ற மாணவாகள் தொடர்பான வருகைப் பதிவேடுகள் பேணப்பட வேண்டுமென பிரிவுத் தலைவர்களால் தீர்மானிக்கப்பட்டிருந்த

14

போதிலும் வருகைகளிற்காக அத்தகைய பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை.

(iii) பிரிவின் 14 நிரந்தர விரிவுரையாளர்கள் மற்றும் 05 வருகை விரிவுரையாளர்கள் விரிவுரைகளிற்காக வேலையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அவ் விரிவுரையாளர்கள் அரையாண்டுகளின் போது ஒவ்வொரு பாடத்திற்காகவும் 15 மணித்தியாலங்கள் படி 37 பாடநெறிகள் தொடர்பாக 555 மணித்தியாலங்கள் பாடக்குறிப்பு வகுப்புக்களை (tutorial classes) நடாத்தியிருக்க வேண்டிய போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டமைக்கான எந்தவொரு சான்றும் காணப்படவில்லை.

(iv) 2014/2015 கல்வியாண்டின் முதலாவது அரையாண்டிற்குரிய பாலி மற்றும் பௌத்தக் கற்கைகள் பிரிவின் செயலாற்றல் மீதான பரீட்சிப்பானது நேர அட்டவணைகளிற்கு இணங்க மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய விரிவுரை மணித்தியாலங்களின் எண்ணிக்கையை விடக் குறைவாக விரிவுரைகள் நடாத்தப்பட்டிருந்தமையை வெளிப்படுத்தியிருந்தது. 51 பாடநெறிகள் தொடர்பாக 202 விரிவுரை மணித்தியாலங்கள் அவ்வாறு விடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(v) மாணவர்களின் கையொப்ப தாள்கள் விரிவுரையாளர் அல்லது மேற்பார்வையாளரின் பெயர், திகதி மற்றும் நேரத்தை கொண்டிருக்காததால் சந்தர்ப்பங்கள் ஒவ்வொன்று தொடர்பாகவும் விரிவுரைக் காலப்பகுதியை மதிப்பிட முடியாதிருந்ததுடன் விரிவுரைகள் நடாத்தப்பட்டிருந்ததை சரிபார்ப்பதற்கான சான்றாக அத் தாள்களை பயன்படுத்த முடியாதிருந்தது.

(உ) பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற ஆய்வுகளின் மூலம் அப் பல்கலைக்கழகத்தின் தரத்தினை உயர்த்த முடிவதுடன் தேசிய பொருளாதாரத்திற்கும் பாரிய பங்களிப்பினை வழங்க முடிகின்றது. ஆகையால், பல்கலைக்கழக விரிவுரையாளர்களிற்கு ஆராய்ச்சி உதவிகளை வழங்குவதற்காக அரசாங்கத்தினால் பாரியளவு நிதி ஏற்பாட்டுத் தொகை வருடந்தம் ஒதுக்கீடு செய்யப்படுவதுடன் மீளாய்வாண்டில் 84 விரிவுரையாளர்களிற்கு ஆராய்ச்சி மானியமாக ரூபா 164.85 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. மேலும் 2012 ஆம் ஆண்டு தொடக்கம் முன்னைய ஆண்டின் இறுதி வரை 227 விரிவுரையாளர்களிற்காக ரூபா 255.61 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும்

போதிலும் வருகைகளிற்காக அத்தகைய பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை.

(iii) பிரிவின் 14 நிரந்தர விரிவுரையாளர்கள் மற்றும் 05 வருகை விரிவுரையாளர்கள் விரிவுரைகளிற்காக வேலையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அவ் விரிவுரையாளர்கள் அரையாண்டுகளின் போது ஒவ்வொரு பாடத்திற்காகவும் 15 மணித்தியாலங்கள் படி 37 பாடநெறிகள் தொடர்பாக 555 மணித்தியாலங்கள் பாடக்குறிப்பு வகுப்புக்களை (tutorial classes) நடாத்தியிருக்க வேண்டிய போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டமைக்கான எந்தவொரு சான்றும் காணப்படவில்லை.

(iv) 2014/2015 கல்வியாண்டின் முதலாவது அரையாண்டிற்குரிய பாலி மற்றும் பௌத்தக் கற்கைகள் பிரிவின் செயலாற்றல் மீதான பரீட்சிப்பானது நேர அட்டவணைகளிற்கு இணங்க மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய விரிவுரை மணித்தியாலங்களின் எண்ணிக்கையை விடக் குறைவாக விரிவுரைகள் நடாத்தப்பட்டிருந்தமையை வெளிப்படுத்தியிருந்தது. 51 பாடநெறிகள் தொடர்பாக 202 விரிவுரை மணித்தியாலங்கள் அவ்வாறு விடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(v) மாணவர்களின் கையொப்ப தாள்கள் விரிவுரையாளர் அல்லது மேற்பார்வையாளரின் பெயர், திகதி மற்றும் நேரத்தை கொண்டிருக்காததால் சந்தர்ப்பங்கள் ஒவ்வொன்று தொடர்பாகவும் விரிவுரைக் காலப்பகுதியை மதிப்பிட முடியாதிருந்ததுடன் விரிவுரைகள் நடாத்தப்பட்டிருந்ததை சரிபார்ப்பதற்கான சான்றாக அத் தாள்களை பயன்படுத்த முடியாதிருந்தது.

(உ) பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற ஆய்வுகளின் மூலம் அப் பல்கலைக்கழகத்தின் தரத்தினை உயர்த்த முடிவதுடன் தேசிய பொருளாதாரத்திற்கும் பாரிய பங்களிப்பினை வழங்க முடிகின்றது. ஆகையால், பல்கலைக்கழக விரிவுரையாளர்களிற்கு ஆராய்ச்சி உதவிகளை வழங்குவதற்காக அரசாங்கத்தினால் பாரியளவு நிதி ஏற்பாட்டுத் தொகை வருடந்தம் ஒதுக்கீடு செய்யப்படுவதுடன் மீளாய்வாண்டில் 84 விரிவுரையாளர்களிற்கு ஆராய்ச்சி மானியமாக ரூபா 164.85 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. மேலும் 2012 ஆம் ஆண்டு தொடக்கம் முன்னைய ஆண்டின் இறுதி வரை 227 விரிவுரையாளர்களிற்காக ரூபா 255.61 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும்

15

2012 ஆம் ஆண்டில் 24 விரிவுரையாளர்களாலும் 2013 ஆம் ஆண்டில் 15 விரிவுரையாளாகளாலும் 2014 ஆம் ஆண்டில் 08 விரிவுரையாளர்களாலும் 2015 ஆம் ஆண்டில் 37 விரிவுரையாளர்களாலும் 2016 ஆம் ஆண்டில் 54 விரிவுரையாளர்களாலும் என்றவாறு 138 விரிவுரையாளர்களால் உரிய ஆராய்ச்சிகள் கைவிடப்பட்டிருந்ததுடன் அவ் விரிவுரையாளர்கள் தொடர்பாக பல்கலைக்கழகத்தால் நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சம்பளங்கள் மற்றும் படிகளின் பிழையான கணிப்பீடு, கணனிகள் தொடர்பாக இரகசியக் குறியீடுகளை பயன்படுத்துவதில் முறைகேடுகள், வரி மற்றும் கடன் தவணைப் பணங்களை அனுப்புவதிலுள்ள தவறுகள், இரட்டிப்பு கணிப்பீட்டு தவறுகள், உள்ளீடு மற்றும் வெளியீடு தொடர்பான உள்ளக மேற்பார்வை காணப்படாதமை மற்றும் பல்வேறு நிலைகளிலிருந்தான தொழிற்பாடுகளில் குறுக்கீடுகளிற்கான சாத்தியத்தன்மை போன்ற காரணங்களினால் உள்ளீட்டுத் தரவு பாதுகாப்பற்றிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. பல்கலைக்கழகத்தின் கணனிப் பிரிவினால் தயாரிக்கப்பட்ட அரை தன்னியக்க மென்பொருளானது சமமான இயலளவுடைய நிறுவனங்களால் பயன்படுத்தப்படாத ஒன்றாகவுள்ளமை உள்ளடங்கலாக 11 குறைபாடுகள் காரணமாக சம்பளங்களை தயாரிப்பதற்காக பல்கலைக்கழகத்தால் பயன்படுத்தப்பட்ட கணனி மென்பொருள் நம்பிக்கைக்குரியதாக இருக்கவில்லை என்பது முன்னைய ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. அதற்கிணங்க சுதந்திரமான தரப்பினர் ஊடாக முறைமைக் கணக்காய்வொன்றை மேற்கொண்டு 06 மாத காலப்பகுதியினுள் மென்பொருளின் குறைபாடுகளை சரிசெய்வதற்கும் புதிய கணனி முறைமையொன்றை அறிமுகப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுப்பதற்கு மீளாய்வாண்டின் ஆகஸ்ட் 10 ஆம் திகதி இடம்பெற்ற 466 ஆவது ஆளுகைச் சபையில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2018 ஆகஸ்ட் 31 வரையிலும் உரிய நடவடிக்கை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பல்கலைக்கழகத்தின் நிர்வாகக் கட்டிடம், மருத்துவ பீடம், சுமங்கல கட்டிடம் மற்றும் விமலா டி சில்வா விடுதி என்பவற்றில் நிறுவப்பட்ட பழையதாக இருந்தாலும் பயன்பாட்டிலுள்ள 04 மின்பிறப்பாக்கிகளின் கிரயம் அல்லது மீள்மதிப்பீட்டுத் தொகை நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

16

(இ) வனம் மற்றும் சுற்றாடல் விஞ்ஞான கல்விப் பிரிவுடன் இணைந்த நிலைத்துநிற்கவல்ல நிலையத்தை ஸ்தாபிப்பதற்கான அரசியலமைப்பின் பிரகாரம் அவற்றின் 25 சதவீத நிதியானது ஆளணி வேதனங்கள் தொடர்பாக பயன்படுத்தப்பட முடிந்திருந்த போதிலும் பல்கலைக்கழகத்தின் 03 தற்காலிக போதனாசிரியர்கள் நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர், செயலாளர் மற்றும் செயற்திட்ட உதவியாளர் ஆகிய 03 பதவிப் பெயர்களில் முழு நேரம் வேலையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் சம்பளங்கள் மற்றும் படிகள் உரிய செயற்திட்டத்தின் வருமானத்திலிருந்து செலுத்துவதற்குப் பதிலாக பல்கலைக்கழகத்தின் நிதிகளிலிருந்து செலுத்தப்பட்டிருந்தன. 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 செப்தெம்பர் 10 வரை பல்கலைக்கழகத்திலிருந்து அவற்றின் மீது ஏறத்தாழ ரூபா 05 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது.

## 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

மின்பிறப்பாக்கிகளிற்கு பயன்படுத்துவதற்கு 11,260 லீற்றர் டீசலை கொள்வனவு செய்வதற்காக மீளாய்வாண்டின் போது பொதுக் கட்டுப்பாட்டு பிரிவினால் எரிபொருளிற்கான கட்டளைகள் முன்வைக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றிலிருந்து 6,060 லீற்றர்கள் தொடர்பான 08 எரிபொருள் கட்டளைகள் பராமரிப்புப் பிரிவின் இருப்புப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் வேலை அதிதியட்சகரின் வேலை நிறைவேற்றல் பதிவேட்டிற்கிணங்க மின்பிறப்பாக்கிகளிற்கு 9,970 லீற்றர் எரிபொருள் பயன்படுத்தப்பட்டிருந்தது. பல்கலைக்கழகத்திற்கு எரிபொருள் இருப்புக்களை கொண்டுவருதல், மின்பிறப்பாக்கிகளிற்கு எரிபொருள் நிரப்புதல் மற்றும் மீதி இருப்புக்களை பேணுதல் என்பவற்றில் வேலை அத்தியட்சகர் தாமாகவே ஈடுபட்டிருந்தமையும் புத்தகங்களில் வேலை அத்தியட்சகரால் வழங்கப்பட்ட தகவல்கள் களஞ்சியப் பொறுப்பாளரால் பதிவு செய்யப்பட்டிருந்தமையும் வேலை அத்தியட்சகரின் வேண்டுதலின் அடிப்படையில் எரிபொருள் கட்டளைகளை வழங்குதல் மற்றும் பற்றுச்சீட்டுக்களை பெறுதல் மாத்திரம் பொது நிர்வாக உதவிப் பதிவாளரால் மேற்கொண்டிருந்தமையும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன. ஆகையால் மின்பிறப்பாக்கிகளிற்கு எரிபொருள் வழங்குவது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு மிகவும் வினைத்திறனற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4.4 குறைவாகப் பயன்படுத்தப்பட்ட நிதிகள்

எதிர்பார்க்கப்பட்ட செலவினங்கள் முறையாக மதிப்பீடு செய்யப்படாமல் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருந்ததால் கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புக்கள், அழகியல் திறன்களை முன்னேற்றுதல் மற்றும் பௌதீகவியல் கல்விப் பிரிவை மாற்றியமைத்தல் என்பவற்றிற்காக திறைசேரி மானியங்களிலிருந்து பெறப்பட்ட

முறையே ரூபா 2,628,076, ரூபா 1,570,849 மற்றும் ரூபா 1,249,500 தொகைகள் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்படாது இருந்தன.

**4.5 பதவியணியினர் நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பல்கலைக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 2,307 ஆக இருந்ததுடன் அதில் கல்விசார் பதவியணியினரின் 205 பதவிகள், உதவிக் கல்விசார் பதவியணியினரின் 34 பதவிகள், நிர்வாகப் பதவியணியினரின் 02 பதவிகள், ஏனைய நிறைவேற்றுப் பதவியணியினரின் 09 பதவிகள் மற்றும் வைத்திய அதிகாரியின் 03 பதவிகள் என்பன வெற்றிடமாக இருந்தன.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட கல்விசாராப் பதவியணியினர் 1,066 ஆக இருந்ததுடன் அவற்றில் 916 பேர் நிரந்தர அடிப்படையிலும் 15 பேர் ஒப்பந்த அடிப்படையிலும் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் 135 பதவிகள் வெற்றிடமாக இருந்தன.

**5. நிலைபேறான அபிவிருத்தி**

**5.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ளுதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு "நிகழ்ச்சிநிரல்" இன் பிரகாரம் ஒவ்வொரு அரசாங்க நிறுவகமும் முறையாக செயற்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டு தொடர்பாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தினால் அதன் நோக்கெல்லையின் கீழ் வருகின்ற தொழிற்பாடுகள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பாக போதியளவு அறிந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு நிகழ்ச்சிநிரல் இன் பிரகாரம் நிறுவனத்தின் தொழிற்பாடுகள் தொடர்பான நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் அவ் இலக்குகளை அடைந்துகொள்வது தொடர்பான இலக்கு கட்டங்கள் மற்றும் அவ் இலக்குகளை அடைந்துகொள்வதை மதிப்பீடு செய்வதற்கான சுட்டிகள் என்பவற்றை இனங்காண்பதற்கு நிறுவனத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

18

(ஆ) பல்கலைக்கழகத்தின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக 2018 மார்ச் 21 இல் என்னால் மாதிரியின் ஊடாக வேண்டப்பட்டிருந்த தகவல்கள் 2018 ஒக்தோபர் 15 வரையிலும் பல்கலைக்கழகத்தால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 பெறுகை மற்றும் ஒப்பந்தச் செயன்முறை

#### 6.1.1 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016/2017 ஆண்டிற்கான சிற்றுண்டிச்சாலையை பேணுவதற்கு தேசிய போட்டிக் கேள்வியின் கீழ் 2016 ஆகஸ்ட் 28 இல் கேள்விகள் கோரப்பட்டிருந்ததுடன் 14 சிற்றுண்டிச்சாலைகள் தொடர்பாக 38 விலைமனுக்கள் பெறப்பட்டிருந்த அதே நேரம் ஸ்ரீ சோரத விடுதியிலுள்ள சிற்றுண்டிச்சாலைக்காக ஒரு விலைமனு பெறப்பட்டிருந்தது. அவ் விலைமனுதாரரும் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்வதற்கு நிராகரித்தமையால் 2016 ஒக்தோபர் 11 இல் ஏனைய சிற்றுண்டிச்சாலைகளுக்காக விலைமனுக்களை சமர்ப்பித்திருந்த 38 விலைமனுதாரர்களில் 5 விலைமனுதாரர்கள் மாத்திரம் தெரிவுசெய்யப்பட்டு ஸ்ரீ சோரத விடுதியிலுள்ள சிற்றுண்டிச்சாலைக்காக மீண்டும் கேள்வி கோரப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் குறிப்பிட்ட 5 விலைமனுதாரர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய அடிப்படையொன்றில்லாமல் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர்.

(ஆ) ரூபா 45,961,020 தொகை செலவிடுவதன் மூலம் 500 கேவிஏ இயலளவான 3 மின் பிறப்பாக்கிகளை வழங்கி நிறுவுதல் தொடர்பான ஆவணங்கள் மீதான பரீட்சிப்பின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 2016 செப்தெம்பர் 24 இல் தேசிய புதினப் பத்திரிகை ஒன்றில் மாத்திரம் விளம்பரம் பிரசுரிக்கப்பட்டு தேசிய போட்டிக் கேள்வியினூடாக உள்ளூர் முகவரொருவர் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

(ii) வற் தவிர்ந்த ரூபா 45,961,020 பெறுமதிக்கு உடன்படிக்கை கைச்சாத்திட்ட திகதியிலிருந்து 120 நாட்களினுள் 03 மின் பிறப்பாக்கிகளையும் வழங்கி நிறுவுதல் என்ற நிபந்தனையின் கீழ் 2016 திசெம்பர் 30 இல் வழங்குநருடன் உடன்படிக்கை

கைச்சாத்திடப்பட்டிருந்தது. பின்னர் 2017 ஏப்ரல் 27 ஆம் திகதிய வழங்குநரின் வேண்டுதலின் அடிப்படையில் 2017 யூலை 31 வரை கால நீடிப்பு வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2018 ஏப்ரல் 26 வரை நிறுவுதலை வழங்குநர் தாமதப்படுத்தியிருந்தார்.

(iii) பெறுகைக்குரிய தொழில்நுட்பக் குறிப்புரைகளை தயாரித்தல், சேவை நிபந்தனைகளை தீர்மானித்தல் மற்றும் நோக்கெல்லையை தீர்மானித்தல் என்பன வேலைப் பொறியியலாளராலேயே மேற்கொள்ளப்பட்டிருந்தன. உள்ளூர் முகவரிடமிருந்து மின் பிறப்பாக்கிகளை கொள்வனவு செய்வதற்கு தீர்மானித்த போது வழங்குநரால் வழங்கப்படும் மின் பிறப்பாக்கிகளிற்குரிய உற்பத்தியாளரின் தொழிற்சாலையிலுள்ள மின் பிறப்பாக்கிகளின் பொருத்தத் தன்மையை பரீட்சிப்பதற்கு பொறியியலாளர் மற்றும் ஏனைய உத்தியோகத்தர் அனுமதிக்கப்பட வேண்டும் எனவும் அதன் மீதான செலவினம் வழங்குநரால் பொறுப்பேற்கப்பட வேண்டும் எனவும் தொழில்நுட்பக் குறிப்புரைகள் மற்றும் இணங்கிய பதிவேடுகளின் கீழ் வேலை நோக்கெல்லையில் உள்ளடக்கப்பட்டிருந்தது. வழங்குநரால் சமர்ப்பிக்கப்பட்ட விலைமனுப் பெறுமதியிலான அதிகரிப்பு அந் நிபந்தனைக்கான காரணமாக அவதானிக்கப்பட முடிந்திருந்தது. குறிப்பிட்ட வழங்குநர் நாடளாவிய ரீதியில் பல நிறுவனங்களிற்கு மின் பிறப்பாக்கிகளை வழங்கியிருந்தார். மின் பொறியியலாளரால் பரீட்சிக்கப்பட வேண்டிய ஒன்று அல்லது சில மின்பிறப்பாக்கிகளிற்கான சாத்தியத்தன்மை காணப்பட்ட போதிலும் உரிய பரீட்சிப்பு தொடர்பாக 06 நாட்கள் இத்தாலிக்கான வெளிநாட்டு சுற்றுலாவில் வேலைப் பொறியியலாளர் மற்றும் ஏனைய உத்தியோகத்தர் பங்குபற்றியிருந்தனர். அவ் 02 உத்தியோகத்தர்களிற்கும் இணைந்த படி மற்றும் வெப்ப உடைகளிற்கான படிகளாக பல்கலைக்கழகத்தால் ரூபா 102,185 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) வற் இன்றி ரூபா 2,810,000 பெறுமதியில் 50 கேவிஏ மின்பிறப்பாக்கியை கொள்வனவு செய்வதற்கான பெறுகை செயன்முறை தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2017 ஏப்ரல் 26 இல் பெறுகை ஆரம்பிக்கப்பட்டிருந்தது. பல்கலைக்கழகத்தில் பதிவுசெய்யப்பட்ட கடிதங்கள் ஊடாக ஒப்பந்ததாரர்களிற்கு அறிவிக்கப்பட்டு சந்தை விலை முறையின் கீழ் வழங்குநர் தெரிவுசெய்யப்பட்டிருந்தார்.

(ii) தொழில்நுட்பக் குறிப்புரைகளிற்கு இணங்க மின்பிறப்பாக்கிக்காக புகைப் பரிசோதனை சான்றிதழ் வேண்டப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்ததாரர் அச் சான்றிதழை சமர்ப்பித்திருக்கவில்லை.

(iii) தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் கேள்வி திறத்தல் குழு என்பவற்றிற்கான நியமனக் கடிதங்கள் முறையாக வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 20 பெண் விடுதிகள் மற்றும் 18 ஆண் விடுதிகளிற்காக 54 பராமரிப்பாளர்களின் சேவைகளை பெற்றுக்கொள்வதற்காக பெறுகைச் செயன்முறையை பின்பற்றும் போது 2017 யூலை மாதத்தில் ஆகக் குறைந்த விலைமனுதாரரிற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் விடுதிகளிற்கு முறையாக ஊழியர்களை வேலையிலீடுபடுத்துவதற்கு அக் கம்பனி தவறியதன் காரணமாக 2017 நவம்பரிலிருந்து அதன் சேவை இடைநிறுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பரீட்சிப்பின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2016 இன் 3 ஆம் இலக்க பணியாளர்களின் தேசிய ஆகக்குறைந்த வேதனங்கள் அதிகாரச்சட்டம் மற்றும் 2016 இன் 04 ஆம் இலக்க மற்றும் 2005 இன் 36 ஆம் இலக்க பணியாளர்களின் பாதீட்டு நிவாரணப் படி அதிகாரச்சட்டம் என்பவற்றின் பிரகாரம் கைத்தொழிலொன்றில் அல்லது சேவையொன்றில் ஈடுபட்டுள்ள ஊழியர்கள் அனைவரிற்கும் ஆகக் குறைந்த மாதாந்த சம்பளம் ரூபா 13,500 ஆக காணப்பட வேண்டியதுடன் அவர்களின் ஆகக் குறைந்த நாளாந்த வேதனம் ரூபா 540 ஆக காணப்பட வேண்டும். அது தொடர்பாக கவனத்தில் கொள்ளாமல் நாளாந்த வேதனம் ரூபா 472 ஆக விலைமனுவைச் சமர்ப்பித்திருந்த நிறுவனமொன்றிற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது.

(ii) ஒவ்வொரு ஊழியரினதும் சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு கிரய மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்ட பின்னர் ஆகக் குறைந்த விலை தீர்மானிக்கப்பட்டு பெறுகை அறிவித்தலில் ஆகக்குறைந்த விலையை பிரசுரிப்பதற்குப் பதிலாக ஒவ்வொரு ஊழியரினதும் சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு கேள்விகள் கோரப்பட்டிருந்தன. ஆகையால் ஊழியர்களிற்கான ஆகக் குறைந்த வேதனத்தை சமர்ப்பிப்பதற்கு விலைமனுதாரர்கள் தள்ளப்பட்டிருந்தனர். அரசாங்க கொள்கைகளின் பிரகாரம் ஆகக் குறைந்த வேதனக் கொடுப்பனவு மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை

21

நிதியம் என்பவற்றிற்கு பங்களிப்புக்களை செலுத்துதல் தொடர்பான நிபந்தனைகளை தீர்மானிக்கத் தவறியமை காரணமாக ஊழியர்களின் மனக்குறைகள் மற்றும் தொழிலாளர் சட்டங்கள் தொடர்பாக பல்கலைக்கழகம் தேவையற்று பொறுப்புக் கூறவேண்டியிருந்தது.

(iii) முன்னைய ஆண்டில் குறிப்பிட்ட சேவையை வழங்கியிருந்த நிறுவனத்திற்கான உடன்படிக்கைக் காலப்பகுதி 2016 திசெம்பர் 15 இல் உள்ளவாறு முடிவடைந்திருந்ததால் 2016 ஒக்தோபர் 12 இல் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவை நியமனம் செய்ததன் மூலம் பெறுகை செயன்முறை ஆரம்பிக்கப்பட்டிருந்தது. ஆனால் புதிய நிறுவனமொன்றை தெரிவு செய்தல் 2017 யூலை 16 வரை தாமதமாகியிருந்தது. பெறுகையை முறையாக திட்டமிட்டு நிறைவேற்றுவதிலுள்ள முகாமைத்துவக் குறைபாடு காரணமாக 09 மாத காலப்பகுதி முழுவதும் பெறுகை செயன்முறை இடம்பெற்றிருந்தது. பெறுகை செயன்முறைக் காலப்பகுதியின் போது அப்போது வரை பல்கலைக்கழகத்திற்காக சேவையை வழங்கியிருந்த நிறுவனம் செயற்பாட்டில் இருப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருந்ததால் ஒப்பந்த உடன்படிக்கைக்கு புறம்பாக 2017 யூலை 15 வரை ரூபா 10,232,973 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(iv) பெறுகைச் செயன்முறையை முறையாக நிறைவேற்றத் தவறியதன் காரணமாக 2017 ஆம் ஆண்டிற்காக விடுதிகளை பராமரிப்பது தொடர்பான சேவைகளிற்காக தெரிவு செய்யப்பட்ட நிறுவனத்துடனான உடன்படிக்கை 2017 நவம்பர் 12 இலிருந்து செயற்பாட்டிற்கு வரும் வகையில் அரைவாசியில் முடிவுறுத்தப்பட்டிருந்தது. 2017 திசெம்பர் மாதத்திலிருந்து முன்னைய ஊழியர்களைப் பயன்படுத்தி அச் சேவையை பல்கலைக்கழகம் பெற்றிருந்தது. இது தொடர்பில் 2017 ஆம் ஆண்டிற்காக ரூபா 2,073,150 தொகையையும் 2018 மே மாதம் வரை ரூபா 4,116,812 தொகையையும் பல்கலைக்கழகம் செலுத்தியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 6.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழங்கள் அதிகாரச்சட்டத்தின் 102 ஆம் பிரிவிற்கு முரணாக நிதிக் கடப்பாடுகள் ஏற்படுத்தப்பட்ட பின்னர் அப் பெறுமதிகளிற்கு ஒத்த தொகைகளினால் பாதீட்டு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருந்தமை காரணமாக மீளாய்வாண்டின் போது 8 சந்தர்ப்பங்களில் அவ்வப்போது பாதீடு திருத்தியமைக்கப்பட்டிருந்தது.

### 6.3 தீர்வு காணப்படாத கணக்காய்வு பந்திகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மருத்துவ பீடத்திற்காக மெத் செவன காணியிலிருந்து 5 ஏக்கர் விஸ்தீரணமுடைய நிலத்தினை கையேற்பதற்காக 1994 யூன் 29 ஆம் திகதி எடுக்கப்பட்டிருந்த அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் 1998 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரை 3 சந்தர்ப்பங்களில் ரூபா 24 மில்லியன் தொகையும், மீளாய்வாண்டில் ரூபா 50 மில்லியன் தொகையுமாக ரூபா 74 மில்லியன் கூட்டுமொத்தத் தொகை மேல் மாகாண சபைக்குச் செலுத்தப்பட்டிருந்த போதிலும் குறித்த காணியினை கையேற்கும் நடவடிக்கைகள் 2017 ஆகஸ்ட் 31 ஆம் திகதி வரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 ஆம் ஆண்டில் ரூபா 61.5 மில்லியன் செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த கொஹுவலவில் அமைந்துள்ள காணியும் கட்டிடமும் பல்கலைக்கழகத் தேவைப்பாட்டிற்குப் பொருத்தமற்றிருந்ததால் களனி பல்கலைக்கழகத்தின் அரங்கேற்றக் கலைகள் நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் இந்த கையளிப்பு கணக்கீடு செய்யப்பட்டிருக்காததுடன் பல்கலைக்கழகத்தினால் பயன்படுத்தப்படாத சொத்தொன்று மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(இ) ரூபா 70 மில்லியன் கிரயமுடைய பல்கலைக்கழகத்தின் கழிவு நீர் அகற்றல் செயற்திட்டத்திற்காக 2003 ஆகஸ்ட் 6 ஆம் திகதி அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டு அதற்கான நிர்மாணங்களை திட்டமிடுவதற்காக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு ரூபா 2,336,090 தொகை செலுத்தப்பட்டிருந்தது. நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்படாமை தொடர்பில் 2011 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது குறித்த செயற்திட்டத்தினை நிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பதிலளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் நடைபெற்றுவரும் வேலைகளின் கீழ் அந்த மீதி காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 1990 ஆம் ஆண்டிலிருந்து நிதிக்கூற்றுக்களில் முற்பணமாக முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 1,310,000 தொகை மஹரகம நகர சபைக்குச் செலுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அவ் முற்பணத்தை தீர்ப்பதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) அரசாங்கத்தின் அல்லது அரசாங்கத்துடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் பணிகளிற்காக சம்பள மீள்நிரப்புதல் அடிப்படையில் 2009 ஆம் ஆண்டில் பாதுகாப்பு அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்த பெண் விரிவுரையாளர் ஒருவருக்குச் செலுத்தப்பட்டிருந்த சம்பளங்களில் உள்ளடங்கியுள்ள ரூபா 1,437,882 கல்விப் படிகளை குறித்த நிறுவனத்தினால் மீள்நிரப்புவதற்கு முடியாதிருந்தது என அறிவிக்கப்பட்டிருந்தமையால் குறித்த தொகை அந்த விரிவுரையாளரிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் அதற்குத் தேவையான சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) ஆய்வுகூட கட்டிடம் மற்றும் புதிய கலைக்கூடம் தொடர்பான திருத்தங்கள் ஒப்பந்ததாரரால் அரைவாசியில் கைவிடப்பட்டிருந்ததால் 2012 ஏப்ரல் 25 இல் ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ஒப்பந்ததாரருக்குச் செலுத்தப்பட்ட ரூபா 2,268,483 முற்பணத்திலிருந்து நிறைவேற்றப்படாத வேலைகள் தொடர்பாக அறவிடப்பட வேண்டிய ரூபா 1,764,013 தொகை செயலாற்றல் பிணைமுறியிலிருந்து அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. ஒப்பந்ததாரரிடமிருந்து அத் தொகையை அறவீடு செய்வதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) சபடிகல் விடுமுறையிலுள்ள (sabbatical leave) பல்கலைக்கழகத்தில் கடமையாற்றும் ஏனைய பல்கலைக்கழகங்களின் உத்தியோகத்தர்களின் சம்பளங்களிலிருந்து உழைக்கும் போதே செலுத்தும் வரியினை கழிப்பதற்கு உரிய வரி அட்டவணை பின்பற்றப்படாததன் காரணமாக 03 உத்தியோகத்தர்களின் சம்பளங்களிலிருந்து ரூபா 318,850 ஆல் வரிகள் குறைத்து அறவீடு செய்யப்பட்டிருந்தன.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது பல்கலைக்கழகத்தின் உப வேந்தரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் முகாமைத்துவம் | நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | செயற்பாட்டுக் கட்டுப்பாடு | (i) உரிய தரத்திலமைந்த தன்னியக்க கணனி முறைமையின் தேவையினை சுட்டிக்காட்டத் தவறியமை.<br>(ii) அறவிடப்பட வேண்டிய கட்டணங்களை உடனடியாக அறவீடு செய்வதற்கு போதுமானளவு நடவடிக்கை எடுக்கத் தவறியமை. |
| (இ) | பதவியணியினர் நிர்வாகம் | ஆட்சேர்ப்புக்களை முறையாக மேற்கொள்ளத் தவறியமை. |
| (ஈ) | சுய நிதியிடல் கற்கைநெறிகளின் முகாமைத்துவம் | மேலதிக நிதிகளை முறையாக பயன்படுத்த தவறியமை மற்றும் கணக்கீட்டுக் குறைபாடுகள் காணப்படுதல். |
| (உ) | ஆராய்ச்சி உதவிகள் மீதான உள்ளகக் கட்டுப்பாடு | ஆராய்ச்சி உதவிகளின் பயன்பாடுகள் தொடர்பில் பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறியமை மற்றும் செயன்முன்னேற்றத்தை மீளாய்வு செய்யத் தவறியமை. |
| (ஊ) | நிதிக் கட்டுப்பாடு | (i) பணப் பெறுவனவு தொடர்பாக வயதுப் பகுப்பாய்வை சரியாக இனங்காணத் தவறியமை.<br>(ii) காசுப் புத்தகத்தில் நிலுவையான மீதிகள் காணப்படுதல் |
| (எ) | பெறுகை செயன்முறை | பெறுகைத் திட்டத்திற்கமைய கொள்வனவுகளை மேற்கொள்ளத் தவறியமை மற்றும் உடன்படிக்கைகளை கைச்சாத்திடுவதில் குறைபாடுகள் காணப்படுதல். |

எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

25

**ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழத்தின் 2017 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவுறும் ஆண்டிற்கான நிதி வெளியீடு தொடர்பான 1978 இன் 16 ஆம் இலக்கப் பல்கலைக்கழகச் சட்டத்தின் உறுப்புரை 108 (1) இன் பிரகாரம் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை**

| | |
|---|---|
| **2.2 நிதி வெளியீடு பற்றிய கருத்துரைப்பு**<br>**2.2.1 கணக்கீட்டுத் தரங்கள்**<br>பல்கலைக்கழகத்தின் மஹபொல மற்றும் உதவி நன்கொடை தொடர்பான வருமானம் மற்றும் செலவு ஆகியன மீளாய்வு ஆண்டிற்குரிய உரிய நிதி வெளியீட்டின் மூலம் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | எதிர்கால நிதி அறிக்கைகளில் வெளிப்படுத்தப்படு வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| **2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**<br>பின்வரும் அவதானிப்புக்கள் முன்வைக்கப்படுகின்றன.<br>(அ) மீளாய்வு ஆண்டிற்குரிய நூலகத்தின் நூல்களுக்கான ரூபா 8,147,981/= வும் பட்ட மேலங்கிகளுக்கான ரூபா 53, 128/= வும் குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.<br>(ஆ) சொத்துக்களின் ஆயுட்காலத்தைக் கவனத்திற் கொள்ளாது வருடத்தின் ஆரம்ப மீதியின் அடிப்டையில் கழிவு கணக்கிடப்பட்டுள்ளதன் காரணமாக ரூபா 1,038,296/= மேலதிகமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.<br>(இ) மீளாய்வு ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 4,491,474/= பெறுமதியான நிலையான சொத்துக்கள் கணக்கீடு செய்யப்பட்டு இருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டில் சீர்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |
| **2.2.3 தெளிவுபடுத்தப்படாத வேறுபாடுகள்**<br>அகற்றப்பட்ட சொத்துகள் மற்றும் அவற்றின் எல்லையிலுள்ள உபகரணங்கள் தொடர்பான செலவுக் குறிப்புக்களின் பிரகாரம் மிகுதி ரூபா 10,083,717/= என்ற வகையிலும், அது தொடர்பான விளக்க ஆவணங்களில் ரூபா 10,148,112/= என்ற வகையிலும் காட்டப்பட்டுள்ளதன் காரணமாக ரூபா 64,395/= வித்தியாசம் அவதானிக்கப்பட்டுள்ளது. | வேறுபாடுகளை இனங்கண்டு சரிப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.<br>( வேறுபாடுகளை இனங்காண்பதற்குத் தேவைப்படும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.) |

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் 1 2017 ஆண்டறிக்கை

| | |
|---|---|
| **2.3 கிடைக்கப்பெற வேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்**<br>பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.<br>(அ) மீளாய்வு ஆண்டின் இறுதியில் பிணை முறிகளை மீறும் விரிவுரையாளர்களிடமிருந்து கிடைக்கப் பெற வேண்டிய ரூபா 105,027,745/= பிணை முறி பாக்கிகள் தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | |
| (i) பிணை முறிகள் மீறப்பட்ட வருடங்களின் பிரகாரம் கவனத்தில் கொள்ளும் போது மீளாய்வு ஆண்டின் இறுதியில் அறவிடப்பட வேண்டி இருந்த ரூபா 105,027,679/= பாக்கியிலிருந்து ரூபா 36, 100, 691/= அதாவது 34 வீதம் 5 வருடங்களுக்குக் குறைவான பிணை முறி பாக்கிகளாக இருப்பதுடன் ரூபா 66,390,959/= அல்லது 66 வீதமானவை 10 வருடங்களை விடப் பழமையானவை என அவதானிக்கப்படுகின்றது. மொத்தம் ரூபா 12,795,674/= அல்லது 12 வீதமானவை 20 வருடங்களை விடப் பழமையான பாக்கிகள் என்றும் ரூபா 2,536,029/= அதாவது 12 வீதம் தொடர்பாக சம்பந்தப்பட்ட பிணை முறி மீறப்பட்ட வருடத்தைக் கூட அடையாளம் காணவில்லை என்றும் தொடர்ந்தும் அவதானிக்கப்பட்டது. | பிணை முறிகளைச் சேகரிக்கும் செய்முறையின் பிரகாரம் பணத்தை சேகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சில விரிவுரையாளர்கள் தவணை முறைப்படி பணத்தைச் செலுத்தியிருப்பதோடு பணம் செலுத்துவதைத் தட்டிக்கழித்தோருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |
| (ii) அறவிடப்பட வேண்டிய பிணை முறிகள் தொடர்பாக கணக்கீட்டுத் துறை முன்வைத்துள்ள தகவல்களுடன் உள்ளகக் கணக்கீட்டுத் துறை தயாரித்த காலப் பகுப்பாய்வை ஒப்பிடும் போது 24 விரிவுரையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 12,650,028/= சம்பந்தப்பட்ட காலப் பகுப்பாய்வினில் உள்ளடக்கப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. | கல்விசார் மற்றும் கல்விசாரா நிறுவனக் கிளை கணக்கீட்டுக் கிளைக்கு பணத்தைச் சேகரிப்பதைத் துரிதப்படுவதற்காக வழங்கிய காகிதக் கோப்புகளின் பிரகாரம் மட்டுமே கணக்கீட்டுத் துறையானது காலப் பகுப்பாய்வைத் தயாரித்துள்ளதால் இவ்வேறுபாடு நிகழ்ந்துள்ளது. |

| | |
|---|---|
| (iii) கடந்த ஆண்டின் இறுதியில் அறவிடப்பட வேண்டிய பிணை முறிகளின் பெறுமதி ரூபா 79,109,414/= ஆக நிலவினாலும் மீளாய்வு ஆண்டின் ஆரம்ப மீதி என்ற வகையில் ரூபா 360, 571/= கூடுதலாகக் கணிப்பிடப்பட்டிருந்தது. விரிவுரையாளர்கள் 6 பேரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பிணை முறிகளின் பெறுமதி ரூபா 522,817/= குறைவாகக் காட்டப்பட்டமையினாலும் பிறிதொரு விரிவுரையாளரின் மீதியானது ரூபா 883,387/= கூடுதலாகக் காட்டப்பட்டமையினாலுமே இந்த வித்தியாசம் ஏற்பட்டுள்ளது. | 2018 ஆண்டில் இது சரி செய்யப்பட்டுள்ளது. |
| (iv) 2011 ஆம் ஆண்டின் பிணை முறிகளை மீறிய விரிவுரையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 478,400/= உம் 2016 ஆம் ஆண்டில் பிணை முறிகளை மீறிய 5 விரிவுரையாளர்களிடமிருந்து கிடைக்கப் பெற வேண்டிய ரூபா 22,749,902/= உம் பிணை முறிகள் மீறப்பட்ட ஆண்டுகளில் இனங்காணப்படாது மீளாய்வு ஆண்டிலேயே இனங்காணப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அந்தந்த ஆண்டுகளில் அறவிடப்பட வேண்டிய பிணை முறிகளின் பெறுமதியானது சரியாக இணங்காணப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டுள்ளது. | 2018 ஆம் ஆண்டில் சரி செய்யப்பட்டுள்ளது. |
| (v) விரிவுரையாளர் ஒருவரிடமிருந்து கிடைக்கப் பெற வெண்டிய பிணை முறியின் பெறுமதியானது ரூபா 220,861/= என்று நீதிமன்றினால் தீர்மானிக்கட்டிருந்ததுடன் அது பூரணமாக அறவிடப்பட்டு முடிவுற்றிருந்தாலும் தொடர்ந்தும் ரூபா 167,630/= அறவிடப்பட வேண்டிய பாக்கி என்று காட்டப்பட்டிருந்தது. | 2018 ஆம் ஆண்டின் அட்டவணை இற்றைப் படுத்தப்பட்டு சரி செய்யப்பட்டுள்ளது. |
| (vi) 2011 ஆம், 2015 ஆம் ஆண்டுகளில் பிணை முறிகளை மீறிய விரிவுரையாளர்கள் இருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 9,875,229/= மீளாய்வு ஆண்டு ஆகும் போதுகணக்கீட்டுக்கிளைவெளியிட்டஅட்டவணைகளில்இனங்காணப்பட்டிருக்கவில்லை. | விரிவுரையாளர்கள் இருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை முறையே ரூபா 9,875,229/= பிணை முறி நிலுவையானது 2018 ஆம் ஆண்டில் அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ளது. |

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் 3 2017 ஆண்டறிக்கை

| | |
|---|---|
| (viii) பிணை முறிகளின் பெறுமதியை அறவிடும் போது அதனைச் சரியாக கணிப்பிட்டிருக்காமையால் விரிவுரையாளர்கள் 02 பேரிடமிருந்து மீளாய்வு ஆண்டின் முடிவில் ரூபா 403,578/= கூடுதலாக அறவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டுள்ளது. | கூடுதல் அறவீட்டைத் திருப்பிச் செலுத்துவதற்குரிய காகிதாதிகள் நிர்வாக துறைக்கு ஆற்றுப்படுத்தப்பட்டு அவற்றை தனிப்பட்ட காகிதக் கோவைகளுடன் பரிசீலனை செய்து தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) சேவையிலிருந்து விலகிச் சென்ற பல்கலைக்கழக ஊழியர்கள் 08 பேர் தொடர்பான ரூபா 475,667/= கடன் நிலுவையானது 5 வருட காலம் தாண்டிச் சென்றிருப்பினும் மீளாய்வு ஆண்டிலாவது அந்நிலுவையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் ஊழியர் இருவரினது கடன் நிலுவை 19 வருடங்கள் பழமையானவையாகும். மேற்குறிப்பிட்டவர்களுள் 03 ஊழியர்களின் ஊழியர் சேம இலாப நிதி விடுவிக்கப்பட்டிருந்தாலும் அந்நிதி விடுவிக்கப்படவில்லை என 2017 ஜுலை 13 ஆம் திகதி கடிதத்தின் மூலம் எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. | சம்பளமற்ற விடுமுறையை வழங்குவதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட கடன் பணத்தை அறவிடுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். அதிகாரிகளுள் ஒருவரின் கடன் பணம் 2018 இல் அறவிடப்பட்டிருப்பதுடன் பிறிதொருவரின் கடன் பணத்தை அறிவிடுவதற்குப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய அதிகாரிகளின் கடன் பணத்தை சேமலாப நிதியை விடுவிக்கும் போது அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (இ) 2012 இலிருந்து 2016 வரை பல ஆட்கள் மற்றும் துறைகளிடமிருந்து பல்கலைக்கழகமானது டெண்டர் வைப்புகள் என்ற வகையில் பெற்றுக் கொண்ட ரூபா 749,490/= பணத்தைத் தெளிவுபடுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கொடுப்பனவு பற்றுச்சீட்டுக்களின் மூலப் பிரதிகளுடன் வேண்டுகோள் விடுத்ததன் பின்னர் கொடுப்பனவுகள் வழங்கப்படும். வேண்டுகோள் விடுக்கப்படாத வைப்புகள் வருமானத்தோடு சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2.4 சட்டங்கள், விதிகள், ஒழுங்கு விதிகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கு இசைவின்மை

பின்வரும் இசைவின்மைகள் அவதானிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், ஒழுங்கு விதிகள் | இசைவின்மைகள் | |
|---|---|---|
| அ. 1985 இன் 07 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1978 இன் 16 ஆம் இலக்கப் பல்கலைக்கழகச் சட்டத்தின் 44 (i)(v) ஆம் உறுப்புரை | பல்கலைக்கழக பாலன மன்றுக்கு 21 உறுப்பினர்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்டிருந்தனர். எவ்வாறாயினும் அந்த உறுப்புரையின் பிரகாரம் நிர்வாகப் பரப்பைப் பிரதிநிதித்துவப்படுத்தி பொது நிர்வாக அமைச்சின் உறுப்பினர் ஒருவரையும் திறைசேரியின் உறுப்பினர் ஒருவரையும் நியமித்திருக்க கூடியதாக இருந்தாலும் அவ்விடயத்தில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | 1978 இன் 16 ஆம் இலக்கப் பல்கலைக்கழகச் சட்டத்தின் கீழ் வெளிவாரி உறுப்பினர்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஆ. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவையின் XXIV ஆம் அத்தியாயம் | | |
| (i) 3.7 மற்றும் 3.8 ஆம் பந்திகள் | கடன் தவணைகள் கடன் வழங்கப்பட்ட மாதத்துக்கு அடுத்த மாதத்திலிருந்து ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டுமாயினும் மீளாய்வு ஆண்டில் 29 சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட காலத்திலும் தொடர்ந்தும் அறவிடப்படாத கடன் தவணைகளின் பெறுமதி ரூபா 625,860/= ஆகும். | ஊழியர்களின் சேமலாப நிதியைப் பிணையாக வைத்தே ஊழியர்களுக்குக் கடன் வழங்கப் படுகின்றது. சம்பளமற்ற விடுமுறை வழங்கப்படும் போது அக்காலத்துக்குக் கடன் நிலுவைக்கான வட்டி அறவிடப்படுகிறது.<br><br>ஊழியர்களுக்கு வழங்கப்படும் கடன் மாதாந்தம் அறவிடப்படுவதோடு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் வெளியிடப்பட்டுள்ள சுற்று நிருபங்களின் பிரகாரம் கடன் பணத்தைத் தொடர்ச்சியாக அறவிட முடிவதில்லை. எனினும் கடன் பணத்தை முழுமையாக அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன் அக்கடன் தொகை மீளச் செலுத்தப்படும் வரை வேறும் கடன் வழங்கப்படுவதில்லை. |
| (ii) 3.18 ஆம் பந்தி | கடன் பணத்தை அறவிடுவதற்கோ அல்லது அறவிடுவதற்குப் பிறிதொரு சிறந்த திட்டத்தை ஈடுபடுத்துவதற்கோ நடவடிக்கை எடுக்காதிருந்த போது ரூபா 590,590/= இடர் கடன் நிலுவையாகவிருந்த உத்தி யோகத்தர் 06 பேருக்கு சம்பளமற்ற விடுமுறை வழங்கப்பட்டிருந்தது. | |

**(இ) இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதி ஒழுங்கு விதிகள் கோவை**

| | | |
|---|---|---|
| நிதி ஒழுங்கு விதிகள் 454 (1) | அரசாங்க சொத்துக்களையும் களஞ்சிய சாலைகளில் உள்ள சகல பொருட்களையும் பொறுப்பேற்றல் மற்றும் விநியோகித்தல் ஆகியன பொருள் ஆவணப் புத்தகத்தில் குறிப்பிடப்பட வேண்டுமாயினும், பல்கலைக்கழகத்துக்குச் சொந்தமான 06 மின் ஆக்கிப் பொறிகள் பொருள் ஆவணப் புத்தகத்தில் உள்ளடக் கப்பட்டிருக்கவில்லை. | வேலை ஒப்பந்தத்தின் கீழ் மின் ஆக்கிகள் கொள்வனவு செய்யப்பட்டிருப்பதுடன் பல்கலைக்கழகம் இந்தச் செலவுகளை கட்டிடங்களின் கீழ் காட்டியுள்ளது. இலங்கை கணக்கீட்டுத் திறன் மாற்றத்தோடு துணைக் கருவிகளைப் புறம்பாகக் காட்டும் கொள்கையின் கீழ் மின் ஆக்கிகளைப் புறம்பாக சொத்துக்களின் கீழ் காட்டுவதற்கும் கழிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஈ) 2015 ஜுலை 14 திகதியிடப்பட்ட 03/2015 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையில் திருத்தப்பட்ட இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதி ஒழுங்கு விதி 371 (2) (ஆ) | நிமித்த (adhoc) முற்பணத்தின் உச்ச எல்லையான ரூபா 100,000/= யும் தாண்டி 25 சந்தர்ப்பங்களில் ரூபா 3,448,097/= முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. | பல்கலைக்கழகத்தின் சில பணிகளுக்கு முன்பணம் வழங்கப்படும் போது இந்த எல்லையைத் தாண்டிச் செல்ல முடியும். எனினும் உச்ச எல்லையை நிதமும் வைத்திருப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். |

**உ. பல்கலைக்கழ மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்கள் கோவை**

| | | |
|---|---|---|
| (i) XXVI ஆம் அத்தியாயத்தின் 2.1 ஆம் பந்தி | நிதி ஆண்டின் இறுதித் தினமாகும் போது நிறுவனத்திற்குச் சொந்தமான சகல பொருட்களும் நிலையான சொத்துக் களும் சம்பந்தப்பட்ட பணிக்காக நியமிக்கப்படும் கணிப்பாய்வுக் குழு வொன்றினால் சரி, பிழை பார்க்கப்பட வேண்டுமாயினும் 2015 இன் பின்னர் பல்கலைக்கழக நூலகத்திலுள்ள புத்தகங்கள் பற்றிய கணிப்பாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | பல்கலைக்கழகத்திடம் 03 இலட்சத்துக்கு மேற்பட்ட நூல்கள் இருப்பதனால் வருடாந்தம் கணிப்பாய்வினை மேற்கொள்ளுதல் நடைமுறைச் சாத்தியமற்றதாகையால் வருடாந்தக் கணிப்பாய்வு மேற்கொள்ளபடாததோடு 05 வருடங்களுக்கு ஒருமுறை கணிப்பாய்வு மேற் கொள்ளப்படுகிறது. |
| (ii) 20ஆம் அத்தியாயத்தின் 3.1 ஆம் உறுப்புரையும் 10 ஆம் அத்தியாயத்தின் 1.6.1 ஆம் உறுப்புரையும் | கல்விசார் ஊழியர்களின் வருகை, வெளியேறுகை மற்றும் விடுமுறைகளை உறுதிப்படுத்துதல் என்பவற்றுக்காக செய் முறை ஒன்று வகுக்கப்பட வேண்டும் என பொதுத் தொழில் குழுவில் ஆலோசனை வழங்கப்பட்டிருந்தாலும் அதன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. | இது முழு பல்கலைக்கழக முறைமையோடு தொடர்பு படும் ஓர் விடயமாகையால் இது பற்றித் தீர்மானம் எடுத்துச் செயற்பட வேண்டிய விதம் குறித்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆலோசனை வழங்கப்பட வேண்டும். |
| (iii) 2002 நவம்பர் 28 ஆம் திகதியிடப்பட்ட HAI/2002/02 ஆம் இலக்க திறை சேரி சுற்றுநிருபம். | கணினி மற்றும் கணினித் துணைக் கருவிகள் தொடர்பான சுற்றுநிருபத்தின் பிரகாரம் நிலையான சொத்து ஆவண மொன்று பேணப்படவில்லை. | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்று நிருபத்தின் பிரகாரம் செயற்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| **எ. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் பெறுகை வழிகாட்டல் கோவை 2006** | | |
| (i) 1.4.3 ஆம் பந்தி | மின் ஆக்கிகளைக் கொள்வனவு செய்யும் போது வேலைப் பொறியியலாளரின் தொடர்பு பற்றி இசைவாகச் செயற்பட வில்லை. | பெறுகை வழிகாட்டல் கோவையின் 1.4.3 ஆம் பந்தியின் பிரகாரம் செயற்பட்டுள்ளது. |
| (ii) 2.8.1 (ஆ) மற்றும் 7.3.1 (ஆ) பந்திகள் | மீளாய்வு ஆண்டில் மின் ஆக்கிகள் தொடர்பான பெறுகைக்காக நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவுக்கு விடயம் தொடர்பான நிபுணர் என்ற வகையில் மின் பொறியியலாளர் ஒருவரை நியமிக்காது கொந்தராத்துப் பணியின் ஆலோசகராகச் செயற்படும் பல்கலைக்கழக வேலைப் பொறியியலாளர் அதற்காக நியமிக்கப்பட்டுள்ளார். | எதிர்காலத்தில் பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.8.1 (ஆ) பிரகாரம் செயற்படும். வேலைப் பொறியியலாளர் எச்சந்தர்ப்பத்திலும் இந்தக் கொந்தராத்தின் ஆலோசகராக நியமிக்கப்படவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி பெறுபேறுகள்

முன்வைக்கப்பட்ட நிதி வெளியீட்டின் பிரகாரம் மீளாய்வு ஆண்டின் நிதிப் பெறுபேறு ரூபா 224,091,778/= பற்றாக்குறைவாகியதுடன் அதற்கு நேர் ஒத்ததாகக் கடந்த வருடத்தின் பற்றாக்குறை ரூபா 156,499,651/= ஏற்பட்டமையால் கடந்த வருடத்துக்குச் சார்பு ரீதியாக மீளாய்வு ஆண்டின் நிதிப் பெறுபேறு ரூபா 67,592,127/= ஆல் சீர்கெட்டுள்ளது. மீளாய்வு ஆண்டில் அரசாங்கத்தின் மீண்டெழும் வழங்குகைகள் கடந்த ஆண்டுக்குச் சார்பு ரீதியாக ரூபா 370,048,000/= ஆல் அதிகரித்திருப்பினும், சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் ரூபா 297,649,467/= ஆலும் ஒப்பந்தச் சேவைச் செலவுகள் ரூபா 145,858,803/= ஆலும் நிலையான சொத்து, மறுசீரமைப்புச் செலவுகள் மற்றும் ஆராய்ச்சிச் செலவுகள் ரூபா 86,880,237/= ஆலும் மற்றும் ஏனைய செலவுகள் 70,832,816/= ஆலும் அதிகரித்தமையே மேற்குறிப்பிட்ட சீர்கெட்ட நிலைக்குக் காரணமாக இருந்தன.

மீளாய்வு ஆண்டினதும் கடந்த 4 வருடங்களினதும் நிதிப் பெறுபேறுகளை பகுத்தாராயும் போது 2013 இல் ரூபா 341,172/= ஆக இருந்த பற்றாக்குறை 2014 ஆகும் போது 145,069,392/= மிதமிஞ்சும் வரை அதிகரித்திருந்தாலும், 2015 இல் மீண்டும் ரூபா 17,883,619/= பற்றாக்குறை ஏற்படும் வரை சீர்கெட்டது. 2015 இல் ஆரம்பமாகிய சீர்கேடு தொடர்ந்தும் வளர்ச்சியடைந்து மீளாய்வு ஆண்டாகும் போது அச்சீர்கேடு ரூபா 224,091,778/= ஆக இருந்தது. எவ்வாறாயினும் ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறை சாரா சொத்துகளுக்கான தேய்வை மீண்டும் சீராக்கம் செய்யும் போது 2013 இல் ரூபா 1,508,188,994/= சாதகமான பங்களிப்பானது மீளாய்வு ஆண்டாகும் போது ரூபா 2,727,244,746/= வரை தொடர்ச்சியாக அதிகரித்திருந்தது.

புதிய இரண்டு பீடங்கள் ஆரம்பிக்கப்பட்டமையும் 2011/2012 கல்வி ஆண்டில் கூடுதலான மாணவர் தொகை சேர்த்துக் கொள்ளப்பட்டமையால் செலவு அதிகரித்தமையும் இந்த பற்றாக்குறை ஏற்படுத்துவதில் பாதிப்புச் செலுத்தியுள்ளன.

| | |
|---|---|
| **3.2 பகுத்தாய்வு ரீதியான நிதி மீளாய்வு**<br>மீளாய்வு ஆண்டில் பணிக்கொடைச் செலவுகள் உள்ளிட்ட ஊழியர் ஊதியம் ரூபா 2,475.08 மில்லியன்களாக இருந்ததுடன் அது முன்னைய வருடத்திற்குச் சார்புரீதியாக 14.26 வீதத்தால் அதிகரித்திருந்தது. ரூபா 3,162.16 மில்லியன்களாக இருந்த அரசாங்கத்தின் மொத்த மீண்டெழும் வழங்குதல்களிலிருந்து ரூபா 2,475.08 மில்லியன்கள் அதாவது 78,27 வீதம் ஊழியர் ஊதியங்களுக்காக செலவு செய்யப்பட்டிருந்ததுடன் பல்கலைகழகத்தின் ஏனைய சகல செலவுகளுக்குமாக ரூபா 687.07 மில்லியன்கள் அல்லது அரசாங்கத்தின் மொத்த மீண்டெழும் வழங்குதல்களில் 21.73 வீதம் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. மேலும் மீளாய்வு ஆண்டின் இறுதியாகும் போது 2016 ஆக இருந்த பல்கலைக்கழகத்தின் மொத்த பணியாளர் தொகுதியின் அந்தந்த பதவிகளுக்குரிய ஊதியங்களின் வித்தியாசங்களைளக் கவனத்திற் கொள்ளாது கணிப்பீடு செய்த போது வருடாந்த தலா ஊழியர் செலவு ரூபா 1,227,718/= ஆக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | மொத்த அரசாங்க ஊழியர் சம்பள அதிகரிப்பு இதனைப் பாதித்திருந்தது. |
| **3.3 நிறுவனத்துக்கு எதிராக அல்லது நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட ரீதியான நிகழ்வுகள்**<br>பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.<br><br>(அ) பல்கலைக்கழகத்தின் முதுநிலை விரிவுரையாளர் ஒருவர் தம்மைப் அப்பதவியிலிருந்து நீக்கியமை தொடர்பாக பல்கலைக்கழகத்துக்கு எதிராக மாவட்ட நீதிமன்றில் வழக்கொன்றைத் தாக்கல் செய்திருந்தார்.<br><br>ஆ. முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்தில் பணிபுரிந்த பிரதி நிதி அதிகாரியொருவர் இரண்டாம் தவணைச் சேவை நீடிப்பினைப் பல்கலைக்கழகம் வழங்காமை தொடர்பாக அவர் பல்கலைக்கழகத்துக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்திருந்தார். | <br><br><br>இவ்வழக்கில் வாதியின் சாட்சியங்கள் முடிவுற்றுள்ளன. பிரதிவாதத் தரப்பின் சாட்சியங்களைக் கேட்டல் ஆரம்பமாகியுள்ளன. அடுத்த வழக்குத் தவணை 01/03/2019 லாகும்.<br><br>இந்த வழக்கு பிரதி நிதி அதிகாரியினால் தொழில் நியாயசபையில் தொடுக்கப்பட்டது. அவ்வழக்கில் அவருக்கு சார்பாகத் தீர்ப்பு வழங்கப்பட்டது. பல்கலைக்கழகமும், பல்கலைக்கழக மானியங்கள் |

| | |
|---|---|
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் முகாமைத்துவப் பட்டப்பின் படிப்பு நிறுவனமும் நட்ட ஈட்டை சமமாக வழங்குமாறு விதிக்கப்பட்டது. இந்தத் தீர்ப்புக்கு எதிராக பிரதி நிதி அதிகாரி மேன்முறையீடு செய்தார். அந்த வழக்கு தொடர்பாகப் பல்கலைக்கழகமானது எழுத்துமூல விரிவுரையைச் சமர்ப்பித்துள்ளது. மீண்டும் 2019/02/14 இல் அவ்வழக்கு அழைக்கப்படவுள்ளது. |
| (இ) முறையான ஒழுக்காற்றுப் பரிசோதனையின் பின்னர் சேவை முடிக்கப்பட்ட iii ஆம் வகுப்பு எழுதுவினைஞர் ஒருவரை மீண்டும் சேவையில் அமர்த்துமாறு தொழில் நியாய சபை வழங்கிய வழக்குத் தீர்ப்புக்கு எதிராகப் பல்கலைக்கழகம் மேல் நீதிமன்றில் மேன்முறையீடொன்றைத் தொடுத்துள்ளது. | அவ்வழக்கு 2019/ 02/ 11 இல் மேல் நீதிமன்றில் அழைக்கப்பட்டுள்ளது. அத்தினத்தில் எழுத்துமூலமான விரிவுரை முன்வைக்கப்படவுள்ளது. |
| (ஈ) பிணை முறியை மீறியமை காரணமாக அறவிடப்பட வேண்டிய ரூபா 5,103,826/=ஐ அறவிட்டுக் கொள்வதற்காகப் பல்கலைக்கழகத்தினால் முன்னாள் விரிவுரையாளர் ஒருவருக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது. | அவ்வழக்கை விசாரிப்பதற்காக 2019/02/15 இல் அழைக்கப்படவுள்ளது. |
| (உ) பிணை முறியை மீறியமை காரணமாக அறவிடப்பட வேண்டிய ரூபா 10,762,632/= ஐ அறவிட்டுக் கொள்வதற்காகப் பல்கலைக்கழகத்தினால் பயிலுனர் விரிவுரையாளர் ஒருவருக்கு எதிராக மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தொடுக்கப்பட்டிருந்தது. | இவ்வழக்கு 2019/01/16 இல் அழைக்கப்பட்டதுடன் பிரதிவாதி சார்பாகத் தோன்றியவர்கள் பதிலளிக்கவுள்ளார்கள் 2019/03/18 M 3020/18 |
| (ஊ) பல்கலைக்கழகத்தின் கட்டிடங்கள் இரண்டினைப் புதுப்பிக்கும் செயற்பாட்டைக் கைவிட்டுச் சென்றிருந்த கொந்தராத்துக்காரர் ஒருவரிடமிருந்து ரூபா 1,785,240/= ஐ அறவிட்டுக் கொள்வதற்காகப் பல்கலைக்கழகமானது மாவட்ட நீதிமன்றில் இரண்டு வழக்குகளைத் தொடுத்திருந்தது. | பெப்ரவரி 25 ஆம் திகதி அழைக்கப்படவுள்ளது<br>M 2949<br>M 2950 |

# 4 நடவடிக்கைகள் மீளாய்வு

## 4.1 செயலாற்றுகை

### 4.1.1 செயற்பாடுகளும் மீளாய்வும்

| | |
|---|---|
| (அ) பல்கலைக்கழகத்தின் தலா மாணவர் செலவு தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | |
| i. பல்கலைக்கழகத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பொறியியல் மற்றும் தொழிநுட்பப் பீடங்கள் தவிர்ந்த ஏனைய நான்கு பீடங்களில் மீளாய்வு ஆண்டின் மொத்த மாணவர் எண்ணிக்கை 12,054 ஆக இருந்ததுடன் அவர்களுக்காக ஏற்பட்ட மீண்டெழும் செலவு ரூபா 3,127,368,214/= ஆக இருந்ததுடன் முன்னைய வருடத்தில் 11,609 மாணவர்களுக்காக ரூபா 2,913,911,823 /= செலவு மேற்கொள்ளப்பட்டது. அதன் பிரகாரம் மீளாய்வு ஆண்டில் சராசரி தலா மாணவர் செலவு ரூபா 259,447 /= ஆக இருந்ததுடன் அது முன்னைய ஆண்டுக்குச் சார்புரீதியாக ரூபா 8,442 /= ஆல் அல்லது 3 வீதத்தால் அதிகரித்திருந்தது. கடந்த ஆண்டுக்கு சார்பு ரீதியாக அந்த 4 பீடங்களினதும் மொத்த மீண்டெழும் செலவு ரூபா 213,456,391 /= ஆல் அல்லது 7 வீதத்தினால் அதிகரித்திருந்தாலும் தலா மாணவர் செலவின் அதிகரிப்பு 3 வீதமாக இருந்தமைக்கு மீளாய்வு ஆண்டில் மாணவர் எண்ணிக்கை முன்னைய வருடத்தை விட 445 ஆல் அதிகரித்தமை பிரதான காரணமாக அமைந்தது. | சரியானதாகும். |
| ii. புதிதாக ஆரம்பிக்கப்பட்ட தொழில்நுட்ப பீடத்தின் 642 மாணவலர்களுக்கும் பொறியியல் பீடத்தின் 240 மாணவர்களுக்குமாக மீளாய்வு ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மீண்டெழும் செலவு முறையே ரூபா 164,843 281 /= ஆகவும் ரூபா 118,019,455 /= ஆகவும் இடம்பெற்றமையால் மீளாய்வு ஆண்டில் தொழில் நுட்ப பீடத்தின் தலா மாணவர் செலவு ரூபா 256,765 /= ஆகவும் பொறியியல் பீடத்தின் தலா மாணவர் செலவு ரூபா 491,748 /= ஆகவும் ஏற்பட்டமை அவதானிக்கப்பட்டது. | பீடங்கள் ஆரம்ப நிலையில் காணப்படுவதால் நிலையான பொதுத் தொழிற்பாட்டுச் செலவானது குறைந்த மாணவர்கள் எண்ணிக்கையின் மீது பரவலடைந்தமை காரணமாக தலா மாணவர் செலவு உயர் மட்டத்தில் காணப்பட்டது. |

| | |
|---|---|
| (ஆ)2017/2018 கல்வி ஆண்டில் பல்கலைக்கழகத்தின் 6 பீடங்களுக்கும் 3497 உள்வாரி மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டதுடன் பௌதீகவியல் கற்கை நெறிக்கு 28 மாணவர்களும், உணவுத் தொழில்நுட்பக் கற்கை நெறிக்கு 02 மாணவர்களும், முகாமைத்துவக் கற்கை நெறிக்கு 04 மாணவர்களும், வணிகவியல் கற்கை நெறிக்கு 02 மாணவர்களும் அரச முகாமைத்துவக் கற்கை நெறிக்கு 02 மாணவர்களும், தாதிக் கற்கை நெறிக்கு 06 மாணவர்களும், பொறியியல் தொழில்நுட்பக் கற்கை நெறிக்கு 01 மாணவரும் என்ற வகையில் 117 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அனுப்பியிருந்த ஆவணத்தின் பிரகாரம் மாணவர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர். |
| (இ) இலக்கம் 15/2015 மற்றும் 2015 நவம்பர் 17 திகதியிடப்பட்ட பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவின் சுற்றுநிருபத்தின் பிரகாரம் உயர் கல்வி நிறுவனங்களின் மூலம் நடத்தப்படும் உள்வாரி முதல் பட்ட மற்றும் பட்டப் பின் படிப்பு பரீட்சைகளின் பெறுபேறுகள் குறிப்பிட்ட பரீட்சை நடத்தப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாத காலத்துக்குள் வெளியிடப்படட வேண்டியதுடன் கணக்காய்வு நிகழ்த்தப்பட்ட 06 பீடங்களில் 04 பீடங்களின் பெறுபேறுகள் வெளியிடப்பட்டமை தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.<br><br>(i) முகாமைத்துவ மற்றும் வணிகவியல் பீடத்தின் 2017 முதல் பருவத்தின் இறுதிப் பரீட்சையின் பெறுபேறுகள் 16 நாட்களிலிருந்து 28 நாட்கள் வரை தாமதித்து வெளியிடப் பட்டிருந்தது.<br><br>(ii)மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடத்தின் 2017 முதல் பருவத்தின் இறுதிப் பரீட்சைகள் 2017 ஆகஸ்ட் 19 ஆம் திகதி முடிவுற்றிருந்தாலும் அதன் பெறுபேறுகள் 54 முதல் 102 நாட்கள் தாமதித்தே வெளியிடப்பட்டன. மேலும் 2017 இரண்டாம் பருவ இறுதிப் பரீட்சை 2018 பெப்ரவரி 17 இல் முடிவுற்றிருந்தாலும் அதன் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு 27 முதல் 42 வரையிலான நாட்கள் தாமதமடைந்திருந்தன. | கல்விசாரா ஊழியர்களின் பணிப் பகிஷ்கரிப்பு, மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப விடைத் தாள்களைத் திருந்துவதற்குத் தேவையான விரிவுரை யாளர்களின் பற்றாக்குறை விடைத்தாள்களின் இரண்டாம் திருத்தத்தை வெளிவாரி விரிவுரையாளர்கள் மேற்கொள்ளும் போது காலாதாமதம் ஏற்பட்டமை, பொறியியல் மற்றும் தொழில்நுட்பப் பீடங்கள் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட போது போதிய விரிவுரையாளர்களின் பற்றாக்குறையினால் விடைத் தாள்களைத் திருத்துதல் காலதாமதமடைந்தமை விரிவுரையாளர்கள் வேறும் குழுக்களுக்கு நியமிக்கப்படுதல் மற்றும் வெளி வாரிச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்படல் ஆகிய காரணங்களினால் இக்காலதாமதம் ஏற்பட்டிருந்தது. |

| | |
|---|---|
| (iii) பொறியியல் பீடத்தின் 2017 முதல் பருவ இறுதிப் பரீட்சை 2017 மே 21 இல் முடிவுற்றதுடன் 2017 செப்டெம்பர் 28 இல் பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் முதல் ஆண்டு மாணவர்கள் மட்டும் பரீட்சைக்குத் தோற்றிய அப்பீட மாணவர்களின் பெறுபேறுகள் வெளியிடப்படுவதற்கு 40 நாட்கள் தாமதமுற்றிருந்தது.<br><br>(iv) பிரயோக விஞ்ஞான பீடத்தின் மூன்றாம், நான்காம் ஆண்டு பரீட்சைப் பெறுபேறுகளின் வெளியீடு பெரும்பாலும் தாமதமடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் 2017 இரண்டாம் பருவத்தின் மூன்றாம், நான்காம் ஆண்டுகளுக்குரிய இறுதிப் பரீட்சைகள் அதே ஆண்டு அக்டோபர் 28 ஆம் திகதி நடைபெற்றதுடன் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு 116 நாட்கள் தாமதமுற்றிருந்தது. மேலும் பிரயோக விஞ்ஞான பீடத்தின் முதலாம், இரண்டாம் வருட மாணவர்களின் பெறுபேறுகள் வெளியிடப்பட்டமை தொடர்பாகத் தகவல்கள் முறைமையொன்று காணப்பட்டமையால் பரீட்சைகளின் பெறுபேறுகள் வெளியிடப்பட்ட திகதிகள் கணக்காய்வின் போது தெரிய வராததுடன் முதலாம், இரண்டாம் வருட மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகள் சம்பந்தப்பட்ட விரிவுரையாளர்களினால் பீட மன்றத்தின் அனுமதியின்றி நேரடியாகவே கற்பித்தல் முகாமைத்துவ முறைக்கு உள்வாங்கப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | |
| (ஈ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்கள் கோவையின் 20 ஆம் அத்தியாயத்தின் 3.1 பந்தி மற்றும் X ஆம் அத்தியாயத்தின் 1.6.1 பந்தியின் பிரகாரம் கல்விசார் ஊழியர்களின் வருகை, வெளியேறுகை மற்றும் விடுமுறைகளை உறுதிப்படுத்தல் ஆகியன தொடர்பான செய்முறையொன்றை வகுக்க வேண்டும் என 2010 செம்டெம்பர் 07 இல் நடைபெற்ற பொதுத் தொழில் குழுவின் கூட்டத்தின் போது ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. எனினும் இதுவரை அவ்வாறானதொரு செயன்முறை வகுக்கப்படாதிருந்தமையால் கல்விசார் பணியாளர் தொகுதிக்காக மீளாய்வு ஆண்டில் செலுத்தப்பட்ட ரூபா 1,931,193,768/= சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்திக்கொள்ள முடியவில்லை. ஏனைய அரசாங்க நிறுவனங்களின் நடைமுறைப்படுத்தப்படும். | கற்கைத் துறைகளின் துறைத் தலைவர்களின் சிபார்சுகளின் பேரில் சேவைக்கு வருகை தரல் மற்றும் பணி நிறைவேற்றம் என்பவற்றைக் கவனத்திற் கொண்டு சம்பளம் வழங்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் முழு பல்கலைக்கழக முறைமை பற்றிய ஒரு செய்முறை வகுக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| ஏனைய அரசாங்க நிறுவனங்களினால் நடைமுறைப்படுத்தப்படும் அரச பணிக்காக வருகை தரல் மற்றும் வெளியேறுகை தொடர்பான நேரத்தைப் பதிவு செய்யும் முறைமை எதுவும் பல்கலைக்கழகத்தின் கல்விசார் பணியாளர் தொடர்பாக நடைமுறைப்படுத்தப்படாததுடன் விரிவுரையாளர்கள் முறையாக விரிவுரைகளுக்குச் சமூகமளிப்பதனால் அவ்வாறானதொரு தேவைப்பாடு காணப்படுவதில்லை என கணக்காய்வு வினாக்களுக்கு பதிலளிக்கப்பட்டது. அவ்வாறாயினும் விரிவுரையாளர்கள் விரிவுரைகளுக்கு வருகை தரல் பற்றி கல்விசார் துறைகள் சிலவற்றில் நடத்தப்பட்ட மாதிரி கணக்காய்வுப் பரிசீலனையின் போது வெளிவந்த விடயங்களின் பிரகாரம் அது தொடர்பாக திருப்திகரமான முறையொன்று நிலவுவதில்லை என பின்வரும் காரணங்களின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது.<br><br>(i) சிங்கள மற்றும் வெகுஜனத் தொடர்பு கற்றகத் துறையில் 2017 ஆம் ஆண்டின் முதலாம் பருவத்திற்குரிய தொழில் ஆற்றுகையைப் பரிசீலனை செய்யும் போது கற்கைத் துறையினால் முன்வைக்கப்பட்டுள்ள நேரசூசியின் பிரகாரம் ஆற்றப்பட வேண்டிய விரிவுரைகளின் மணித்தியால அளவை விடக் குறைவாகவே ஆற்றப்பட்டுள்ளன என்பது மாணவர்களின் கையொப்ப ஆவணங்களைப் பரிசீலனை செய்த போது அவதானிக்கப்பட்டது. இதன் பிரகாரம் 19 பாடங்கள் தொடர்பாக நேரசூசியில் ஒதுக்கப்பட்டிருந்த மணித்தியாலங்களின் எண்ணிக்கையை விட 164 மணித்தியாலங்கள் குறைவாகவே விரிவுரைகள் ஆற்றப்பட்டுள்ளன என்றும் பாடக்குறிப்புத் திட்டத்தின் பிரகாரம் ஒவ்வொரு விரிவுரையாளரும் நிகழ்த்த வேண்டிய குறைந்த பட்ச விரிவுரை மணித்தியாலங்களை நிகழ்த்தாத 11 சந்தர்ப்பங்கள் இடம்பெற்றுள்ளன என்றும் அவதானிக்கப்பட்டது. | <br><br><br><br><br><br><br><br><br>இது தொடர்பான விடயங்கள் செனெட் மன்றின் அவதானத்திற்கு முன்வைக்கப்பட்டுள்ளதுடன் அது தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கபட்டுள்ளன. |

| | |
|---|---|
| (ii) ஒப்படைகளை சமர்ப்பித்தல், களக் கற்கை போன்ற நேரடியாக மாணவர்கள் தொடர்புபடும் கல்விச் செயற்பாடுகளோடு தொடர்பான வருகைப் பதிவு ஏடுகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என கற்கைத் துறைகளின் தலைவர்கள் தீர்மானித்திருப்பினும் அவ்வாறான வருகைப் பதிவேடுகள் பேணப்படவில்லை.<br><br>(iii) கற்கைத் துறையைச் சேர்ந்த 14 நிரந்தர விரிவுரையாளர்களும் 5 வெளிவாரி விரிவுரையாளர்களும் விரிவுரைகளில் பயன்படுத்தப்பட்டதுடன் அவ்விரிவுரையாளர்கள் பருவம் ஒன்றில் ஒவ்வொரு பாடத்திற்காக 15 மணித்தியாலங்கள் வீதம் 37 பாடங்களுக்காக 555 மணித்தியால கட்டுரை வகுப்புக்கள் நடத்தப்பட வேண்டியிருந்தாலும் அவ்வாறு நடத்தப்பட்டமை பற்றிய சாட்சியங்கள் எதுவும் காணப்படவில்லை.<br><br>(iv) பாளி மற்றும் பௌத்த கற்கைத் துறைக்குரிய 2014 / 2015 கல்வியாண்டில் முதலாம் பருவத்தின் தொழில் ஆற்றுகையைப் பரிசீலனை செய்த போது விரிவுரை நேர சூசியின் பிரகாரம் நிகழ்த்தப்பட வேண்டிய விரிவுரைகளின் மணித்தியால எண்ணிக்கையை விடக்குறைவாகவே விரிவுரைகள் நிகழ்த்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன், அங்கு 51 பாடங்கள் தொடர்பாக இவ்வாறு குறைந்துள்ள விரிவுரை மணித்தியாலங்களின் எண்ணிக்கை 202 ஆகும் என்று அவதானிக்கப்பட்டது.<br><br>(v) மாணவர்களின் கையொப்பப் பத்திரங்களை பரிசீலனை செய்த போது அப்பத்திரங்களில் விரிவுரையாளரினதோ அல்லது மேற்பார்வையாளரினதோ கையொப்பம், பெயர், திகதி மற்றும் நேரம் என்பன குறிக்கப்படாமையால் அந்தந்த சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட விரிவுரைகள் எந்தளவு காலம் நிகழ்த்தப்பட்டுள்ள அல்லது விரிவுரைகள் நடத்தப்பட்டுள்ளமையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான சான்றுகளை பயன்படுத்திக் கொள்ள முடியவில்லை. | |

| | |
|---|---|
| (உ) பல்கலைக்கழகம் ஒன்றினால் நடத்தப்படும் ஆய்வுகளின் மூலம் அப்பல்கலைக்கழகத்தின் நிலை உயர்த்தப்படுவதுடன் தேசிய பொருளாதாரத்திற்கும் பாரிய பங்களிப்பு அளிக்கப்படுகிறது. எனவே பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கு ஆய்வு உதவிகளை வழங்குவதற்கு அரசாங்கமானது பாரிய நிதி ஒதுக்கீட்டினை வருடாந்தம் ஒதுக்குவதோடு மீளாய்வு ஆண்டில் 84 விரிவுரையாளர்களுக்கு ரூபா 164.85 மில்லியன்கள் ஆய்வு உதவியாக ஒதுக்கபட்டிருந்தது மேலும் 2012 இலிருந்து முன்னைய வருடம் முடிவுற்ற போது 227 விரிவுரையாளர்களுக்கு ரூபா 255.61 மில்லியன்கள் ஒதுக்கப்பட்டு வழங்கப்பட்டிருந்தது. எனினும் 2012 இல் 24 பேரும், 2013 இல் 15 பேரும், 2014 இல் 8 பேரும் 2015 இல் 37 பேரும், 2016 இல் 54 பேரும் என்ற வகையில் 138 பேர் ஆய்வுகளை கைவிட்டிருந்ததுடன் பல்கலைக்கழகமானது அவ்விரிவுரையாளர்கள் தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளும் எடுத்திருக்கவில்லை. | ஆய்வறிக்கைகளைச் சமர்ப்பிக்காது ஆய்வுகளை கைவிட்டுள்ள விரிவுரையாளர்களிடமிருந்து அப் பணத்தை அறவிட்டுக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். ஆய்வுக் குழுவின் மூலம் இதனை ஒழுங்குபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 4.2 முகாமைத்துவத் தொழிற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | |
|---|---|
| (அ) சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் பிழையாக கணிக்கப்பட்டமை, கணினிக் கடவுச்சொல் பயன்பாட்டில் ஊழல்கள் நிலவுதல், வரி மற்றும் கடன் தவணைகளில் ஊழல் குறைபாடுகள் காணப்படுதல். இரட்டைக் கணிப்பீட்டுக் குறைபாடுகள் நிலவுதல், உள்ளீடு, வெளியீடுகள் தொடர்பாகப் போதியளவு உள்ளகப் பரிசோதனை காணப்படாமை, பல்வேறு இடங்களிலிருந்து தொழிற்பாட்டின் மீது பாதிப்புச் செலுத்தக்கூடியதாக இருப்பதனால் உள்ளீட்டு விடயங்கள் பூரணமாகப் பாதுகாக்கப்படுவதில்லை என வெளிப்படுகின்றமை, பல்கலைக்கழக கணினித் துறையினால் வகுக்கப்பட்டுள்ள சமமான கொள்திறன் கொண்ட நிறுவனங்களில் பயன்படுத்தபடாத அரைத் தன்னியக்க கணினி மென்பொருள் காணப்படுதல் போன்ற 11 குறைபாடுகள் காரணமாகப் பல்கலைக்கழகத்தின் சம்பளங்களை வகுப்பதற்குப் பயன்படுத்தப்படும் கணினி மென்பொருள் மீது நம்பிக்கை கொள்ள முடியாதென கடந்த ஆண்டு கணக்காய்வின் போது சுட்டிக்காட்டப்பட்டது. அதன் பிரகாரம் சுதந்திரமான ஒரு தரப்பினரைக் கொண்டு முறைமைக் கணக்காய்வை நிகழ்த்தி 06 மாத காலத்துக்குள் மென்பொருள் குறைபாடுகளைச் சரிசெய்வதற்கும் புதிய கணினி முறைமையொன்றை அறிமுகம் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று மீளாய்வு ஆண்டின் ஆகஸ்ட் 10 ஆம் திகதி கூடிய 446 ஆம் செனெட் கூட்டம் தீர்மானித்திருந்தது. எனினும் 2018.08.31 ஆம் திகதி வரை சம்பந்தப்பட்ட செயன்முறை முடிக்கப்பட்டிருக்கவில்லை. | 2016 மீளாய்வு மதியுரையின் மீது சம்பள மென்பொருள் பற்றி சுதந்திரமான கணக்காய்வு நிறுவனமொன்றின் மூலம் முறைமைக் கணக்காய்வொன்றை நிகழ்த்தி அறிக்கையொன்று பெறப்பட்டுள்ளது. அதன் மதியுரைகள் நடைமுறைப்படுத்தப்படுவதோடு சம்பளம் பற்றிய உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) பல்கலைக்கழக நிர்வாகக் கட்டிடம், மருத்துவ பீடம், சுமங்கள கட்டிடம், விமலா டி சில்வா விடுதி ஆகிய ஸ்தானங்களில் தாபிக்கப்பட்டிருந்த பழைய ஆயினும் பயன்பாட்டுக்கு எடுக்கப்படும் 04 ஜெனரேட்டார்களுக்குரிய செலவு அல்லது மறு கணக்கீடு செய்யப்பட்ட பெறுமதி நிலையான சொத்துக்களின் அட்டவணைக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | மறு கணக்கீடு செய்யப்பட்ட பெறுமதியானது முன்வரும் காலத்தில் நிலையான சொத்துக்கள் ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டு கணக்குகளில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.<br>இந்தப் பணத்தை சம்பந்தப்பட்ட நிதியத்திலிருந்து மாற்றுவதற்கு எதிர்வரும் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

| | |
|---|---|
| (இ) வன மற்றும் சுற்றாடல் விஞ்ஞானக் கற்கைத் துறையோடு இணைந்த நீடித்து நிலையாதல் பற்றிய நிலையத்தை தாபித்தல் தொடர்பான சட்டத்தின் பிரகாரம் அந்த நிதியத்திலிருந்து 25 வீதம் பணிக்குழுவினரின் சம்பளங்களுக்கும் கொடுப்பனவுகளுக்குமாக பயன்படுத்த முடியும் என்று குறிப்பிடப்பட்டிருந்தாலும் நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர், செயலாளர், திட்ட உதவியாளர் ஆகிய 03 பதவிகளுக்கும் பல்கலைக்கழகத்தின் 03 தற்காலிக ஊழியர்கள் பயன்படுத்தப்பட்டிருந்ததோடு அவர்களது சம்பளங்களையும், கொடுப்பனவுகளையும் நிகழ்ச்சித் திட்டத்தின் வருமானத்திலிருந்து வழங்காது பல்கலைக்கழகத்தின் நிதியிலிருந்து வழங்கப்பட்டிருந்ததுடன் 2016 இலிருந்து 2018 செப்டெம்பர் 10 ஆம் திகதி வரை ரூபா 5 மில்லியனை நெருங்கிய பணத்தொகை பல்கலைக்கழக நிதியிலிருந்து அதற்காக செலவளிக்கப்பட்டிருந்தது. | |

| | |
|---|---|
| **4.3 நடவடிக்கைகளில் செயற்றிறன்னின்மைகள்**<br>ஜெனரேட்டர்களுக்கு உள்ளீடு செய்வதற்கு 11,260 லீற்றர் டீசலை கொள்வனவு செய்வதற்கு மீளாய்வு ஆண்டில் பொதுப் பாவனைத்துறை எரிபொருளுக்கு அனுப்பாணை விடுத்திருந்தாலும் அதில் 6060 லீற்றர் எரிபொருளுக்கான 08 அனுப்பாணைகள் பராமரிப்புத் துறையின் மொத்த படிவத்தில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. எனினும் வேலை அதிகாரியின் செய்யப்பட்ட வேலை அறிக்கையின் பிரகாரம் 9970 லீற்றர் எரிபொருள் ஜெனரேட்டர்களுக்கு பயன்படுத்தப்பட்டது எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும் எரிபொருளை பல்கலைக்கழகத்திற்குக் கொண்டு வருதல், அதனை ஜெனரேட்டர்களுக்கு பயன்படுத்தல், எஞ்சிய எரிபொருள் தொகையை வைத்திருத்தல் ஆகியன வேலை அதிகாரியினராலே மேற்கொள்ளப்பட்டன என்றும் களஞ்சியசாலை காப்பாளரால் வழங்கப்படும் தகவல்கள் மாத்திரம் புத்தகங்களில் பதியப்படுகின்றது என்றும் பொதுப் பாலனைத் துறையின் உதவிப் பதிவாளரால் வேலை அதிகாரியின் வேண்டுகோளின் பேரில் எரிபொருள் அனுப்பாணை விடுக்கப்படுதலும் பற்றுச்சீட்டுக்களை பெற்றுக்கொள்ளுதலும் மாத்திரமே மேற்கொள்ளப்படுகின்றன என்றும் வெளிவந்தமையால் ஜெனரேட்டர்களுக்கு எரிபொருளை வழங்கும் உள்வாரியான பாலன முறை மிகவும் பலவீனமான நிலையிலுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. | ஜெனரேட்டர்களுக்கான எரிபொருளை பெற்றுக் கொடுத்தலானது வேலைப் பொறியியலாளரின் கோரிக்கையின் பேரில் பொது பாலன உதவிப் பதிவாளரினால் பெற்றுத் தரப்படுவதோடு எரிபொருள் உபயோகம் பற்றிய உள்வாரியான பாலனம் வேலைப் பொறியியலாளரின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது. |
| **4.4 நிதியங்களின் குறைப்பிரயோகம்**<br>எதிர்பார்க்கும் செலவுகள் பற்றி நிச்சயமான மதிப்பீடின்றி கணக்கீடுகள் வகுக்கப்படுவதால் திறைச்சேரிக் கொடுப்பனவுகளிலிருந்து கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகளுக்கு கிடைக்கப் பெற்றிருந்த ரூபா 2, 628, 076 /= உம் அழகியல் திறன்களை மேம்படுத்துவதற்காக கிடைக்கப் பெற்றிருந்த ரூபா 1, 570, 849/= உம் உடலியல் கற்கை அலகை விருத்தி செய்வதற்கு கிடைக்கப் பெற்றிருந்த ரூபா 1, 249, 500 /= உம் 2017 டிசம்பர் 31 ஆம் திகதி ஆகும் போது எஞ்சியிருந்தன. | இந்த நிதியத்தின் உபயோகத்துக்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததோடு அப்பணிகள் முடிவுறாமல் இருந்தாமையால் கொடுப்பனவுகள் செய்யப்பட வில்லை. இந்தப் பணம் 2018 ஆம் ஆண்டில் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. |

| | |
|---|---|
| **4.6 பணியாளர் தொகுதி நிர்வாகம்**<br>பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.<br>(அ) 2017 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு பல்கலைக்கழகத்தின் அனுமதிக்கப்பட்ட பணியாளர் தொகுதி 2,307 ஆக இருந்ததுடன் அதில் கல்விசார் பணியாளர் தொகுதியில் 205 பதவிகளும் கல்விசார் உதவியாளர் பணியாளர் தொகுதியில் 34 பதவிகளும், நிர்வாகப் பணியாளர் தொகுதியில் 02 பதவிகளும் ஏனைய நிறைவேற்றுப் பணியாளர் தொகுதியில் 09 பதவிகளும், 03 மருத்துவர் பதவிகளும் வெற்றிடமாக காணப்பட்டன. | பொறியியல் மற்றும் தொழில்நுட்பப் பீடங்கள் புதிதாக ஆரம்பிக்கப்பட்டவையாகையால் அவற்றின் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அவற்றின் வெற்றிடங்களும் இதில் அடங்குகின்றன. சில விசேட பாடங்களுக்குத் தகுதி பெற்ற விரிவுரையாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைக்காமையால் ஆட்சேர்ப்பு தாமதமடைந்துள்ளது. நிர்வாக அதிகாரிகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுகின்றனர். அந்த வெற்றிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. |
| (ஆ) அங்கீகரிக்கப்பட்ட கல்விசாரா பணியாளர் தொகுதி 1066 ஆகும். அவர்களுள் 916 பேர் நிரந்தர அடிப்படையிலும் 15 பேர் கொந்தராத்து அடிப்படையிலும் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்ததோடு 135 பதவிகள் வெற்றிடமாக இருந்தன. | இப்பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு நிகழ்ந்துள்ளது. |

| | |
|---|---|
| **5 நீடித்து நிலைக்கும் அபிவிருத்தி**<br>**5.1 நீடித்து நிலைக்கும் அபிவிருத்தி நோக்கங்களை அடைதல்**<br>பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.<br>(அ) நீடித்து நிலைக்கும் அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் 2030 ஆம் ஆண்டு "நிகழ்ச்சி நிரலின்" பிரகாரம் சகல அரச நிறுவனங்களாலும் மேற்கொள்ளப்பட வேண்டுமாயினும் மீளாய்வு ஆண்டு தொடர்பாக ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக் கழகமானது தனது விடயப் பரப்புக்குட்பட்ட பணிகள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது பற்றி போதியளவு புரிந்துணர்வோடு செயற்படவில்லை. அதன் பிரகாரம் ஐக்கிய நாடுகள் தாபனத்தின் 2030 ஆம் ஆண்டு நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் நிறுவனத்தின் பணிகள், குறித்த நீடித்து நிலைக்கும் அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் அவ்விலக்குகளை அடைந்து கொள்ள வேண்டிய சந்தர்ப்பங்களும் இலக்குகளின் அடைவினை அளவிட்டறியக் கூடிய சுட்டிகளும் நிறுவனத்தினால் அடையாளம் காணப்படவில்லை.<br><br>(ஆ) பல்கலைக்கழத்தின் நீடித்து நிலைக்கும் அபிவிருத்தி வேலைத்திட்டம் பற்றி 2018 மார்ச் 21 ஆம் திகதியிட்டு நான் அனுப்பிய மாதிரிப் பத்திரத்தின் பிரகாரம் தகவல்களை 2018 அக்டோபர் 15 ஆம் திகதி வரை பல்கலைக்கழகம் சமர்ப்பித்திருக்கவில்லை. | சம்பந்தப்பட்ட சுட்டிகளை அடையாளம் காண்பதற்கு அவசியமான நடவடிக்கைகள் முன்வரும் காலத்தில் எடுக்கப்படும். |

## 6. கணக்கீட்டு நடவடிக்கைகளும் நல்லாட்சியும்

### 6.1 பெறுகை மற்றும் கொந்தராத்துச் செயன்முறை

### 6.1.1 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | |
|---|---|
| அ. 2016/2017 ஆண்டில் சிற்றுண்டிச்சாலைகளை கொண்டு நடாத்துவதற்கான தேசிய போட்டிகர விலை கோரல் முறையின் கீழ் 2016 ஆகஸ்ட் 28 ஆம் திகதி விலைகோரல் அழைப்பு விடுக்கப்பட்டது. அவ்வமயம் 14 சிற்றுண்டிச்சாலைகளுக்கான 38 விலை கோரல்கள் கிடைக்கப் பெற்றிருந்ததோடு ஸ்ரீ சோரத விடுதிச் சிற்றுண்டிச்சாலைக்கு ஒரு விலைகோரல் முன்வைக்கப்பட்டிருந்தது. பின்னர் அவ்விலை கோரலை முன்வைத்தவர் கொந்தராத்தினை ஏற்க மறுத்தமையால் மீண்டும் ஒக்டோபர் 11 ஆம் திகதி ஏனைய சிற்றுண்டிச்சாலைகளுக்கு விலை கோரலைச் சமர்ப்பித்த 38 பேர்களிலிருந்து 05 பேர் தெரிவு செய்யப்பட்டதுடன், ஸ்ரீ சோரத சிற்றுண்டிச்சாலைக்கான விலைகோரலுக்கு மீண்டும் அழைப்பு விடுக்கப்பட்டது. எனினும் அந்த 05 விலைகோரல்காரர்கள் ஏற்றுக்கொள்ளத்தக்க அடிப்படையின்றித் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர். | 2016 / 2017 கல்வி ஆண்டுக்கான விலை கோரல்கள் தன் அழைக்கப்பட்டதுடன் அது தொடர்பாக 38 விலை கோரல்கள் கிடைக்கப் பெற்றன. அந்த 38 விலை கோரல்களிலிருந்து 14 சிற்றுண்டிச்சாலைகளுக்கான கொந்தராத்துக்காரர்கள் தெரிவு செய்யப்பட்டனர். ஸ்ரீ சோரத விடுதி சிற்றுண்டிச்சாலைக்கு மேற் குறிப்பிட்ட கொந்தராத்து வழங்கப்படாத 05 வழங்குநர்களிடமிருந்து விலை கோரப்பட்டது. அந்த ஐவரையும் தெரிவு செய்வதற்கான அடிப்படை யாதெனில் முதலில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக்கு அவர்கள் உள்ளடக்கப்பட்டிருந்தமையாகும். எவ்வாறாயினும் முன்வரும் காலத்தில் விலைகோரல்கள் வழங்கப்படாத சேவை வழங்குனர்களிடமிருந்து விலைக் கணிப்பீடு மேற்கொள்ளப்படும். |
| (ஆ)மீளாய்வு ஆண்டில் ரூபா 45,961,020/= செலவு செய்து 500kva மின்னாக்கி இயந்திரங்கள் 03 இனை வழங்கிப் பொருத்துவதற்கான பெறுகை ஆவணங்களைப் பரிசோதித்த போது அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன. | |

| | |
|---|---|
| (i) தேசியப் போட்டிகர விலைகோரல் முறை பின்பற்றப்பட்டு 2016 செப்டெம்பர் 24 ஆம் திகதி தேசிய பத்திரிகை ஒன்றில் மட்டும் அறிவித்தல் வெளியிடப்பட்டு வெற்றிகரமான விலை கோரல்காரராக தேசிய முகவர் நிறுவனம் ஒன்று தெரிவுசெய்யப்பட்டது. | பெறுகை நடைமுறை பின்பற்றப்பட்டது. கணக்காய்வு மதியுரைகளையும் நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) வெட் வரியற்ற ரூபா 45, 961,020/= பெறுமதிக்கு 03 மின் ஆக்கி இயந்திரங்களையும் கொள்வனவு செய்வதற்கு வழங்குனரோடு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்ட தினத்திலிருந்து 120 தினங்களுக்குள் வழங்கிப் பொருத்துவதற்கான நிபந்தனையின் கீழ் 2016 டிசம்பர் 30 ஆம் திகதி ஒப்பந்தம் செய்யப்பட்டது. பின்னர் வழங்குனரின் 2017 ஏப்ரல் 27 ஆம் திகதியிடப்பட்ட வேண்டுகோளின் பேரில் 2017 ஜூலை 31 ஆம் திகதி வரை நாட்கள் நீடிக்கப்பட்டது. எவ்வாறாயினும் இந்த இயந்திரங்களைப் பொருத்துதல் 2018 ஏப்ரல் 26 ஆம் திகதி வரை தாமதமடைந்திருந்தது. | கொந்தராத்துக்காரர் இந்த 03 மின் ஆக்கி இயந்திரங்களும் 2018 பெப்ரவரி 28 இல் பொருத்தப் பட்டுள்ளதாக எழுத்து மூலம் அறிவித்திருந்தார். 2018 மார்ச், ஏப்ரல் மாதங்களில் நடைபெற்ற கல்வி சாரா ஊழியர்களின் பணிப் பகிஷ்கரிப்பினால் ஏற்றுக் கொள்ளுதல் தாமதமுற்றிருந்தது என அறியத் தருகிறேன். |
| (iii) பெறுகை தொடர்பான தொழில்நுட்ப விவரக் குறிப்பினைத் தயாரித்தல், சேவை நிபந்தனைகளை நிர்ணயித்தல், வேலைப் பரப்பினைத் தீர்மானித்தல் ஆகியன வேலைப் பொறியியலாளராலேயே மேற்கொள்ளப்பட்டதுடன் மின் ஆக்கி இயந்திரங்களை தேசிய முகவரிடமிருந்து கொள்வனவு செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தாலும் வழங்குனரால் வழங்கப்படும் மின் ஆக்கிகள் (ஜெனரேடர்கள்) தொடர்பான உற்பத்தியாளரின் தொழிற்சாலையில் இயந்திரத்தின் தகுதிகாணலைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கு பொறியியலாளரும் பிறிதொரு அதிகாரியும் பங்கேற்க வேண்டும் என்றும் அதற்கான செலவை வழங்குனர் ஏற்க வேண்டும் என்றும் தொழில்நுட்ப விவரக் குறிப்பு மற்றும் இணைக்கப்பாட்டு ஆவணங்களின் கீழ் வேலை விடயப் பரப்புக்குள் உள்ளடக்கப்பட்டிருந்தன. இந்த நிபந்தனையின் காரணமாக வழங்குனர்கள் சமர்ப்பிக்கும் விலைகள் அதிகரிக்க முடியும் என அவதானிக்க முடியுமாவதுடன் இந்த முகவர் நிறுவனமானது இலங்கை பூராகவும் இவ்வாறான மின் ஆக்கிகளை வழங்கியிருப்பதனால் அவ்வாறான இயந்திரம் | மின் ஆக்கி இயந்திரங்களைப் பரிசோசிப்பதற்காகச் செல்வதற்கு உத்தியோக பூர்வ விடுமுறையை வழங்கும் போது வழங்கப்பட வேண்டிய ஜீவனோபாய மற்றும் உஷ்ண ஆடைக் கொடுப்பனவுகள் மட்டும் வழங்கப்பட்டுள்ளன. |

| | |
|---|---|
| ஒன்றையோ அல்லது சிலதையோ மின் பொறியியலாளரைக் கொண்டு பரிசோதித்துப் பார்க்கக் கூடியதாக இருந்த போது போது சம்பந்தப்பட்ட பரிசோதனைக்காக வேலைப் பொறியியலாளரும் பிறிதொர் அதிகாரியும் 06 நாட்கள் இத்தாலியச் சுற்றுப் பயணத்தில் ஈடுபட்டிருந்ததுடன் அவ்விரு அதிகாரிகளினதும் வாழ்க்கைக் கொடுப்பனவுகள் மற்றும் உஷ்ண ஆடைக் கொடுப்பனவுகளாகப் பல்கலைக்கழகமானது ரூபா 102, 185/= ச் செலவு செய்திருந்தது. | |
| (இ) வெட் வரியற்ற ரூபா 2,810,000/=விலைப் பெறுமதியான 50 KVA மின் ஆக்கி இயந்திரத்தைக் கொள்வனவு செய்தல் தொடர்பான பெறுகைச் செயன்முறை பற்றிப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன. | |
| (i) இந்த கொள்வனவுக்கான பெறுகைச் செயன்முறை 2017 ஏப்ரல் 26 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் பல்கலைக்கழகத்தில் பதிவுசெய்யப்பட்ட கொந்தராத் துக்காரர்களுக்கு கடிதங்கள் மூலம் அறிவிக்கப்பட்டு சந்தை விலை ஒப்பீட்டு முறையின் கீழ் வழங்குனர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளார் | இது தொடர்பாக பெறுகைக் கமிட்டியின் அங்கீ காரமானது சந்தை விலை ஒப்பீட்டு முறையின் கீழ் கிடைக்கப் பெற்றிருந்தமையால் அதனோடு ஒத்துச் சென்று தொலைபேசி பெயர் விவரக் கோவையின் மஞ்சள் வர்ணப் பக்கங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள புதிய மின் ஆக்கிகளை வழங்கிப் பொருத்துவதில் இலங்கையில் பிரசித்தி பெற்றுள்ள வழங்குனர்களிடமிருந்து விலைகள் கோரப்பட்டதன் பின்னர் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. இந்த கடிதக் கோவையிலுள்ள கடிதம் முன்மாதிரியாக இருப்பதுடன் பெறுகை அங்கீகாரத்துக்கு இணங்கச் செயற்பட்டுள்ளது. |
| ii. தொழில்நுட்ப விபரக்குறிப்பின் பிரகாரம் மின் ஆக்கி இயந்திரத்துக்கான புகை வெளிப்பாட்டுச் சான்றிதழ் ஒன்று கோரப்பட்டிருந்ததுடன் கொந்தராத்து நிறுவனமானது புகை வெளிப்பாட்டுச் சான்றிதழை வழங்கி இருக்கவில்லை. | விவிரக் குறிப்பில் புகை வெளிப்பாட்டுச் சான்றிதழ் ஒன்றை தருமாறு கோரிக்கை விடுக்கப்படவில்லை. |

| | |
|---|---|
| (iii) தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்கள் மற்றும் விலை கோரல்களைக் திறக்கும் குழுக்களின் நியமனங்கள் தொடர்பாக முறையான நியமனக் கடிதங்கள் வெளியிடப்பட்டிருக்கவில்லை.<br><br>(ஈ) பல்கலைக்கழகத்தின் 20 பெண்கள் விடுதிகள் மற்றும் 18 ஆண்கள் விடுதிகளுக்குரிய விடுதிப் பொறுப்பாளர்கள் 54 பேரின் சேவையைப் பெற்றுக் கொள்வதற்கு பெறுகைச் செயன்முறை பின்பற்றப்பட்டதன் பின்னர் 2017 ஜூலை மாதத்திலிருந்து குறைந்த விலையைச் சமர்ப்பித்த கம்பனிக்கு கொந்தாரத்தினை வழங்கியிருந்தாலும் அந்தக் கம்பெனியானது சம்பந்தப்பட்ட விடுதிகளுக்குச் சரியான முறையில் ஊழியர்களை ஈடுபடுத்தாமை காரணமாக 2017 நவம்பர் மாதத்திலிருந்து அதன் சேவை இடைநிறுத்தப்பட்டிருந்தது. அது தொடர்பான பரிசீலனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | துணை வேந்தரினால் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவொன்று நியமிக்கப்பட்டிருப்பதோடு அதன் நிதி விவகாரங்கள் தொடர்பாக அதிகாரியொருவர் இன்மையால் மின் ஆக்கி இயந்திரம் சம்பந்தமாக பீடத்தின் நிதி அதிகாரி அதற்காக பங்கேற்கப்பட்டுள்ளார். விலை கோரல்களாகத் திறப்பதற்காக 2017 ஆம் ஆண்டுக்கான பெறுகைக் கமிட்டியின் மூலம் குழுவொன்று நியமிக்கப்பட்டதோடு அதன் உறுப்பினர் இருவர் விலை கோரல்களைத் திறக்கும் குழுவில் பங்கேற்றிருந்தார். |

| | |
|---|---|
| (i) 2016 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க தேசிய குறைந்தபட்ச வேதனச் சட்டம், 2016 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க மற்றும் 2005 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க வரவு செலவுச் சலுகைக் கொடுப்பனவுச் சட்டங்கள் ஆகியவற்றின் பிரகாரம் ஏதேனும் ஒரு கைத்தொழிலில் அல்லது சேவையில் ஈடுபடும் அனைத்து ஊழியர்களுக்கான குறைந்தபட்ச மாதாந்தச் சம்பளம் ரூபா 13,500/= ஆக இருக்க வேண்டிய அதேவேளை ஊழியர்களின் குறைந்தபட்ச நாள் சம்பளம் ரூபா 540 /= ஆக இருக்க வேண்டியிருப்பினும் அதில் கவனம் செலுத்தாது நாள் சம்பளம் ரூபா 472 /= ஆக விலை கோரல் முன்வைத்த நிறுவனத்துக்கு கொந்தராத்து வழங்கப்பட்டிருந்தது. | பல்கலைக்கழகமானது சேவை வழங்கலின் கீழ் விடுதிப் பொறுப்பாளர்களின் சேவையை வருடாந்தம் பெற்றுக்கொண்டு வருகிறது. இவ்வாறு வெளிவாரியான தரப்பினர்களிடமிருந்து பல்கலைக்கழகத்துக்கு தேவையான ஊழியர் எண்ணிக்கையைக் குறிப்பிட்டு அதன் பிரகாரம் விலை கோரப்படுகின்றது. சேவையை வழங்கும் நிறுவனம் விலைகளை முன்வைப்பதோடு பல்கலைக்கழகத்தின் விவரக் குறிப்புகளுக்கேற்ப சராசரி குறைந்தபட்ச விலைகளை முன்வைக்கும் நிறுவனங்கள் தெரிவு செய்யப்படுகின்றன. அங்கு பல்கலைக்கழகமானது ஊழியர்களுக்குச் சம்பளங்களை வழங்காததோடு சேவையை வழங்கும் கொந்தாரத்துக்காரர்களால் ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கப்படுகிறது. அங்கு அவர்கள் வேதனக் கட்டுப்பாட்டுச் சபையினால் வெளியிடப்பட்டுள்ள குறைந்தபட்ச வேதனத்தையோ அல்லது கூடுதல் வேதனத்தையோ வழங்குவது அந்தக் கம்பனியின் பொறுப்பாகும். |

| | |
|---|---|
| (ii) ஒவ்வொரு ஊழியரினதும் சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு செலவு மதிப்பீட்டை வகுத்ததன் பின்னர் குறைந்தபட்ச விலையைத் தீர்மானித்து அக்குறைந்தபட்ச விலையைப் பெறுகை விளம்பரத்தில் வெளியிடுவதற்குப் பதிலாக ஒவ்வொரு ஊழியரினதும் சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு விலை கோரல்களை அழைத்தமையால் விலை கோரல்களை முன்வைத்த நிறுவனங்கள் குறைந்த ஊழியர் சம்பளத்தை முன்வைப்பதற்குத் தூண்டப்பட்டிருந்தன. ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி என்பவற்றுக்குப் பங்குப் பணம் செலுத்தப்பட்படும் என்றும் அரசக் கொள்கைகளின் பிரகாரம் குறைந்தபட்ச ஊழியர் சம்பளத்தை செலுத்துதல் தொடர்பான நிபந்தனைகளை உள்ளடக்காததன் காரணமாக தொழிலாளர் சட்டத்திட்டங்கள் மற்றும் ஊழியர் மனக்குறைகள் தொடர்பாக தேவையற்ற பொறுப்பினைப் பல்கலைக்கழகம் வகிக்க வேண்டியுள்ளது. | சம்பந்தப்பட்ட ஊழியர்கள் பல்கலைக்கழக ஊழியர்களாக இல்லாதிருப்பதுடன் அவர்கள் தொடர்பான பொறுப்பு நிறுவனத்துக்குரியதாகும். |
| (iii) கடந்த ஆண்டில் இச்சேவையை வழங்கிய நிறுவனத்தின் ஒப்பந்தக் காலம் 2016 டிசம்பர் 15 ஆம் திகதியுடன் முடிவுற்றமையால் 2016 ஒக்டோபர் 12 இல் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்பட்டு பெறுகைச் செயன்முறை ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும் 2017 ஜூலை 16 வரை புதிய நிறுவனம் ஒன்றைத் தெரிவு செய்வது தாமதமாயிருந்தது. சரியான முறையில் பெறுகையைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தாத முகாமைத்துவக் குறைபாட்டின் காரணமாக 9 மாத காலமாக பெறுகை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் பெறுகைச் செயன்முறை மேற்கொளட்ளப்பட்டிருந்த காலப்பகுதியில் அதுவரை பல்கலைக்கழகத்துக்கு இச்சேவையை வழங்கிய நிறுவனத்தைச் தொடர்ந்தும் சேவையில் வைத்துக்கொண்டு கொந்தராத்து ஒப்பந்தத்திலிருந்து விடுபட்டு 2017 ஜூலை 15 வரை ரூபா 10,232,973 பணம் செலுத்தப்பட்டிருந்தது. | சேவை திருப்தியற்றதாக இருந்தமையால் பல்கலைக்கழகமானது சேவையை முடிந்து வைத்தமை காரணமாக நிறுவனத்தின் தொழில் ஆற்றுகையைப் பார்த்து ஒப்பந்தத்தின் 22.8 உறுப்புரையின் கீழ் ஒப்பந்தத்தை மீறியிருப்பதனால் பல்கலைக்கழகமானது 30 நாட்களுக்குள் அறிவித்ததன் பின்னர் சேவையை நிறுத்தி இருப்பதானது தொழில் ஆற்றுகையை பிணை முறியிலிருந்து அறவிட்டுக் கொள்ளும் தேவை எழுவதில்லை.பெறுகைச் செயன்முறையைப் பின்பற்றி சேவை நீக்கப்பட்டிருப்பதோடு பின்னர் தெரிவு செய்யப்பட்ட சேவை நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட பணத்தை விடக் குறைவான பணத்தை செலுத்தியிருந்தமை பல்கலைக்கழகத்துக்கு நன்மை பயப்பதாக அமைந்திருந்தது. |

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் 29 2017 ஆண்டறிக்கை

| | |
|---|---|
| (iv)பெறுகைச் செயன்முறை சரியான முறையில் நிறைவேற்றப்படாமை காரணமாக 2017 ஆம் ஆண்டுக்கான விடுதிப் பொறுப்பாளர் சேவைக்குத் தெரிவுசெய்யப்பட்ட நிறுவனத்தின் ஒப்பந்தம் 2017 நவம்பர் 12 ஆம் திகதியிலிருந்து இடை நிறுத்தப்பட்டமையினால் 2017 டிசம்பரிலிருந்து பல்கலைக்கழகமானது அச்சேவையை முன்னர் பணியாற்றிய ஊழியர்களைப் பயன்படுத்தி மேற்கொண்டதுடன் அதற்காகப் பல்கலைக்கழகம் 2017 இல் ரூபா 2,073,15/= வையும் 2018 மே மாதம் வரை ரூபா 4,116,812 /= வையும் செலுத்தியிருந்தமை அவதானிக்கப்பட்டது. | 2017.07.16 - 2018.08.15 வரையிலான காலப் பகுதிக்கு பல்கலைக்கழகமானது நேஷன்வைட் (Nationwide) நிறுவனத்திடமிருந்து விடுதிப் பொறுப்பாளர் சேவையைப் பெற்றுக் கொள்வதற்கான ஒப்பந்தப் பணம் வரியற்ற ரூபா 1,529,28.00 ( மாதப் பணம் ) ஆக இருந்ததுடன் 2017.07.16 ஆம் திகதியிலிருந்து 2018 மே மாதம் வரை செலுத்தப்பட்டுள்ள மொத்தப் பணம் ரூபா 14,464,043.60 ஆகும். அதன் பிரகாரம் சேவைக்காகக் செலுத்தப்பட்டிருந்த பணம் ஒப்பந்தப் பணத்தை விட குறைந்த பெறுமதியாகும். |
| **6.2 வரவு செலவுக் கட்டுப்பாடு**<br>1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் உறுப்புரை 102 க்கு முரணாக நிதிப் பொறுப்புக்கள் ஏற்பட்டதன் பின்னர் அந்தப் பெறுமதிகளுக்கு விகித சம ரீதியாக வரவு செலவு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தமையால் மீளாய்வு வருடத்தினில் 08 சந்தர்ப்பங்களில் அடிக்கடி வரவு செலவு திருத்தப்பட்டிருந்தது. | மதிப்பீடு செய்யப்படும் பணத் தேவைகள் திறைசேரியிலிருந்து கிடைக்கப் பெறுவதில்லை. கிடைக்கப் பெறும் பணத் தேவைப்பாடுகளின் முன்னுரிமையின் பிரகாரம் ஒதுக்கப்பட்டிருந்ததோடு திறைசேரி அனுமதி பெறப்பட்டிருந்தது. |

| | |
|---|---|
| **6.3 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்**<br>பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன. | |
| (அ) மருத்தவ பீடத்துக்காக மெத் செவன காணியிலிருந்து 5 ஏக்கர் நிலப் பரப்பைக் கையகப்படுத்தியமை தொடர்பாக 1994.06.29 ஆம் திகதி எடுக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் 1998-2010 ஆம் ஆண்டு வரை மூன்று சந்தர்ப்பங்களில் ரூபா 24 மில்லியன்களும் மீளாய்வு ஆண்டில் ரூபா 50 மில்லியன்களுமாக மொத்தம் ரூபா 74 மில்லியன்கள் மேல் மாகாண சபைக்குச் செலுத்தப்பட்டிருந்தாலும் குறிப்பிட்ட அந்த நிலத்தை 2017.08.31 ஆம் திகதி வரை கையகப்பப்படுத்தும் செயற்பாடு முடிவுற்றிருக்கவில்லை. | அவசரமாகக் கையகப்படுத்துவதற்கு அமைச்சோடு கலந்துரையாடி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) 2014 ஆம் ஆண்டில் ரூபா 61.5 மில்லியன்களைச் செலவு செய்து கொள்வனவு செய்திருந்த கொஹுவலைக் காணியும் கட்டிடமும் பல்கலைக்கழத்தின் தேவைக்குப் பொருத்தமற்றதாக இருந்தமையால் களனிப் பல்கலைக்கழகத்தின் அழகியற் கலை நிறுவனத்துக்கு ஒப்படைக்கப்பட்டிருப்பினும் இந்த ஒப்படைப்பு கணக்கீட்டுக்குட்படுத்தப் படாதிருந்ததோடு பல்கலைக்கழகம் பயன்படுத்தாத சொத்தொன்று மீளாய்வு ஆண்டின் நிதி வெளியீட்டறிக்கைக்கு உட்படுத்தப்படாதிருந்தது. | 2017.07.07 இல் நடைபெற்ற பொதுத் தொழில் பற்றிய கமிட்டியின் தீர்மானத்தின் பிரகாரம் உயர் கல்விச் செயலாளரிடம் இக்காணியையும் கட்டிடத்தையும் மீள ஒப்படைப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு வேண்டப்பட்டுள்ளது. |

| | |
|---|---|
| (இ) ரூபா 70 மில்லியன் செலவாகும் பல்கலைக்கழகத்தின் கழிவு நீரை அகற்றும் திட்டத்துக்காக 2003.08.06 ஆம் திகதி கிடைக்கப்பெற்ற அமைச்சரவை அனுமதியின் அடிப்படையில் அதனை நிர்மாணிப்பதை திட்டமிடுவதற்காக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் சபைக்கு ரூபா 2,236,090 செலுத்தப்பட்டுள்ளது. நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படாமை தொடர்பாக 2011 ஆம் ஆண்டின் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைக்கான பதில் என்ற வகையில் சம்பந்தப்பட்ட திட்டத்தை இடைநிறுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் மீளாய்வு ஆண்டின் நிதி வெளியீட்டில் கூட நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைகளின் கீழ் மீதி காட்டப்பட்டிருந்தது. | இதனை கணக்கிலிருந்து அகற்றுவதற்கான அனுமதியைப் பெற்றதன் பின்னர் தீர்க்கப்படும். |
| (ஈ) 1990 ஆம் ஆண்டிலிருந்து நிதி வெளியீடுகளில் முன்பணம் என்ற வகையில் முன்னுக்குக் கொண்டு வரப்பட்ட ரூபா 1,310,000/= ஐ மஹரகம நகர சபைக்குச் செலுத்தப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருப்பினும் அந்த முன்பணத்தை சிக்கலற்றதாக ஆக்குவதற்கு மீளாய்வு ஆண்டில் கூட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இதனைக் சிக்கலற்றதாக ஆக்குவதற்கான அனுமதியைப் பெறுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| (உ) அரசாங்க அல்லது அரசாங்கத்தோடு இணைந்த நிறுவனங்களில் சேவை ஆற்றுவதற்காக சம்பள மீள் நிரப்புச் செய்வதன் அடிப்படையில் 2009ம் ஆண்டில் பாதுகாப்பு அமைச்சுக்கு விடுவிக்கப்பட்டிருந்த பெண் விரிவுரையாளர் ஒருவருக்கு வழங்கப்பட்ட சம்பளத்தினில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 1,437,882 கல்விசார் கொடுப்பனவு சம்பந்தப்பட்ட நிறுவனத்திடமிருந்து மீள் நிரப்புச் செய்ய முடியாதென அறிவிக்கப்பட்டிருந்தமையால் அப்பணத்தைச் சம்பந்தப்பட்ட விரிவுரையாளரிடமிருந்து அறவிட வேண்டுமாயினும் அது தொடர்பான சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கான செயற்பாடுகள் மீளாய்வு வருடத்தில் கூட மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2017.03.07 ஆம் திகதி நடைபெற்ற பொதுத்தொழில்கள் பற்றிய கமிட்டியின் விதப்புரையின் பிரகாரம் இந்தக் கொடுப்பனவை மீள் நிரப்புச் செய்வதற்காகப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டிருப்பதோடு நினைவூட்டல் கூட அறிவிக்கப்பட்டிருப்பினும் துலங்கல்கள் கிடைக்கப் பெறவில்லை. அகற்றி விடுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

| | |
|---|---|
| (ஊ) இரசாயனவியல் ஆய்வுக்கூடம் மற்றும் கலையரங்கம் என்பவற்றைப் புதுப்பிக்கும் பணியை கொந்தராத்துக்காரர் கைவிட்டுச் சென்றிருப்பதனால் 2012.04.25 ஆம் திகதி கொந்தராத்து தடை செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் கொந்தாரத்துக்காரருக்கு செலுத்தி இருந்த ரூபா 2,268,483/= முன் பணத்திலிருந்து செய்து முடிக்கப்படாத வேலைகளுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 1,764,013 /= ஐ தொழில் ஆற்றுகைப் பிணை முறியிலிருந்து அறவிடப்படாததோடு அப்பணத்தைத் கொந்தராத்துக்காரரிடமிருந்து அறவிட்டுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மீளாய்வு ஆண்டில் கூட எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இப்பணத்தை அறவிடுவதற்குச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (எ) வேறும் பல்கலைக்கழகங்களிலிருந்து ஓய்வு விடுமுறை பெற்று வருகின்ற அதிகாரிகளைச் சேவையில் ஈடுபடுத்திக் கொள்ளும் போது அவர்களது ஊதியத்திலிருந்து உழைக்கும் போது செலுத்தும் வரியைக் குறைத்துக் கொள்வதில் உரிய வரி வாய்பாட்டைப் பயன்படுத்தாமையினால் 03 அதிகாரிகளின் ஊதியங்களிலிருந்து ரூபா 318,850/= குறைவாக வரி அறவிடப்பட்டிருந்தது. | தற்போது இப்பல்கலைக்கழகத்தில் இல்லாமையால் வரிப் பணத்தை அறவிட்டுக் கொள்வதற்காக அறிவிக்கப் பட்டுள்ளது. |

| | |
|---|---|
| **7. முறைமைகளும் பாலனங்களும்**<br>கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் பாலனக் குறைபாடுகள் இடைக்கிடை பல்கலைக்கழகத் துணை வேந்தரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. பின்வரும் பாலனப் பரப்புகள் மீது விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும். | இங்கு குறிப்பிடப்பட்டுள்ள முறைமைகள் மற்றும் பாலனப் பரப்புகளிலுள்ள குறைபாடுகளை சரி செய்வதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. |

| முறைமைகளும் பாலனப் பரப்புகளும் | அவதானிப்புகள் |
|---|---|
| (அ) நிலையான சொத்துக்கள் முகாமைத்துவம் | நிலையான சொத்துக்களின் ஆவணங்கள் இற்றைப்படுத்தப்படாமை |
| (ஆ) நடவடிக்கைகள் பாலனம் | (i) சரியான தரத்தினையுடைய தன்னியக்க கணினி முறைமை ஒன்றின் அவசியப்பாட்டினை வலியுறுத்துதல்.<br>(ii) அறவிடப்பட்ட வேண்டிய கட்டணங்களை தாமதமின்றி அறவிட்டுக் கொள்வதற்காக போதியளவு நடவடிக்கைகள் எடுக்கப்படாமை. |
| (இ) பணிக்குழு நிர்வாகம் | ஆட்சேர்ப்பு முறையாக மேற்கொள்ளப்படாமை. |
| (ஈ) சுய நிதிக் கற்கை நெறி முகாமைத்துவம் | மேலதிகப் பணத்தை சரியான முறையில் கையாளாமையும் கணக்கீட்டுக் குறைபாடுகளும் |

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் 34 2017 ஆண்டறிக்கை

| | | |
|---|---|---|
| (உ) ஆய்வுதவி பற்றிய உள்ளகப் பாலனம் | ஆய்வுதவிப் பயன்பாடு பற்றி பின்னூட்டல் மேற்கொள்ளப்படாமையும் முன்னேற்றப் பரிசோதனை மேற்கொள்ளப்படாமையும். | |
| (ஊ) நிதி பாலனம் | (i) பணம் கிடைக்கப் பெறுதல் தொடர்பான கால நிர்ணயத்தை சரியாக அடையாளம் காணாமை.<br>(ii) பணப் புத்தகத்தில் குறை மீதி நிலவுதல். | |
| எ. பெறுகைச் செயன்முறை | பெறுகைத் திட்டத்தின் பிரகாரம் பெறுகைகளை மேற்கொள்ளாமை மற்றும் ஒப்பந்தங்களுக்கு வருவதில் குறைபாடுகள் நிலவுதல். | |
| துணை வேந்தர் | | |